



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:263 | 08-04-2026 | புதன்கிழமை | Free E- Paper | ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

08.04.2026 பங்குனி 25
புதன் கிழமை

சூரிய உதயம் 6.07

திதி:
இன்று மாலை 5.48 வரை சஷ்டி பின்பு சப்தமி

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 5.04 வரை கேட்டை பின்பு மூலம்

யோகம் :
இன்று மாலை 3.56 வரீயான் பின்பு பரீகம்.

கரணம்
இன்று அதிகாலை 4.26 வரை கரசை பின்பு மாலை 5.48 வரை வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம் :
இன்று அதிகாலை 4.54 வரை சித்த யோகம் பின்பு காலை 6.04 வரை அமிர்த யோகம் பின்பு யோகம் சரியில்லை

சந்திராஷ்டமம் :
இன்று அதிகாலை 4.54 வரை பரணி பின்பு கார்த்திகை

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30.

எமகண்டம்
காலை 7.30 – 9.00.

குளிகை
காலை 10.30 – 12.00.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## ஏப். 9ல் புதுவை ஜிப்மர் மருத்துவமனை இயங்காது என அறிவிப்பு!

**புதுச்சேரி, ஏப்.8:**

புதுச்சேரி தேர்தலையொட்டி வருகிற ஏப். 9 ஆம் தேதி(வியாழக்கிழமை) வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது என புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை அறிவித்துள்ளது.

புதுச்சேரியில் வரும் ஏப். 9 ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளதையடுத்து அன்று அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அன்றைய தினம் ஜிப்மர் மருத்துவமனை இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"சட்டப்பேரவைத் தேர்தல் 2026 - வாக்குப் பதிவு நாளை முன்னிட்டு 09.04.2026 (வியாழக்கிழமை) அரசு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது. எனவே இந்த தேதியில் நோயாளிகள் வெளிப்புற சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எனினும் அவசரப் பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 2026

# ஸ்டாலின், இபிஎஸ், சீமான், விஜய் மனுக்கள் ஏற்பு



**சென்னை, ஏப்.8:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக ஏப்.23-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த மார்ச் 30-ம் தேதி தொடங்கியது. முதல் நாளில் முதல்வர் ஸ்டாலின், தவெக தலைவர் விஜய், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

அதன்பின்னர், 4 பொது விடுமுறை நாட்களில் மனு தாக்கல் நடைபெறவில்லை. இந்நிலையில், வேட்புமனு தாக்கல் செய்ய நேற்று கடைசி நாள் என்பதால், அனைத்து தொகுதிகளிலும் காலை முதலே மனு தாக்கல் களை கட்டியது. எடப்பாடியில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, விருத்தாசலத்தில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆகியோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

இந்நிலையில், சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று தொடங்கியிருக்கும் நிலையில், கொளத்தூர் தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலினின் வேட்பு மனு ஏற்கப்பட்டது. இத்தொகுதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நான்காவது முறையாக போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தவிர, பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் தவெக தலைவர் விஜய்யின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

அதேபோல், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிடும் துணை முதல்வர் உதயநிதி, சாத்தூரில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், தருமபுரியில் சவுமியா அன்புமணி, காரைக்குடியில் சீமான் ஆகியோரின் வேட்புமனுக்களும் ஏற்கப்பட்டுள்ளன.

சென்னை வில்லிவாக்கம் தொகுதியில் தவெக நிர்வாகி ஆதவ் அர்ஜுனாவின் வேட்புமனு நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மனைவியின் சொத்துவிவரம் குறித்த சந்தேகங்களால் நிறுத்திவைக்கப்பட்டதாக தகவல். தியாகராய நகரில், தவெக வேட்பாளர் என்.ஆனந்த் வேட்புமனு ஏற்கப்பட்டது.

**கே.என்.நேரு, அன்பில் மகேஸ் மனுக்கள் ஏற்பு:** திருச்சி மேற்கு தொகுதியில் திமுக அமைச்சர் கே.என்.நேரு, திருவெறும்பூரில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். இன்று நடைபெற்ற வேட்புமனு பரிசீலனையில் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் ஆகியோரின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதேபோல, திருச்சி மாவட்டத்தில் திமுக சார்பில் ஸ்ரீரங்கம் துரைராஜ், மணப்பாறை அப்துல் சமது, லால்குடி பாரிவள்ளல், மண்ணச்சநல்லூர் கதிரவன், முசிறி கருணைராஜா, துறையூர் காங்கிரஸ் வேட்பாளர் லெனின் பிரசாத் ஆகியோரின் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

திருச்சி மாவட்டத்தில் அதிமுக சார்பில் போட்டியிடும் கிழக்கு தொகுதி ராஜசேகரன், மேற்கு தொகுதி அமமுக வேட்பாளர் ராஜசேகரன், ஸ்ரீரங்கம் மனோகரன், திருவெறும்பூர் குமார், மணப்பாறை விஜயகுமார், லால்குடி லீமாரோஸ், மண்ணச்சநல்லூர் பரதன், முசிறி யோகநாதன், துறையூர் சரோஜா ஆகியோரின் வேட்புமனுக்களும் ஏற்கப்பட்டன.

மேலும், நாதக, தவெக கட்சிகளை சேர்ந்த அனைத்து வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வரும் சட்டப்பேரவை தேர்தலில் திருச்சி மாவட்டத்தில் 4 முனை போட்டி ஏற்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வருகிற 9-ந் தேதி வேட்புமனுக்களை திரும்பப் பெறலாம். மாற்று வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்தவர் நேரில் வந்தோ அல்லது அவரின் அங்கீகாரம் பெற்ற முகவர் மூலமாகவோ வேட்புமனுவை திரும்பப் பெறலாம். 9-ந் தேதி மதியத்துக்குள் வேட்பாளர் இறுதி பட்டியல் தயார் செய்யப்பட்டுவிடும்.

அன்று இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுவதுடன் அனைவருக்கும் சின்னமும் அறிவிக்கப்பட்டு விடும்.

வாக்காளர் துணைப் பட்டியல் நேற்று இறுதி செய்யப்பட்டுள்ளது. இன்று அச்சிடப்பட இருப்பதாக தேர்தல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். துணைப் பட்டியல் இணைந்த வாக்காளர் பட்டியல் விரைவில் வெளியாக உள்ளது.

## தமிழக தேர்தலை நடத்த ரூ.1,302 கோடி ஒதுக்கீடு: அர்ச்சனா பட்நாயக் தகவல்



தமிழக சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 23ஆம் தேதி வாக்குப்பதிவு அறிவிக்கப்பட்டுள்ளது. பதிவாகும் வாக்குகள் மே 4ஆம் தேதி எண்ணப்படவிருக்கும் நிலையில், தேர்தல் ஏற்பாடுகள் குறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்களிடம் இன்று விளக்கம் அளித்துள்ளார்.

அவர் தெரிவித்திருப்பதாவது, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை நடத்தி முடிக்க ரூ.1,302 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 5,938 பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ளன. அதுபோலவே, தமிழகம் முழுவதும் 3,302 பதற்றம் நிறைந்த இடங்கள் என்றும் அறியப்பட்டுள்ளது.

தமிழகத்தில், பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை ரூ.462 கோடி மதிப்புள்ள பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை நடத்தி முடிக்க ரூ.1,302 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 2021ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலை நடத்த ரூ.975 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. அதுபோலவே, 2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின்போது ரூ.1,009 கோடி ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தேர்தல் பணிகளுக்காக வரும் 13ஆம் தேதிக்குள் துணை ராணுவப் படையினர் தமிழகம் வருவார்கள். இதுவரை 85 வயதுக்கு மேற்பட்ட 2.5 லட்சம் பேர் தபால் வாக்காளர்களாகப் பதிவு செய்திருக்கிறார்கள் என்றும் அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

## ஏர் இந்தியா டிக்கெட் விலை ரூ.25 ஆயிரம் வரை உயரும் வாய்ப்பு!




**புதுடில்லி, ஏப்.8:**

விமானங்களுக்கான எரிபொருள் விலையை 25 சதவிகிதம் உயர்த்துவதாக மத்திய அரசு அறிவித்த நிலையில், விமான டிக்கெட்டில் உள்ள எரிபொருள் கூடுதல் கட்டணத்தை ஏர் இந்தியா உயர்த்தியிருக்கிறது.

ஈரான் மீதான போர் காரணமாக, உலகம் முழுவதும் விமானங்களுக்கான எரிபொருள்கள் விலை கடுமையாக உயர்ந்து வரும் நிலையில், ஏர் இந்தியா விமானங்களின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயணங்களுக்கான விலையில் எரிபொருள் கூடுதல் கட்டணம் உயர்த்தப்படுவதாக ஏர் இந்தியா அறிவித்துள்ளது.

இது பெரும்பலான பாதைகளில் ஏப்ரல் 8ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது. ஐரோப்பா, வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கான கட்டண உயர்வு ஏப். 10ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான எரிபொருள் விலையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, இந்தக் கட்டணமும் மாற்றம் செய்யப்படும் என்று ஏர் இந்தியா அறிவித்துள்ளது. மேலும், ஒரே மாதிரியான கட்டண உயர்வு என்று இல்லாமல், தொலைதூரத்துக்கு ஏற்ப கட்டணம் மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த கட்டண உயர்வானது 299 அமெரிக்க டாலர்கள் முதல் 899 டாலர்கள் வரை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டண உயர்வானது ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்களுக்கும் பொருந்தும்.

விமான எரிபொருல் விலை உயர்வால், விமான சேவை நிறுவனத்துக்கு ஏற்படும் இழப்பினை, இந்த எரிபொருள் கூடுதல் கட்டணம் நிவர்த்தி செய்துவிடாது என்றும், நஷ்டத்தின் ஒரு பகுதியாகவே இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, விமான டிக்கெட் முன்பதிவு செய்திருப்பவர்களுக்கு இந்த கட்டண உயர்வு பொருந்தாது. அதேவேளையில், முன்பதிவு செய்த டிக்கெட்டுக்கான தேதி போன்றவற்றை மாற்றும்போது கட்டண உயர்வை செலுத்த வேண்டியது இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சர்வதேச விமானங்களில் சார்க் நாடுகளுக்கான டிக்கெட் விலையில் ரூ.2,200ம், ஐரோப்பா, லண்டன் போன்ற நாடுகளுக்கான டிக்கெட் விலையில் ரூ.20 ஆயிரம் வரையிலும், வட அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கான டிக்கெட் கட்ணத்தில் ரூ.26 ஆயிரமும் கூடுதலாக செலுத்த நேரிடலாம் என்று கூறப்படுகிறது.




# கல்பாக்கம் அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு



**கல்பாக்கம், ஏப்.8:**

கல்பாக்கத்தில் உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட முன்மாதிரி வேக ஈனுலை, மாற்ற நிலையை அடைந்துள்ளதற்காக அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட, புதிய அணுமின் நிலையம் கடந்த 2004-ம் ஆண்டிலிருந்து பாவினி என்ற பெயரில் கட்டப்பட்டு வருகிறது. மேலும், கடந்த 2024-ம் ஆண்டு மார்ச் மாதம் பிரதமர் மோடி, மேற்கண்ட புதிய அணுமின் நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், தோரியத்திலிருந்து, நியூட்ரான் பிரிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இது படிப்படியாக முன்னேறி மின் உற்பத்தியை தொடங்கும் நிலையில் உள்ளது. இதுகுறித்து, பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பக்கத்தில், "இந்தியா தனது அணுசக்தி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுத்து, தனது அணுசக்தி பயணத்தில் ஒரு தீர்க்கமான அடியை எடுத்து வைத்துள்ளது. கல்பாக்கத்தில், உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட முன்மாதிரி வேக அணு உலை நிலை மாற்ற நிலையை எட்டியுள்ளது.

இந்த மேம்பட்ட அணு உலை, தனது அறிவியல் திறனின் ஆழத்தையும், நமது பொறியியல் முயற்சியின் வலிமையையும் பிரதிபலிக்கிறது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில், நமது பரந்த தோரியும் இருப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு தீர்க்கமான படியாகும். இந்தியாவுக்கு, இதுபெருமைக்குரிய தருணம். நமது விஞ்ஞானிகளுக்கும், பொறியாளர்களுக்கும் வாழ்த்துக்கள்" என தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.



## திருக்குறள் குறள்-583

**ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா**
**மன்னவன்கொற்றங் கொளக்கிடந்த தில்**



ஒற்றரால் (நாட்டு நிகழ்ச்சிகளை) அறிந்து அவற்றின் பயனை ஆராய்ந்துணராத அரசன் வெற்றிபெறத்தக்க வழி வேறு இல்லை.

## சிந்திக்க ஒரு நொடி



மன காயத்திற்கு
ஆறுதல் என்பது
தற்காலிக தீர்வு,
மாறுதல் என்பது
நிரந்தர தீர்வு, ஆறுதல்
தேடாதே
மாறுதல் தேடு
வாழ்க்கை வசந்தமாகும்

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## பங்குனி உத்திர திருக்கல்யாண உற்சவம் நிறைவு



**திருவண்ணாமலை ஏப்ரல்,08:**
அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் பங்குனி உத்திர திருக்கல்யாண உற்சவம் நிறைவு அண்ணாமலையார் மற்றும் உண்ணாமலை அம்மன் தாமரை குளத்தில் மகாதீபாரதனையும் நடைபெற்றது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தார்




**திருவண்ணாமலை, ஏப்.07:**
மாண்புமிகு அமைச்சர் எ. வ. வேலு அவர்கள் திருவண்ணாமலை வருவாய் கோட்ட அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு



**திருவண்ணாமலை ஏப்.08:**
மாநகராட்சியில் உள்ள வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு என்னும் மையத்தில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு.க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப. அவர்கள் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் முன்னேற்றம் குறித்தும், பாதுகாப்பு கட்டமைப்புகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சீர்காழி தொகுதியில் தமிழக வாழ்வுரிமை கட்சி வேட்பாளர் வேட்பு மனு தாக்கல்




**சீர்காழி, ஏப் , 08:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டமன்ற தொகுதியில் தமிழக வாழ்வுரிமை கட்சி வேட்பாளர் பெத்த பெருமாள் வேட்பு மனுவை சீர்காழி கோட்டாட்சியர் அலுவலகத்தில் தாக்கல் செய்தார்.

இவர்ஒய்வு பெற்ற ராணுவ வீரர். உடன் தமிழக வாழ்வுரிமை கட்சி தொகுதி செயலாளர் கி.ரமேஷ் , நகர செயலாளர், ஒன்றிய செயலாளர், இளைஞர்கள் நகர தலைவர், தொகுதி தலைவர், கட்சியினுடைய அனைத்து நிலை நிர்வாகிகளும் ஒன்றாக சேர்ந்து கலந்து கொண்டார்கள்.

## ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜே.ஜே.எபினேசர் பிரச்சாரம்




**சென்னை, ஏப்.08:**
நேற்று 07/04/2026, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக, ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஜே.ஜே. எபினேசர் அவர்கள் ஆர். கே.நகர், 47-வது வட்டத்தில் வாக்கு கேட்டு பிரச்சாரத்தை தொடங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி.மதாரம்மா கனி பாரூக் அவர்கள் வேட்பாளருடன் கலந்துகொண்டு வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் மாவட்ட தலைவர் T.V.துரைராஜ், சர்க்கிள் தலைவர் வால்டாக்ஸ் ரோடு J.ரமேஷ், கூடுதல் பொறுப்பாளர் S.பிரபாகரன் உட்பட ஆர். கே.நகர் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து நிலை காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

## வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புகள் குறித்து ஆய்வு



திருவண்ணாமலை ஏப். 08:
திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி மற்றும் போளூர் சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு. சதேந்திர சிங் இ.ஆ.பா. அவர்கள்,செய்யாறு மற்றும் வந்தவாசி (தனி) சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு. ராமகிருஷ்ணா சிந்துரி இ. ஆ. ப. அவர்கள் மற்றும் தேர்தல் காவல் பார்வையாளர் திரு. அவுலா ரமேஷ் ரெட்டி இ.கா.ப. அவர்கள் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு.க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் ஆகியோர் முன்னிலையில் ஆரணி தச்சூர் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ரெட் கிராஸ் சார்பில் உலக சுகாதார தினவிழா



**வந்தவாசி , ஏப் 08:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் உலக சுகாதார தினத்தையொட்டி ரெட் கிராஸ் சங்கம் சார்பில் 'உடல் நலமும் மன நலமும்' விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு நிலைய மருத்துவர் டாக்டர். கார்த்திகேயன் தலைமை தாங்கினார். ரெட் கிராஸ் சங்க செயலாளர் பா.சீனிவாசன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, ஓய்வு பெற்ற மாவட்ட மருத்துவ இணை இயக்குனர் டாக்டர் எஸ்.குமார் பங்கேற்று, உடல் நலமும் மனநலமும் பற்றிய விழிப்புணர்வு கருத்துரைகளை வழங்கினார். மேலும் நாம் கடைபிடிக்க வேண்டிய சுகாதார செயல்பாடுகள் பற்றிய தகவல்களை விளக்கினார். நிகழ்வில் 30 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ரெட் கிராஸ் சங்க உறுப்பினர்கள் பெ.பார்த்திபன், பிடிஜி ஆறுமுகம், கு.சதானந்தன், ஜி.விநாயகமூர்த்தி, க.வாசு, மலர் சாதிக், ரயில்வே சு.தனசேகரன், கேப்டன் பிரபாகரன், என். பி.ராமு, மனோஜ் குமார் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் சுகாதார நிலைய முதன்மை செவிலியர் ஸ்டெல்லா மேரி நன்றி கூறினார்.

**பா.சீனிவாசன், வந்தவாசி.**

## திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் திரு.L.சுந்தரராஜ் வாக்கு கேட்டு பிரச்சாரம்



**சென்னை, ஏப்.08:**
நேற்று 07/04/2026, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பாக, திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் திரு.L.சுந்தரராஜ் அவர்கள் திருவொற்றியூர் மணலி பகுதி, 22-வது வட்டத்தில் மாநில பொதுக்குழு உறுப்பினரும், மாமன்ற உறுப்பினருமான திரு.A.தீர்த்தி MC அவர்கள் ஏற்பாட்டில் வாக்கு கேட்டு பிரச்சாரத்தை தொடங்கினார். இந்நிகழ்ச்சியில் வடசென்னை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருமதி. மதாரம்மா கனி பாரூக் அவர்கள் வேட்பாளருடன் கலந்துகொண்டு வீதி வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் திருவொற்றியூர் மணலி பகுதிக்கு உட்பட்ட அனைத்து நிலை காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் ஏராளமானோர் இருசக்கர வாகனங்களில் பேரணியாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

## திமுக வேட்பாளர் கு.பிச்சாண்டி வேட்புமனு தாக்கல் செய்தார்




**திருவண்ணாமலை, ஏப்.07:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கு.பிச்சாண்டி அவர்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு மாநில கொள்கை பரப்பு செயலாளர் இரும்பொறை சேதுராமன் மனு தாக்கல்



**மதுரை, ஏப்.08:**
மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு மாநில கொள்கை பரப்பு செயலாளர் இரும்பொறை சேதுராமன் அவர்கள் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அவருடன் மேற்கு மாவட்ட செயலாளர் விஜயகுமார் கிழக்கு ஒன்றிய செயலாளர்கள் சரவணன் சுதாகர் மேற்கு ஒன்றிய செயலாளர் லோகநாதன் திருப்புவனம் ஒன்றிய செயலாளர் ஜெயமணி கிழக்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் பாரதிராஜா மற்றும் மதுரை மாநகர் மாவட்டத்தை சேர்ந்த ஆவணியாபுரம் வழக்கறிஞர் அன்பரசன் பிரபு கூத்தியார் குண்டு முத்துசாமி தர்மர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## திமுகவை வீட்டுக்கு அனுப்பவே இந்த தேர்தலில் களம் காண்கிறோம்: சசிகலா பேச்சு



**வாடிப்பட்டி, ஏப்.08:**
மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பஸ் நிலையத்தில் சோழவந்தான் தொகுதி புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளர் சமயநல்லூர் டாக்டர் பாலமுருகனை ஆதரித்து கட்சி நிறுவன தலைவர் பொதுச் செயலாளர் சசிகலா தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

தமிழ்நாட்டில் மக்கள் வாழ்வில் ஒளி ஏற்றிட மன்னர் ஆட்சி திமுக வை வீட்டுக்கு அனுப்ப இந்த தேர்தலில் களம் காண்கிறோம்.

இது மக்களுக்கான இயக்கமாக என்றும் இருக்கும். எம்ஜிஆரும் ஜெயலலிதாவும் முதல்வராக இருந்தபோது ஏழை எளிய மக்களுக்காக ஆடு, மாடு மணிக்கணினி சீருடை என்று ஏராளமான திட்டங்கள் செய்தார்கள் அதற்கெல்லாம் அவர்கள் கடன் வாங்கவில்லை.

ஆனால் திமுக இன்று எதுவும் செய்யாமல் ரூ12 லட்சம் கோடி கடன் வாங்கி உள்ளது. தி.மு.க 2021 தேர்தல் அறிக்கையில் சொல்லி எதுவும் நிறைவேற்றப்படவில்லை. விவசாயிகளுக்கு மின் மோட்டார் வாங்க மானியம் தருவதாக கூறியதை தரவில்லை.

கூட்டுறவு மானியம் தருவதாக கூறி அதுவும் செய்யவில்லை. எல்லா மாவட்டத்திலும் உயர் மட்ட பாலம் கட்டித் தருவதாக கூறி அதுவும் கட்டவில்லை. நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ 2,500 உயர்த்தி தருவதாக கூறி கொடுக்கவில்லை. நீர்நிலைகளை சீரமைத்து பாசன வசதிக்கு கால்வாய் வெட்டி தருவதாக கூறி அதுவும் செய்யவில்லை. ஆனால் தற்போது சொத்து வரி வீட்டு வரியை அதிகமாக்கி விட்டார்கள். மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்தவர்கள் தற்போது 2000 தருவதாக கூறுகிறார்கள் இது சாத்தியமாகுமா.

இது எல்லாம் ஒவ்வொரு வாக்காளர்களின் தலையில் தான் கடனாக விழுகிறது.திமுக ஆட்சியில் குடிதண்ணீரில் கழிவு நீர் கலக்கிறது . ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை. கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தவில்லை. நான் யாரையும் நம்பவில்லை தமிழ்நாட்டு மக்களை நம்பி உள்ளேன். நான் ஜெயலலிதாவுடன் இருந்த போது மக்களுக்காக என்ன செய்ய வேண்டும் என்பதை சிந்தித்துக் கொண்டே தான் இருப்பேன்.

அதைப்பற்றி தான் இருவரும் பேசுவோம். நிச்சயமாக நமக்கு நல்ல எதிர்காலம் உள்ளது. மக்களோடு இருக்கும் வேட்பாளருக்கு தான் வாய்ப்பு கொடுத்துள்ளேன். யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிக் கொள்ளுங்கள் அது அவர்கள் பணம் இல்ல.

இதிலிருந்து மீண்டு வர தென்னை மர சின்னத்திற்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள். இதை கட்டாயம் செய்வீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இவர் அவர் பேசினார்.

# தேர்தல் கொண்டாட்டம் 2026



## தேர்தல் களப்பணியில்...

### தேர்தல் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றும் ஒரே கட்சி திமுக: கனிமொழி எம்.பி.

சென்னை மதுரவாயல் தொகுதி திமுக வேட்பாளர் காரம்பாக்கம் கணபதியை ஆதரித்து முகப்பேர் பகுதியில் கனிமொழி எம்.பி. திங்கள்கிழமை பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

அதிமுக அறிவிக்கும் தேர்தல் வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றியதில்லை. ஆனால், முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த தேர்தலின்போது கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியிருக்கிறார்.

தேர்தல் வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றும் ஒரே கட்சி திமுக தான். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முதல்வர் ஸ்டாலின் கவனம் செலுத்தி வருகிறார். தேர்தல் வாக்குறுதிகளில் இடம்பெற்றவை மட்டுமன்றி, பல புதிய திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

ஆகவே, பேரவைத் தேர்தலில் திமுக வெற்றி பெறுவது உறுதி. இந்த முறையும் தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றார்.

தொடர்ந்து, அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அம்பத்தூர் தொகுதி திமுக வேட்பாளர் அ.பு.பூர்ணிமா, செங்குன்றம் கடைவீதியில் மாதவரம் தொகுதி திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனம், திருவொற்றியூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் எல்.சுந்தரராஜன், திரு.வி.க. நகரில் திமுக வேட்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் ஆகியோரை ஆதரித்து கனிமொழி பிரசாரம் மேற்கொண்டார்.

### எடப்பாடி பழனிசாமி சொத்து மதிப்பு என்ன? - வேட்புமனுவில் தகவல்

மேட்டூர்: அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான பழனிசாமிக்கு கடந்த ஆண்டு ரூ.11.07 லட்சம் வருமானம் காட்டியுள்ளார். மேலும், அசையும் சொத்துகள் ரூ.50.86 லட்சம், கடனாக ரூ.17 லட்சம் இருப்பதாக பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளார்.

எடப்பாடி சட்டப்பேரவை தொகுதியில் போட்டியிடும் பழனிசாமி, வேட்புமனுத் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் தெரிவித்துள்ளதாவது: பழனிசாமி தனது கையிருப்பில் ரூ.50,000, மனைவி ராதா கையிருப்பில் ரூ.1,00,000 இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அதேபோல், தன்னிடம் 100 கிராம் தங்க நகைகள், மனைவி ராதாவிடம் 720 கிராம் தங்க நகைகள் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். மொத்தமாக அசையும் சொத்துகளாக பழனிசாமியிடம் ரூ 50.86 லட்சமும், அவரது மனைவிடம் ரூ 2.16 கோடியும் உள்ளன.

பழனிசாமி பெயரில் எந்தவித அசையா சொத்துகளும் இல்லை, வாகனங்களும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரது மனைவி பெயரில் ரூ.3.45 கோடி அசையா சொத்துகள் உள்ளன. மொத்தமாக பழனிசாமி பெயரில் பழனிசாமியிடம் ரூ.50.86 லட்சம் அசையும் சொத்துகள் உள்ளன. மேலும், அவருக்கு ரூ.17 லட்சம் கடன் உள்ளது எனவும், அவரது பெயரில் 5 குற்றவியல் வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

இதனிடையே, கடந்த 2024-25-ம் ஆண்டு வருமானமாக பழனிசாமிக்கு ரூ.11.07 லட்சம் எனவும், அவரது மனைவிக்கு ரூ.12.25 லட்சம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரமாண பத்திரத்தில், அவரது மகன் பெயர் மற்றும் சொத்து விவரங்கள் இடம் பெறவில்லை.

### திமுகவுக்கு தோல்வி பயம்: டிடிவி தினகரன்



சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் அமமுக சார்பில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் ஜி.செந்தமிழனை ஆதரித்து அவர் திங்கள்கிழமை பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

கடந்த தேர்தலின்போது, அரசு ஊழியர்களுக்கு கொடுத்த பெரும்பாலான வாக்குறுதிகளை திமுக நிறைவேற்றவில்லை. இதனால், கடந்த 5 ஆண்டுகளாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்துத் துறையினர் போராட்டங்களை நடத்தினர். ஆனாலும், இதுவரை பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணி காரணமாக போலி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதனால், திமுகவுக்கு தோல்வி பயம் ஏற்பட்டிருக்கிறது. தேர்தல் பிரசாரங்களில் முதல்வர் ஸ்டாலினின் பேச்சுகளில் இருந்தே இதை அறிந்து கொள்ள முடியும். தமிழகத்தில் சட்டம் -ஒழுங்கு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. போதைப் பொருள்களின் புழக்கம் அதிகரித்து, மாணவர்கள், இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது.

## வேட்புமனுக்கள் ஏற்பு, நிறுத்திவைப்பு.. பரிசீலனையின் போது பரபரப்பு

234 தொகுதிகளுக்கான தமிழக சட்டமன்ற தேர்தல் வருகிற 23-ந்தேதி நடைபெறவுள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகளின் எண்ணிக்கை அடுத்த மாதம் (மே) 4-ந்தேதி நடைபெற உள்ளது. அதற்குமுன்பாக வேட்பாளரை இறுதி செய்யும் நடவடிக்கையாக வேட்புமனு தாக்கல் கடந்த மாதம் 30-ந்தேதி தொடங்கியது.

முதல்நாளில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் (கொளத்தூர்), த.வெ.க. தலைவர் விஜய் (பெரம்பூர்), நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் (காரைக்குடி) ஆகியோர் தங்களது வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர். இதேபோல் மற்ற வேட்பாளர்களும் மனு தாக்கல் செய்தனர். இந்த தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் நேற்றுடன் முடிவடைந்தது. இந்த நிலையில் 7,600-க்கும் மேற்பட்டோர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது. நேற்றைய தினம் வேட்புமனுவுக்கு கடைசி நாள் என்பதால் ஏராளமானோர்



வேட்புமனு தாக்கல் செய்தனர்.

இந்த நிலையில் இன்று காலை 11 மணிக்கு வேட்புமனு மீதான பரிசீலனை தொடங்கியது. வரும் 9ம் தேதி வேட்புமனுக்களை திரும்ப பெறலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை தொடங்கியநிலையில், அதில் தவெக தலைவர் விஜய் (பெரம்பூர், திருச்சி கிழக்கு), முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, துணை முதல்அமைச்சர் உதயநிதி, விருதுநகர் தொகுதி விஜயபிரபாகரன், இதேபோல செந்தில் பாலாஜி, தமிழிசை சவுந்திரராஜன், முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், செல்லூர் ராஜு, ஆர்.பி. உதயகுமார், எம்.சி. சம்பத், கே.பி. அன்பழகன், வானதி சீனிவாசன், செல்வப்பெருந்தகை, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, சேகர்பாபு, கே.என். நேரு, ராஜகண்ணப்பன் மற்றும் சீமான், பிரேமலதா விஜயகாந்த், பொற்கொடி ஆம்ஸ்ட்ராங், புஸ்ஸி ஆனந்த், தவெக பொருளாளர் வெங்கட்ரமணன், திலகபாமா, முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோரின் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன.

மதுரை மேலூர் தொகுதியில் காங்கிரஸ் நிர்வாகிகளின் எதிர்ப்பு மீறி காங்கிரஸ் வேட்பாளர் விஸ்வநாதன் மனு ஏற்கப்பட்டுள்ளது.

இதனிடையே விஜய்யின் மனுவுக்கு பாமக உள்ளிட்ட வேட்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். விஜய் இரண்டாவது முறையாக பிரமாண பத்திரம் தாக்கல் செய்த போது சொத்து வரி கட்டவில்லை என்பதை குறிப்பிடவில்லை என்று கூறி வேட்புமனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்என கோரிக்கை கவிடுத்தனர். பின்னர் பரிசீலனைக்குப்பிறகு விஜய்யின் வேட்புமனு ஏற்பட்டது.

இந்த சூழலில் வில்லிவாக்கம் தொகுதியில் ஆதவ் அர்ஜுனாவின் வேட்புமனு நிறுத்தி வைக்கப்பட்டது. அவரது மனுவை ஏற்கக் கூடாது என சுயேச்சை வேட்பாளர்கள் தேவராஜன், முரளி வினோத் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்தனர். அதாவது பிரமாணபத்திரத்தில் ஆதவ் மனைவியின் பெயரில் உள்ள 37 நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிடவில்லை என்றும், வருமான வரிக் கணக்கில் காட்டாமல் ஆதவ்விடம் ரூ 1 கோடி இருப்பதாகவும், ஆதவ் அர்ஜுனாவின் வைப்பு நிதியில் உள்ள ரூ.2 கோடிக்கு ரூ.84 லட்சம் வரை வட்டி வருவதை, அவர் வேட்புமனுவில் குறிப்பிடவில்லை என்றும் 14 கோடி வருமானத்தை ஆதவ் மறைத்துள்ளார் என்றும், 1.69 கோடி ரொக்கமாக வைத்துள்ளார் என்றும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதனால் தேர்தல் கண்காணிப்பாளர் விக்ரம் குமார் சிங் வரும் வரை காத்திருக்குமாறு கூறி ஆதவ் அர்ஜுனாவின் வேட்புமனுவை தேர்தல் அலுவலர்கள் நிறுத்தி வைத்தனர். பின்னர் நடந்த பரிசீலனைக்குப்பின், அவரது வேட்புமனு ஏற்கப்பட்டது.

* ஆர்.கே.நகர் த.வெ.க. வேட்பாளர் மரிய வில்சன், மயிலாப்பூர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பாலு, விளவங்கோடு காங்கிரஸ் வேட்பாளர் பிரவீன் உள்ளிட்டோரின் வேட்புமனுக்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

* கல்வித்தகுதி புகாரை தொடர்ந்து திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அனிதா ராதாகிருஷ்ணனின் வேட்புமனு நிறுத்தி வைக்கப்பட்டநிலையில், தற்போது அது ஏற்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு ஜெயிக்கணும்னா எடப்பாடியார் ஆளணும் - அதிமுக தேர்தல் பிரசார பாடல் வெளியீடு



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23-ந்தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் களத்தில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றிக் கழகம் என 4 முனை போட்டி நிலவுகிறது. தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் வீதி வீதியாக சென்று தீவிர வாக்கு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஆதரித்து அந்தந்த கட்சி தலைவர்களும், முக்கிய நிர்வாகிகளும் சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியும், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து சூறாவளி தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். நேற்று அவர் தான் போட்டியிடும் சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதியில் மனு தாக்கல் செய்தார்.

இந்த நிலையில் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு அதிமுகவின் தேர்தல் பிரசார பாடல் இன்று வெளியிடப்பட்டுள்ளது. 'தமிழ்நாடு ஜெயிக்கணும்னா எடப்பாடியார் ஆளணும்' என்ற முழக்கத்தை முன்னிறுத்தி இந்த பாடல் வெளியிடப்பட்டுள்ளது.

"ஏழைகள் சிரிக்கணும்னா இரட்டை இலை ஆளணும்; தமிழ்நாடு ஜெயிக்கணும்னா எடப்பாடியார் ஆளணும்" உள்ளிட்ட வரிகள் இந்த பாடலில் இடம்பெற்றுள்ளன.

## திமுகவுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்பது பல ஆண்டுகளாக நினைத்த விஷயம்: பிரேமலதா

விருத்தாசலத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நிருபர்களிடம் கூறியதாவது:-

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், விருத்தாசலம் தொகுதியில் முதல்முறையாக போட்டியிட்டு வெற்றிபெற்றார். அதுபோல் உயிரிலும், மூச்சிலும், எங்கள் உள்ளத்திலும் நிலைத்திருக்ககூடியது விருத்தாசலம் தொகுதி. இந்த முறை நிச்சயமாக விருத்தாசலம் தொகுதியில் வெற்றிபெற்று தொகுதிக்கும். தொகுதி மக்களுக்கும் விஜயகாந்த் விட்டுச்சென்ற எல்லா பணிகளையும் செய்வேன்.

தி.மு.க. ஆட்சி மீண்டும் மலர்ந்ததும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினிடம், விருத்தாசலத்தை தனி மாவட்டமாக அறிவிக்க முதல் கோரிக்கையாக வைப்பேன். இங்கு இருக்கக்கூடிய மக்கள் வேறு, நாங்கள் வேறு அல்ல. நானும், விஜயகாந்த்தும் போகாத ஊர்கள் இல்லை. 20 ஆண்டுகள் கழித்து மீண்டும் வரலாறு திரும்புகிறது.

2006-ல் விஜயகாந்த் வெற்றிபெற்று எப்படி இந்த தொகுதியை முன்மாதிரி தொகுதியாக கொண்டு வந்தாரோ நாங்களும் இந்த



முறை கண்டிப்பாக உழைத்து விருத்தாசலத்தை மிகச் சிறந்த தொகுதியாக கொண்டு வருவேன். நிறைய திட்டங்கள் வைத்துள்ளேன். தி.மு.க.வுடன் தே.மு.தி.க. கூட்டணி அமைக்க வேண்டும் என்பது பல ஆண்டுகளாக நினைத்த ஒரு விஷயம். விஜயகாந்த்தும், கருணாநிதியும் இருக்கும் போதே நடக்க வேண்டியது. தாமதமாக இப்போது நடந்துள்ளது. ஏன் இவ்வளவு நாள் இந்தக் கூட்டணி அமையவில்லை என கவலைபடுகிறேன்.. இப்போதான் வழி பிறந்திருக்கிறது. இது மக்கள் விரும்பும் கூட்டணி. மே மாதம் 4-ந் தேதி வரக்கூடிய தேர்தல் முடிவு மிகப்பெரிய வெற்றியைத் தரும். நல்லதையே நினைப்போம், வெற்றியை அடைவோம். இவ்வாறு அவர் கூறினார்.

## திண்டுக்கல் சீனிவாசன் உட்பட 5 பேர் மீது வழக்குப்பதிவு

தமிழக சட்டமன்ற தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் என்பதால், அரசியல் கட்சியினர், சுயேச்சைகள் என அனைவரும் போட்டிப்போட்டு வேட்புமனு தாக்கல் செய்தனர். இந்நிலையில் திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் இ.பெ.செந்தில்குமார் நேற்று, 4 பேருடன் திண்டுக்கல் ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்கு வந்தார். பின்னர் ஆர்.டி.ஓ. பழனிவேலிடம் வேட்புமனு தாக்கல் செய்து கொண்டிருந்தார்.

இ.பெ.செந்தில்குமாருக்கு மட்டும் 4 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. எனவே வேட்பு மனுக்களை சரிபார்ப்பதற்கு தேர்தல் அலுவலர்களுக்கு கூடுதல் நேரம் தேவைப்பட்டது. இதற்கிடையே ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்கு வந்த அ.தி.மு.க. வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சீனிவாசன், நுழைவு வாயிலில்





காத்திருந்தார். ஆனால் நீண்ட நேரம் ஆகியும் உள்ளே இருப்பவர்கள் வெளியே வரவில்லை. இதையடுத்து முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், 4 பேருடன் ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்குள் சென்றார். இதை பார்த்த தேர்தல் அலுவலர்கள் ஒரே நேரத்தில் தி.மு.க., அ.தி.மு.க. வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்ய வந்துவிட்டனரே என நினைத்தனர். பின்னர் இ.பெ.செந்தில்குமாரின் வேட்புமனுக்களை அலுவலர்கள் வேகமாக சரிபார்த்து ஏற்றனர். அதன்பிறகு முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் வேட்புமனு தாக்கல் செய்தார். இதனால் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இதற்கிடையே வேட்பு மனு தாக்கல் செய்யும் போது அத்துமீறி உள்ளே நுழைந்து தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி அரசு அதிகாரிகள் மற்றும் போலீசாரை பணி செய்ய விடாமல் தடுத்ததாக கூறி முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் எம்.எல்.ஏ. உள்பட 5 பேர் மீது திண்டுக்கல் வடக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

## தமிழ்நாட்டில் போட்டியிடும் ரூ. 1,000 கோடி சொத்துள்ள பணக்கார வேட்பாளர்

தமிழ்நாட்டில் போட்டியிடும் ரூ. 1,000 கோடி சொத்துள்ள பணக்கார வேட்பாளர் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதுச்சேரி யூனியன் பிரதேசம், தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்கம், அஸ்ஸாம் உள்ளிட்ட மாநிலங்களுக்கான தேர்தல் தேதி கடந்த மார்ச் 15 ஆம் தேதி அறிவிக்கப்பட்டு தேர்தலுக்கான வேலைகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டுக்கு ஏப். 23 ஆம் தேதி அதற்கு இரண்டு வாரங்கள் முன்னதாக ஏப். 9 ஆம் தேதி புதுச்சேரிக்கும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தமிழ்நாட்டில் திமுக தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, அதிமுக தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியும், தவெக, நாம் தமிழர் கட்சி தனித்தும் போட்டியிடுகின்றன.

தேர்தல் பத்திரங்கள் மூலம் சர்ச்சையில் சிக்கிய லாட்டரி அதிபர் மார்ட்டினின் மனைவி



லீமா ரோஸ் மற்றும் மகன் ஜோஸ் சார்லஸ் இவரும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தமிழகம் மற்றும் புதுவையிலும், மார்ட்டினின் மருமகன் ஆதவ் அர்ஜுனா தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் களமிறங்கியுள்ளனர்.

தேர்தல் பத்திரங்கள் மூலமாக லாட்டரி மார்ட்டின் நிறுவனம், திமுகவுக்கு சுமார் ரூ. 509 கோடியையும், திரிணமூல் காங்கிரஸுக்கு ரூ. 542 கோடியையும், பாஜகவுக்கு ரூ. 100 கோடியையும் நன்கொடையாக வழங்கி பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியிருந்தது.

மார்ட்டினின் மனைவி லீமா ரோஸ், தனது மகனின் லட்சிய ஜனநாயக கட்சியில் இணைந்து, பின்னர், கடந்த பிப்ரவரி 9-ஆம் தேதி அக்கட்சியில் இருந்து விலகி, பிப். 17 ஆம் தேதி எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார். கட்சியில் சேர்ந்த சில நாள்களிலேயே அவருக்கு மகளிர் அணி இணைச் செயலாளர் பதவி வழங்கப்பட்டது.

## விஜய்யின் பிரசாரத்திற்கு மட்டும் 51 நிபந்தனைகள்: செங்கோட்டையன் குற்றச்சாட்டு

**சென்னை, ஏப்.8:**

தவெக தலைவர் விஜய்யின் பிரசாரத்திற்கு மட்டும் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்படுவதாக தவெக நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் குற்றம்சாட்டியுள்ளார்.

நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 22 சட்டப்பேரவைத் தொகுதி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், வாக்கு சேகரிக்க உள்ளார். இதற்காக (புதன்கிழமை) நெல்லை மாவட்டத்தில் உள்ள கங்கைகொண்டான், மாநகர பகுதியில் உள்ள ராஜகோபாலபுரம் ஆகிய இரண்டு இடங்களில் பிரசாரம் செய்யவுள்ளார்.

இதுபற்றிசெய்தியாளர்களுடன்பேசிய தவெக மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன், "சென்னை தவிர மற்ற இடங்களில் விஜய்யின் பிரசாரம் வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கிறது. பல்வேறு இடங்களில் விஜய் பிரசாரம் செய்ய தடைகள் உள்ளன. நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிரசாரம் செய்து வருகிறோம்.

நெல்லையில் விஜய் பிரசாரம் செய்ய 51 நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்பட்டு பொதுக்கூட்டம் நடத்தப்படும். விஜய் பரப்புரைக்கு மட்டும் கடுமையான விதிமுறைகள் விதிக்கப்படுகிறது.

234 தொகுதிகளிலும் வெற்றி வாய்ப்பு இருக்கிறது. புதிய மாற்றம் வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். திரைத்துறையை விட்டு மக்களுக்காக அரசியலுக்கு வந்திருக்கிறார். விஜய் இந்த நாட்டை ஆள வேண்டும் என்பதுதான் மக்களின் ஆசை" என்று பேசினார்.

## தமிழகத்தில் ஏப். 10 வரை மழைக்கு வாய்ப்பு!

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் ஏப். 10-ஆம் தேதி வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் சார்பில் திங்கள்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தெலங்கானா மற்றும் அதையொட்டிய பகுதிகள் முதல் மன்னார் வளைகுடா வரை ராயலசீமா, தமிழகம் வழியாக காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக செவ்வாய்க்கிழமை (ஏப். 7) முதல் ஏப்.10 வரை தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் ஏப்.11, 12 ஆகிய தேதிகளில் மிதமான மழையும், டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புகர் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி- மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

## திருவண்ணாமலையில் பங்குனி உத்திரம் விழா... தாமரை குளத்தில் பாலிகை விடும் நிகழ்வு

**திருவண்ணாமலை, ஏப்.8:**

நினைத்தாலே முக்தி தரும் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் இக்கோவிலில் கடந்த 1-ந் தேதி பங்குனி உத்திரம் மற்றும் திருக்கல்யாண உற்சவம் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவையொட்டி கோவிலில் பஞ்ச மூர்த்திகளுக்கு சிறப்பு அபிஷேம் மற்றும் அலங்காரம் செய்யப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

பின்னர் அன்று இரவு கோவில் கொடிமரம் முன்பு அருணாசலேஸ்வரரும், உண்ணாமலை அம்மனும் மாலை மாற்றும் வைபவம் நடந்தது. தொடர்ந்து திருக்கல்யாண மண்டபத்தில் சுவாமி திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. 2-ந் தேதி இரவு கீழ்நாத்தூரில் மருவுண்ணல் மண்டகபடி நிகழ்ச்சி நடந்தது.



இதனை தொடர்ந்து கடந்த 3-ந் தேதி முதல் நேற்று முன்தினம் வரை தொடர்ந்து 3 நாட்கள் நலங்கு உற்சவம், திருக்கல்யாண மண்டபத்தில் ஹோமமும், இரவு ஊஞ்சல் உற்சவமும் நடந்தது.

சிறப்பு அலங்காரத்தில் உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரர் மற்றும் பராசக்தி அம்மன்

அதைதொடர்ந்து விழா நிறைவாக நேற்று மதியம் சுமார் 12 மணியளவில் தாமரை குளத்தில் பாலிகை விடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதையொட்டி உண்ணாமலை அம்மன் சமேத அருணாசலேஸ்வரரும், பராசக்தி அம்மனும் சிறப்பு அலங்கரத்தில் கோவிலில் எழுந்தருளி பின்னர் அங்கிருந்து மங்கல வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக சென்று தாமரை குளத்தில் எழுந்தருளினர். பின்னர் திருக்கல்யாணத்தின்போது வைக்கப்பட்ட முளைத்த நவதானியங்களை குளக்கரையில் புனித நீர் நிரப்பப்பட்ட தொட்டியில் கரைத்து குளத்தில் விட்டனர்.

தொடர்ந்து தாமரை குளம் ராஜா மண்டபத்தில் சுவாமிக்கும், அம்மனுக்கும் சிறப்பு பூஜை நடந்தது. மாலையில் அங்கிருந்து கோவிலுக்கு சுவாமி புறப்பாடு நடைபெற்றது. தொடர்ந்து குமரக்கோவிலில் மண்டகப்படி நிகழ்ச்சி நடைபெற்றது.

## காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவிலில் பல்லவ உற்சவம்

**காஞ்சிபுரம், ஏப்.8:**

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோவிலில் கோடை காலம் தொடங்குவதை குறிக்கும் வகையில் பல்லவ உற்சவம் நேற்று தொடங்கியது. வருகிற 12-ந்தேதி வரை 7 நாட்கள் இந்த உற்சவம் நடைபெறுகிறது.

பல்லவஉற்சவத்தையொட்டி அனந்தசரஸ் திருக்குளம் அருகே உள்ள நூற்றுக்கால் மண்டபத்திற்கு, ஸ்ரீதேவி பூதேவியுடன் வரதராஜ பெருமாளை எழுந்தருளச் செய்து சிறப்பு திருமஞ்சனங்கள் நடத்தப்பட்டன. தொடர்ந்து சிறப்பு அலங்காரம்



செய்யப்பட்டு, நாதஸ்வர இசை ஒலிக்க ஏழு நிற திரைகளை விலக்கி, பஞ்சாங்கம் வாசிக்க, கூடிநின்ற பக்தர்களுக்கு வரதராஜ பெருமாள் காட்சி அளித்தார்.

பின்னர் வரதராஜ பெருமாள் சன்னதி வீதிகளில் உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார். வெகு விமரிசையாக நடைபெற்ற பல்லவ உற்சவத்தின் முதல் நாளில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

## வேளிமலை முருகன் கோவிலில் பாரம்பரிய குறவர் படுகளம் நிகழ்ச்சி

**நாகர்கோவில், ஏப்.8:**

கென்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகே நூற்றாண்டு பழமை வாய்ந்த வேளிமலை குமாரசுவாமி கோவிலில் பங்குனி திருவிழா நடைபெற்றது.

முருகப் பெருமானின் திருக்கல்யாணத்தையொட்டி, பாரம்பரிய குறவர் படுகளம் நிகழ்வு நடைபெற்றது. நூற்றாண்டு பழமை வாய்ந்த வேளிமலை குமாரசுவாமி கோவிலில் பங்குனி உத்திரத் திருவிழாவில் முருகப்பெருமானின் திருக்கல்யாணத்தையொட்டி, பாரம்பரிய குறவர் படுகளம் நிகழ்வு நடைபெற்றது.



வள்ளியுடன் முதியவர் வேடத்தில் செல்லும் முருகப்பெருமானை, வள்ளியின் உறவினர்களான குறவர்கள் தடுப்பதும், அவர்களுடன் சண்டையிட்டு வெற்றிபெற்ற முருகன் தனது உண்மையான உருவத்தை வெளிப்படுத்தும் நிகழ்வுகள் நடித்துக் காட்டப்பட்டன. இதை ஏராளமான பக்தர்கள் கண்டுகளித்தனர்.






## நலம் தரும் மருத்துவம்

## சிறு கீரை பெரும் பலன்கள்!



சிறுகீரையில் வைட்டமின் ஏ, பி, சி, இரும்புச்சத்து,பொட்டாசியம், கால்சியம், மாங்கனீசு, மக்னீசியம் போன்ற தாதுக்கள் நிறைந்துள்ளன.

சிறுநீரகம் மற்றும் சிறுநீர்ப்பை மற்றும் அதை சார்ந்த உறுப்புகள் சிறப்பாக செயல்பட சிறுகீரை உதவுகிறது. சிறுநீரகத்தில் உள்ள கற்களை நீக்குவதற்கும் இது உதவுகிறது.

சிறுகீரையில் நமது நினைவாற்றலை அதிகரிக்க கூடிய சத்துகள் அடங்கியுள்ளன. மேலும் இந்த கீரையை தொடர்ந்து எடுத்து வர, மூலநோய் கட்டுப்படும், வாயு மற்றும் வாதநோயை அகலும். மாலைக்கண் போன்ற நோய்கள் குணமாகும்.

சிறு கீரையுடன்மஞ்சள் தூள், இஞ்சி, பூண்டு, பெருங்காயம், உப்பு சேர்த்து சூப் வைத்துக் குடித்தால் , ஒற்றைத் தலைவலி குணமாகும்.

சிறுகீரையில் வைட்டமின் ஏ அதிகம் இருப்பதால், இது கண்களில் கண்புரை ஏற்படுவதை தடுப்பதோடு, விழிப்படலம், கருவிழி ஆகியற்றின் நலத்தையும் மேம்படுத்துகிறது.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் இக்கீரையை எடுத்து கொண்டால் உடலில் உள்ள இன்சுலின் சுரப்பு இயல்பாக இருக்கும்.

ரத்த காயங்களை சீக்கிரத்தில் ஆற்றும் தன்மையை சிறுகீரை கொண்டுள்ளது. காயங்களில் கிருமி தொற்று ஏற்படுவதை தடுப்பதுடன், காயங்களை சீக்கிரம் ஆற்றுகிறது சிறுகீரை.

சிறு கீரையுடன்மிளகுத் தூள், உப்பு சேர்த்து சமைத்து, கொஞ்சம் நெய்யோடு சுடு சாதத்தில் பிசைந்து சாப்பிட்டால், பித்த நோய்கள் குணமாகும்.

சிறு கீரையுடன் சிறிது மஞ்சள் சேர்த்து நன்றாக அரைத்து உடலில் தேய்த்துக்கொண்டால் சொரி , சிரங்கு , படை போன்ற தோல் நோய்கள் குணமாகும்.

சிறுகீரையுடன், முந்திரிப் பருப்பு, மஞ்சள் சேர்த்து அரைத்து முகப்பருக்கள் மீது தடவ முகப்பரு குறையும்.

சிறுகீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் ரத்தத்தில் சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு, நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கிறது.

## பூமிக்கு தண்ணீர் எங்கிருந்து வந்தது?: விஞ்ஞானிகளின் அதிரடி கண்டுபிடிப்பு!

பூமியில் உயிர்கள் வாழ்வதற்கான மிக முக்கியமான ஒன்று தண்ணீர். பல ஆண்டுகளாக விஞ்ஞானிகள் பூமிக்கு தண்ணீர் எங்கிருந்து வந்தது என ஆராய்ந்து வருகின்றனர்.

பொதுவாக, பூமி உருவான பிறகு விண்கற்கள் மற்றும் கோமெட்கள் பூமியில் மோதியதால் தண்ணீர் உருவாகி இருக்கும். அதாவது, தண்ணீர் விண்வெளியில் இருந்து பூமிக்கு வந்ததாக பல விஞ்ஞானிகள் நம்பினர்.

ஆனால், சமீபத்தில் வெளியான புதிய ஆய்வு இந்த எண்ணத்தை சற்று மாற்றி அமைத்துள்ளது. கோள்களே அவற்றில் உள்ள எரிமலை மாக்மாவிலிருந்து தண்ணீரை உருவாக்கும் திறன் கொண்டிருக்கிறது எனக் கூறுகிறது.

### மாக்மா என்றால் என்ன?

மாக்மா என்பது பூமியின் அடிப்பகுதியில் உள்ள உருகிய கற்கள் மற்றும் கனிமங்கள் கலந்த சூடான திரவம் ஆகும். எரிமலை வெடிக்கும் போது இந்த மாக்மா மேலே வந்து லாவாவாக வெளிப்படும்.

இந்த மாக்மாவில் பல்வேறு இரசாயன கூறுகள் இருக்கும். அதில் முக்கியமானவை ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன். இந்த இரண்டு கூறுகளும் இணைந்தால் தான் தண்ணீர் உருவாகிறது.

### புதிய ஆய்வு என்ன சொல்கிறது?



புதிய விஞ்ஞான ஆய்வுகளின்படி, ஒரு கோள் உருவாகும் ஆரம்ப காலத்தில் அதன் உள்ளே மிகுந்த வெப்பம் இருக்கும். அந்த வெப்பத்தால் உள்ளே இருக்கும் கற்கள் உருகி மாக்மா கடல் போன்ற நிலையை உருவாக்கும்.

இந்த மாக்மா கடலில் இரசாயன மாற்றங்கள் நடக்கும்போது, ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து நீராவி உருவாகலாம்.

பின்னர் அந்த நீராவி கோளின் மேற்பரப்பிற்கு எழுந்து, வெப்பம் குறையும்போது மழையாக விழுந்து கடல்கள் உருவாகி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் விளக்குகின்றனர்.

இந்த கண்டுபிடிப்பு மூலம், ஒரு கோளில் தண்ணீர் உருவாக விண்கற்கள் அல்லது கோமெட்கள் அவசியமில்லை. அந்த கோளின் உள்ளே இருக்கும் மாக்மா மற்றும் இரசாயன கூறுகளும் தண்ணீரை உருவாக்கும் திறன் கொண்டவை என்று தெரியவந்துள்ளது.

மேலும், விண்வெளியில் உள்ள பல கோள்கள் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். அவற்றில் சில கோள்கள் பூமியைப் போல கற்களால் உருவானவை. அவற்றின் உள்ளே மாக்மா போன்ற சூடான அமைப்புகள் இருக்கலாம். அப்படியானால், அந்த கோள்களிலும் தண்ணீர் உருவாகியிருக்க வாய்ப்பு இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதன் மூலம் பிரபஞ்சத்தில் மற்ற கிரகங்களில் உயிர்கள் இருக்கும் வாய்ப்பு இருக்கலாம் என கருதப்படுகிறது.

பூமியில் தண்ணீர் எப்படி வந்தது? என்ற கேள்விக்கு விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக பதில் தேடி வருகின்றனர். சமீபத்திய இந்த ஆய்வு, கோள்களின் உள்ளே இருக்கும் மாக்மாவிலிருந்தும் தண்ணீர் உருவாகி இருக்கு முடியும் என்பதை காட்டுகிறது.

அதோடு, இந்த கண்டுபிடிப்பு, கோள்களின் உருவாக்கம், பூமியின் வரலாறு மற்றும் பிரபஞ்சத்தில் உயிர்கள் இருக்க வாய்ப்பு போன்ற பல முக்கியமான விஞ்ஞான கேள்விகளுக்கு புதிய வெளிச்சத்தை அளிக்கிறது.

# என் அன்புள்ள ஸ்வேதாவுக்கு



மயான அமைதியுடன் இருந்த அந்த மருத்துவமனையில் தன் மனைவி ஸ்வேதா முகத்தை வெறித்து பார்த்து ,பார்த்து அழுதான் சரவணன் ... சரவணன் பார்க்க வரும் நண்பர்களை எல்லாம் டெஸ்ட் பண்ணிட்டு கல்யாணம் பண்ணுங்க ,டெஸ்ட் பண்ணிட்டு கல்யாணம் பண்ணுங்க நான் பண்ண தப்பை நீங்களும் செய்யாதீங்க என்று அழுது ,அழுது புலம்பினான்.

ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இல்லாமல் பார்க்க வந்தவர்கள் தவித்தனர் பார்க்க வந்த எல்லாரும் ஸ்வேதாவை பார்த்து வருத்தப்பட்டு கொண்டே சென்றனர்...

என்ன ஆச்சு ???

சரவணா -ஸ்வேதாவுக்கு?? காதலித்து இரு வீட்டார் எதிர்ப்புடன் நடந்த திருமணம்.

தன் பெற்றோர்கள் கைவிட்டாலும் தன்னையே நம்பி வந்த ஸ்வேதாவை உயிராக கருதினான் .

அவளை மகாராணி போல பார்த்து கொண்டான் இந்த உலகில் அவன் தெய்வம், உயிர் ஸ்வேதாதான் ... ஸ்வேதாவை கண்ணுக்கு கண்ணாக உயிராக பார்த்து கொண்டான்.. நீரின்றி அமையாது உலகு ஸ்வேதாவின்றி அமையாது சரவணன் உலகு.வேலை முடிந்தால் நேராக வீட்டிற்கு தான் வருவான் மனைவிக்கு எல்லா வேலைகளிலும் உதவியாக இருப்பான்,துணி துவைப்பது ,பாத்திரம் கழுவுவது ,கழிவறை சுத்தம் செய்வது என்று அனைத்து வேலைகளையும் இழுத்து போட்டு கொண்டு செய்தான் ஆபிஸ் நேரம் போக அவளுடன் இருக்கும் நேரம் முழுதும் உதவி செய்து கொண்டே இருப்பான்.

அவள் இன்றி ஒரு நாளும் தனியாக சாப்பிட்டதே இல்லை,ஸ்வேதாவும் அப்படி தான் சரவணன் மீது உயிரையே வைத்து இருந்தாள்.

தன் பெற்றோரை விட்டு பிரிந்து வந்த வருத்தம் துளி கூட வராமல் தாய்க்கு தாயாக சரவணன் அவளை பார்த்து கொண்டான். அக்கம் பக்கத்தினர் கூட வாழ்ந்தால் சரவணன் ஸ்வேதாவை போல் வாழ வேண்டும் என்று ஏங்கும் அளவுக்கு வாழ்ந்தனர். இப்படி பட்ட தம்பதிகளுக்கு என்ன ஆயிற்று?????

ஸ்வேதாவை காதலிப்பதற்கு முன் சரவணன் அளவுக்கு அதிகமாக காதலித்தது சிகரெட்டை தான் .... அவனது ஆறாம் விரலாய் எப்போதும் அவன் கைகளில் சிகரெட் இருந்து கொண்டே இருக்கும் விளைவு இப்போது அவனது கல்யாணத்திற்கு பின் ரத்த புற்று நோயாய் அறுவடை ஆகி இருக்கிறது.

வயசு திமிரில் தன் உடலுக்கு செய்த தவறு அவன் வாழ நினைக்கும் போது அவனது வாழ்க்கையை முடிக்க போகிறது ...

சில மாதங்களுக்கு பிறகு இப்போது சரவணன் உயிரோடு இல்லை ... ஆனால் அவனது வாரிசு ஆறு மாத கருவாக ஸ்வேதா வயிற்றில்.. இரு குடும்பங்களையும் எதிர்த்து திருமணம் செய்து கொண்டதால் எந்த பக்க பலமும் இல்லாமல் தனிமையில் கஷ்டப்பட்டு கொண்டு இருக்கிறாள் ஸ்வேதா யாரும் இல்லாத அனாதையாய். பாவம் வயித்து பிள்ளைக்காரி..

இந்த நிலைமை உங்கள் குடும்பத்துக்கும் ,உங்களை சார்ந்தவர்களுக்கும் ஏற்படாமல் இருக்க புகை பிடிக்காதீர்கள் .

புகை பிடித்தல் உங்களை மட்டுமல்ல உங்களை சார்ந்தவர்களையும் அழிக்கும் !!

**நௌஷாத் கான்.லி**

# "சிலம்பக்காரன்"




கோபிக்கு சிலம்பம் என்றால் என்னவென்றே தெரியாது. எப்போதாவது பார்த்து ரசிப்பானே தவிர கம்பைக் கையில் தொட்டுப்பார்த்தது கூட இல்லை.

அதன் காரணமாகவே நண்பர்களிடமிருந்து ஏராளமாய்க் கிண்டல்கள் வரும்.

ஊர்த் திருவிழா வந்தது. அதன் முக்கிய நிகழ்ச்சியாய் சிலம்பப் போட்டி.

கோபிக்கு தெரியாமல் அவன் நண்பர்கள் கோபியின் பெயரையும் போட்டியில் பதிவு செய்து விட்டனர்.

போட்டியன்று களத்தில் கூட்டம் நிரம்பியது. சிலம்ப வீரர்கள் தடியைச் சுழற்றிய சத்தம் காற்றைக் கிழித்தது.

அப்போது மேடையிலிருந்து அறிவிப்பு வந்தது.

“அடுத்த போட்டியாளர்... கோபி!”

அதிர்ச்சியில் உறைந்தான் கோபி. "அய்யய்யோ... அது நான் இல்லை... வேற கோபி... நான் இல்லை...” என்று பின் வாங்கினான்.

நண்பர்கள் சிரித்தபடி அவனைத் தூக்கி நேராக களத்துக்குள் போட்டார்கள். ஒரு தடியையும் அவன் கையில் திணித்தார்கள்.

கோபி பயத்தில் அந்த தடியை தாறுமாறாகச் சுழற்றினான். எதிரில் நின்ற உண்மையான வீரன் "கல...கல"வெனச் சிரித்தான்.

கண்ணிமைக்கும் நேரத்தில் கோபியின் தடி பறந்தது. அடுத்த நொடி அவன் மீது அடி மழை பொழிந்தது.

கோபி தடுமாறினான். மண்ணில் விழுந்தான். கூட்டம் முழுக்க சிரிப்பு.

“இவனா இந்த ஊர் சிலம்ப வீரன்!” என்று யாரோ கத்தினார்.

அந்தச் சிரிப்பு கோபியின் காதில் நீண்ட நேரம் ஒலித்தது.

அன்று இரவு கோபி யாருடனும் பேசவில்லை. ஆனால் அவன் மனதில் ஒரு தீர்மானமான முடிவு ஏற்பட்டது.

“அடுத்த திருவிழாவில்...இதே களத்தில் என்னைக் கிண்டல் செய்த கூட்டத்துக்கு நான் சிலம்பத்தால் பதில் சொல்லப் போகிறேன்.”

அடுத்த நாளே ஒரு சிலம்ப ஆசானைத் தேடிச் சென்றான். அதன் பிறகு, விடியற்காலப் பயிற்சி. மாலைப் பயிற்சி. கைகள் வலித்தாலும் பயிற்சி. தனிப்பட்ட உணவு முறை.

ஒரு வருடம் கடந்தது. மீண்டும் ஊர்த் திருவிழா. மீண்டும் சிலம்பப் போட்டி. இம்முறை கோபி தானாகவே தன் பெயரைப் பதிவு செய்தான்.

களத்தினுள் அவன் இறங்கியதும் கூட்டம் அமைதியானது. அவன் தடியைச் சுழற்றினான்.

ஒவ்வொரு வீரர்களும் வரிசையாய் வந்து தோற்றார்கள்.

இறுதியில் அறிவிப்பு வந்தது. "இந்த வருட சிலம்பப் போட்டி சாம்பியன்... கோபி!”

கைத்தட்டல் முழங்கியது. ஒரு வருடத்திற்கு முன் அவனை கிண்டல் செய்த அதே கூட்டம் இப்போது அவனைப் பாராட்டிக் கொண்டிருந்தது.

கோபியின் மனதில் ஒரு உண்மை மட்டும் ஒலித்தது, "நமக்குள் ஒளிந்திருக்கும் திறமைகளை நமக்கே அறிமுகப்படுத்துவது பல நேரங்களில் நாம் படும் அவமானம்தான்.”



**-முகில் தினகரன்**
கோயமுத்தூர்.



# ஊர்மிளையின் ஊமைமனம் 7



**▪கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## வஞ்சகமகள் சூர்ப்பநகை

காலையில் எழுந்தவுடன் இலக்குவனின் கண்ணில் இரண்டாவதாக வரைந்த ஓவியம் கண்டு, கண்கள் சுருக்கி நினைவுகள் பின்னோக்கிச் செல்ல,

“இதை யார் வரையச் சொன்னது ஊர்மிளை!” என்று கத்தினான்.

பதறிப் கொண்டு எழுந்த ஊர்மிளா தான் இரவில் வரைந்த போது ஓவியம் முடித்தவுடன் காயவிட்டு இருந்தாள். அதனை எடுத்து வைத்துவிட்டு ராமர் பட்டாபிஷேக ஓவியத்தை மாட்டிவிட்டு உறங்கப் போக வேண்டும் என்று நினைத்தவள், அதனைச் செய்யாமல் உறங்கிப் போனாள்.

சூர்ப்பனகையின் எழிலோவியம் கண்டு லக்குவனன் இவளின் வருகையால் எப்பேர்பட்ட துன்பங்கள் நிகழ்ந்தன! நாம் யாரை மறக்க வேண்டும் என்று நினைக்கிறோமோ அவர்களே திரும்ப திரும்ப வருவது காலத்தின் ஜாலமோ? ஏன்? ஊர்மிளையின் ஆவல் அவளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைப்பது சரிதான். ஆனால் எப்பேர்பட்ட துன்பம். அதனை மறந்து திரும்பவும் வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ளும் முன் அவளின் நினைவா?

ஆனாலும் இதற்கு மேல் அவளைப் பற்றிச் சொல்லாவிடில் ஊர்மிளா அவளின் நினைவுகளைத் திரும்ப திரும்பக் கொண்டு வந்து நம்மிடம் பதிலை வாங்கத் துடிப்பாள். அதை ஏன் வளர விட வேண்டும்? நாமே சொல்லிவிட்டால் இனி இதுபோன்ற நினைவுகளைச் சுமக்க வேண்டாம். மேலும் இதற்கு ஏதாவது ஒரு சமாதானம் சொல்லி நினைவுகளை மென்மையாக மாற்றும் ஆற்றல் அவளிடம் இருக்கிறது!” என்று நினைத்தான்.

“எங்கு பார்த்தோம்? எப்படி பார்த்தோம்? அதனால் என்ன நடந்தது?” என்பதை எல்லாம் பின்னோக்கி பின்னோக்கி ஓடவிட்டு அசை போட்டான் இலக்குவன்.

பஞ்சவடியில் ஒரு நாள்..

ராமன் மட்டும் தனித்திருந்தான். பர்ணசாலைக்குள் சீதை இருந்தாள். சற்று தொலைவில் இலக்குவன் ஒரு பெரிய கல்லில் அமர்ந்திருந்தான் ..

அப்போது சூர்ப்பனகை ராமனின் திருமேனி அழகினைக் கண்டவள், காமம் மிகுந்து அழகிய பெண் உருக்கொண்டு அவனிடம் தன்னைத் திருமணம் செய்யுமாறு வேண்டுகிறாள்.

பஞ்சு ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம்
அனுங்க செஞ்செவிய கஞ்சம் நிகர்
சீறடிளாகி அஞ்சொல்இள மஞ்ஞைஎன
அன்னமென மின்னும்

பஞ்சு என நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்...

காமம் நிறை வாசத்தேனின் மொழிவுற்று இனிய செவ்வி நனிபெற்று ஒரு மானின் விழி பெற்று மயில் வந்தது என வந்தாள்.

நளினமாக நின்ற வஞ்ச மகளைக் கண்டு ராமண்ணா வியந்தார்.

ராமனின் அழகில் தன்னை மறந்த அம்மாதுவோ வியந்து, இவன் எல்லார் சிந்தையிலும் உறைபவன் ஆகிய மன்மதனே என்றால் அவனுக்குத்தான் உருவமில்லையே என, இவன் மன்மதன் இல்லை என்று தெளிந்தாள்.

இந்திரனா என ஐயுற்று அவருக்குத் தான் ஆயிரம் கண்களே! எனவே அவரும் இல்லை எனத் தெளிந்து,

பின் ஈசரோ அவருக்கு மூன்று கண்கள் என அவரும் அல்லர், உந்தியால் உலகு அளித்த பிரமனைத் தந்த திருமாலோ என எண்ணி அவனுக்குத்தான் நான்கு தோள்களே எனத் தெளிந்தாள்.

இன்னும் உடல் அழிந்த மன்மதன் தவம் செய்து உடல் பெற்று இவ்விடம் வந்தானோ என மயங்கினாள்.

இதோ அங்கு ஒரு நாடகம் நடக்கப்போகிறது நாமும் கண்டு களிப்போம் ஊர்மிளையோடு.

“காட்டு வாழ்க்கையில் மேட்டுக்குடி மகள் போல் தெரிய, இவள் யார்? என்பதை அறிய “தீதுஇல் வரவு ஆக திரு நின் வரவு சேயோய்! ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு?” என்று வினவினார் ராமன் .



அத்தோடு நிற்காமல்,

“வழி தெரியாமல் இங்கு வந்து நோக்குகின்றாயோ?” என்றான் பரிவுடன்.

வாய்ப்பை எதிர்பார்த்தவள் போல் அவளும் “பூவிலோன் புதல்வன் மைந்தன் புலத்தியரின் புதல்வி நான்! முப்புரங்கள் செற்ற சேவலோன் தனையன் செங்கையோன் தங்கை! உலகம் மூன்றும் ஆள்பவன் தங்கை! அழகாய் இருப்பதால் என்னைக் காமவல்லி என்று அழைப்பர்!” என்றாள்.

“எனில் தனியாக வந்த காரணம் யாது?” என்றார் ராமன்.

“அரக்கர் குலத்தில் அரம்பையா? எப்படி அவதரிக்க முடியும்?” என்றான் ராமன்.

“அந்த மாயையும், கொடுமையும் நிறைந்த அரக்கர் வாழ்வுதனை மதிக்கலாதேன். ஆய்வுறு மனத்தேன் ஆகி, அறம் தலை நிற்பது ஆனேன். பாவம் ஒழிய தவம் செய்து பெற்ற வடிவம் இது. நான் சேற்றில் முளைத்த செந்தாமரை!”

“அப்படியானால் நிலத்தில் ஏன் வந்தது? “நிம்மதி இழந்ததால், உன் சம்மதம் வேண்டி உன்னை மணக்க!” என்றாள்.

“நீ மலைத்தேன் நான் முடவன்!” என்றான் ராமன்.

“காதலித்தேன் என்று சொன்னால் என்னைக் குருடு என்பர். சாதியும் ஒரு தடை. “

“நான் கலப்பு மகள்! என் தாய் அரக்கி தந்தை அந்தணன்!”

“அரக்கி நீ! மானுடன் நான்!”

“வருத்தம் நீங்கு! அரக்கியர் தம்மில் மானிடர் மணத்தல் பொருத்தம் அன்று!” என்றான்.

“இடைப்பட்ட நிலையில் தேவ மகளாக அவதரித்தவள்!”

“சீமாட்டி நீ! நானோ நாடு இழந்த நாடோடி!” என்றான்.

“என்னை மணந்தால் மன்னன் ஆவாய்! அரசாள்வாய்!”

“உன் பெற்றோர்?” என்றான் ராமன்.

“தடை செய்ய மாட்டார்கள். மேலும் காதலர்களுக்குத் தரப்பட்ட உரிமை காந்தருப்ப மணம் உள்ளதே!”

“என் தந்தையை நான் வாழ்த்துகிறேன். அவர் என்னைக் காட்டுக்கு அனுப்பினாலும், நீ எட்டாக் கனியாக இருந்திருப்பாய்! அழகு மிக்க உன்னைச் சந்திக்கும் பேறு பெற்றேன். நன்மை என்னில் வந்து அடைந்தது.” என்று சொல்லி சிரித்தான் ராமன்.

இவ்வாறு இராமன் கூறியதால் சூர்ப்பநகை மீன் தூண்டிலில் விழுந்து விட்டது என்றே எண்ணினாள்.

“உன்னால் ஆக வேண்டிய செயல் உண்டு ஒன்று அதனால் வந்தேன்! “

“என்பால் என்ன காரியத்தைச் சொல்? அஃது ஆகும் எனில் உடன் செய்வன் நான்! சொல் சொல்!” என்றான் இராமன்.

“காமன் என்னும் ஒருவன் செய்யும் வன்மையைக் காத்தி!” என்றாள்.

“நாண் இலள் ஐயள் நொய்யள் நல்லளும் அல்லள்” என்று அவளைப் பற்றி நினைத்தான் ராமன்.

பேசாமல் இருந்த ராமனின் மன ஓட்டத்தை அறியாதவளாய் “ஆசை கண்டு அருளிற்று உண்டோ? அன்று எனல் உண்டோ? என்னும் ஊசலில் உலாவுகின்றாள், மீட்டும் ஓர் உரை சொல்வாள். மோகத்திற்கு ஒரு முடிவும் உண்டோ? மேலும் ஒரு உரை உண்டு!” என்றாள்.

நல்வரத்தால், பின்னர் நல்லிடை, மண்ணிடை மணியின் வந்தியே போல்வள் சீதை, பர்ண சாலையில் இருந்து வெளியே வந்தாள்.

சீதையைப் பார்த்த சூர்ப்பநகை “கண் பிறபொருளில் செல்லா கருத்து என்னில் ஆகுதே பெண் பிறந்தேனுக்கு என்றால் பிறருக்கு என்படும்!” என்றாள்.

மீன் சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த போர் அரக்கர் என்னும் கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணில் கண்டாள் சூர்ப்பநகை.

“என்னை போல் இடையே வந்தாள் இகழ்விப்பென் இவளை!” என்று அவளை நெருங்க சீதை அஞ்சினாள், பதைத்தாள். அப்போது சீதை ராமனின் குலவுதோள் தழுவி நின்றாள்.

“இவள் யார்?” என்று சூர்ப்பனகை கேட்க

ராமன் “என் மனைவி!” என்றான்.

“இவள் அரக்கி மகள். மானிட வடிவில் வந்து உன்னை மயக்குகிறாள். அடித்து துரத்து! இவளை இங்கிருந்து அகற்று!” என்றாள்.

விளையாட்டு வினையாக மாறுகிறது என்று அறிந்த ராமன், அமுதமே ஆயினும் அதிகமானால் நஞ்சாகி விடும் என்று உணர்ந்து சீதையுடன் பர்ணசாலைக்குள் சென்றான். “தம்பி தயவு காட்ட மாட்டான்! என்னை நம்பி இங்கு இருக்க வேண்டா!” என்றும் கூறிவிட்டு உள்ளே சென்றான்.

இதைக் கேட்ட ஊர்மிளை கலகலவென்று சிரிக்க ஆரம்பித்தாள்.

“ஏன் சிரிக்கிறாய்? கோபம் வரவில்லையா உனக்கு?” என்றான்.

“இல்லை! இவளால்தான் சீதைக்கு ஆபத்து வந்திருக்கும் என்று ஏன் நீங்கள் உணரவில்லை இருவரும்! அவள் தான் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும்போது ராவணனின் தங்கை என்றும் இலங்கை வேந்தன்!” என்றும் சொல்கிறாளே.

“சீதையைப் பிரிந்ததால் மயங்குதல் ராமண்ணாவாக இருக்கலாம். ஆனால் நீங்கள் தெளிவுபடுத்தி இருக்கலாமே!” என்றாள்.

“சீதையைத் தேடுவதிலேயே எத்தனை காலத்தைக் கழித்தீர்கள்!” என்று வருத்தப்பட்டாள்.

ஊர்மிளையின் அறிவு நுட்பத்தைக் கண்டு வியந்தான் இலக்குவன்.

“இடைமறித்து கேள்வி கேட்டு விட்டேன். பின்னரும் நடந்தவை என்ன?” என்றாள் ஆர்வமாக.

இதோ சொல்லத் தொடங்கினான் இலக்குவன்..

**- தொடரும்**

# மகாபாரதம்...



"நல்லதற்கு நல்லது; தீயதுக்கு தீயது" — கர்ணன் & கண்ணன் உரையாடலில் மறைந்த கீதையின் ஆழமான உண்மை!

மகாபாரதம்...
ஒரு போர்கதை மட்டுமல்ல...
மனித வாழ்க்கையின்
சிக்கல்களையும், நியாயம்
அநியாயம் ஆகியவற்றின்
போராட்டத்தையும்
வெளிப்படுத்தும் ஆன்மீகப்
பெருங்கடல்!
அந்தக் கதையில் மிக ஆழமான
உணர்வுகளை தாங்கிய ஒரு
தருணம் —
கர்ணன் மற்றும் கிருஷ்ணர்
இடையேயான உரையாடல்.
கர்ணனின் வேதனை — நியாயம்
தேடும் மனம்

ஒரு நாள், மனதில் பொங்கிய
வேதனையுடன் கர்ணன்,
கண்ணனை நோக்கி பேசத்
தொடங்குகிறான்:
"உலக நாயகனே...
என் வாழ்க்கையை நீ
அறியவில்லையா?"
அவன் சொற்கள் — கண்ணீரின்
சத்தம்...

"நான் பிறந்த அந்த நொடியே
என் தாய் குந்தி என்னை
கைவிட்டாள்...
நான் அனாதையாகி விட்டேன்...
இது என் தவறா?"

"நான் குரு
துரோணாச்சாரியரிடம்
கற்றுக்கொள்ளச் சென்றேன்...
'நீ க்ஷத்ரியன் இல்லை' என்று
என்னை நிராகரித்தார்..."
"பிறகு பரசுராமர் என்னை
ஆசீர்வதித்து கற்றுக்
கொடுத்தார்...
ஆனால் உண்மை தெரிந்ததும்,
நான் கற்ற அனைத்தும் மறந்து
போகச் சாபம் அளித்தார்..."
"ஒரு நாள் தவறுதலாக என்
அம்பு ஒரு பசுவைத் தாக்கியது...
அதற்காகவும் சாபம்!"
"திரௌபதியின் சுயம்வரத்தில்
என்னை அவமானப்படுத்தினர்..."

"இறுதியாக... என் தாய்
என்னை மகனாக ஏற்றுக்
கொண்டதும் கூட —
அவள் மற்ற மகன்களை
காப்பாற்றுவதற்காகத்தான்!"

நட்பின் கடமை — கர்ணனின்
நிலை
அவன் குரல் இன்னும்
உறுதியடைகிறது...
"என் வாழ்க்கையில் ஒளி
கொண்டு வந்தவன் —
துரியோதனன்!
அவன் இல்லையென்றால் நான்
எதுவும் இல்லை!"

"அப்படியிருக்கையில், நான்
அவன் பக்கம் நிற்பது தவறா?"
"செய்நன்றி மறப்பது பெரிய
பாவம் அல்லவா கண்ணா?"
கர்ணன் — தனது வேதனையை
மட்டும் அல்ல...
தன் நியாயத்தையும்
வெளிப்படுத்துகிறான்.
கண்ணனின் அமைதி —
உண்மையின் குரல்
எல்லாவற்றையும் அமைதியாகக்
கேட்ட கண்ணன், மெதுவாகப்
பேசத் தொடங்கினார்:
"கர்ணா...
நீ உன் கதையைச்
சொன்னாய்...
என் கதையையும் கேட்க
விரும்புகிறாயா?"
கண்ணனின் வாழ்க்கை —
மறைக்கப்பட்ட சோதனைகள்

"நீ அரண்மனையில் பிறந்தாய்...
நான் பிறந்தது சிறையில்..."
"நான் பிறக்கும் முன்பே...
என் மரணம் எனக்காக
காத்திருந்தது..."
"பிறந்த உடனே, என்
பெற்றோரிடமிருந்து
பிரிக்கப்பட்டேன்..."

"நீ வீரர்களின் நடுவில்
வளர்ந்தாய்...
நான் வளர்ந்தது மாட்டுக்
கொட்டகையில்..."
"என்னை கொல்ல எண்ணற்ற
சதிகள் நடந்தன..."

"எனக்கு கல்வி வாய்ப்பு
இல்லை...
பின்னர் தான் கற்றுக் கொள்ள
முடிந்தது..."
"என் மக்களை காப்பாற்ற நான்
நகரத்தை மாற்றினேன்...
ஆனால் எனக்கு கிடைத்த பெயர்
— 'பயந்தோடி'!"
வாழ்க்கையின் உண்மை —
கண்ணனின் போதனை
பிறகு கண்ணன் ஆழமாகக்
கூறுகிறார்:
"கர்ணா...
வாழ்க்கையில்
ஒவ்வொருவருக்கும் சவால்கள்
இருக்கின்றன..."

"நீ சந்தித்த கஷ்டங்கள்...
நீ தவறான வழியில் செல்ல
உரிமை அல்ல!"
"துரியோதனன் தவறு
செய்கிறான்...
தருமன் நியாயம் செய்கிறான்...
இதெல்லாம் உனக்குத்
தெரியும்..."

"நாம் எவ்வளவு இழந்தோம்
என்பது முக்கியமல்ல...
நாம் எப்படி நடந்துகொண்டோம்
என்பதே முக்கியம்!"
"வாழ்க்கை கடினமானது...
ஆனால் அழகானதும் கூட!"
கீதையின் சாரம்
இந்த உரையாடல் நமக்கு
சொல்லும் மிகப் பெரிய
உண்மை:
நமக்கு நடந்த அநீதிகள்...
நம்மை தவறான பாதையில்
செல்ல வைக்கும் காரணம்
ஆகக் கூடாது

நம்முடைய முடிவுகள்...
நம்முடைய அணுகுமுறை...
நம்முடைய நியாயம்...
அதுவே நம் விதியை
நிர்ணயிக்கும்!
இறுதி உணர்வு
நல்லதற்கு நல்லது...
தீயதுக்கு தீயது...
நாம் நல்லதை தேர்ந்தெடுத்தால்
—
வாழ்க்கையும் நமக்கு
நல்லதையே தரும்!

-பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

## தினம் ஒரு தலைவர்கள்

# தில்லையாடி வள்ளியம்மை வரலாறு

தில்லையாடி வள்ளியம்மை (22 பெப்ரவரி 1898 - 22 பெப்ரவரி 1914) தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபட்டு தன் பதினாறாவது வயதில் உயிர்நீத்த ஒரு தமிழ்ப் பெண் போராளி ஆவார். இவர் ஆரம்ப காலத்தில் மகாத்மா காந்தியுடன் இணைந்து அறப் போராட்டங்களில் கலந்து கொண்டு பின்னர் அந்நாட்டின் இனவொதுக்கல் அரசுக்கு எதிராகப் போராடினார். சிறுமி தில்லையாடி வள்ளியம்மை தான் எனக்கு முதன்முதலில் விடுதலை உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர் என்று காந்தியடிகள் சொன்னார்.



வாழ்க்கை வரலாறு

தில்லையாடி வள்ளியம்மை தென்னாப்பிரிக்காவில் 1898ஆம் ஆண்டில் ஓர் செங்குந்தர் குடும்பத்தில் பிறந்தார். இவர் மயிலாடுதுறை மாவட்டம், தில்லையாடி என்ற ஊரைச் சார்ந்த முனுசாமி முதலியார், மங்களத்தம்மாள் ஆகியோருக்குப் பிறந்தவர். நெசவுத் தொழிலாளியான முனுசாமி முதலியார் பிரித்தானிய ஆட்சியில் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று அங்கு ஜோகானஸ்பேர்க் நகரில் ஒரு சிறிய வணிகத்தைத் தொடங்கினார். அங்கு தான் வள்ளியம்மை பிறந்தார்.

தில்லையாடி காந்தி நினைவுத் தூண்

கிறித்தவ தேவாலயத்தில் தான் திருமணங்கள் நடத்தப்படவேண்டும் என்றும் அதன் படி நடைபெறாத திருமணங்கள் செல்லாது என்றும் தென்னாப்பிரிக்க ஆங்கிலேய அரசு தெரிவித்தது. அப்போது தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் முன்னெடுப்பில் அங்கிருந்த இந்தியர்கள் போராட்டம் நடத்தினர். மேலும் தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களுக்கு தென்னாப்பிரிக்க அரசால் விதிக்கப்பட்ட வரியை எதிர்த்தும் போராட்டங்கள் நடந்தன. அவற்றில் பங்குபெற்று அறவழியில் போராடினார் தில்லையாடி வள்ளியம்மை. அதற்காக 1913ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறையில் அடைக்கப்பட்ட அவர் உடல் நலக்குறைவால் விடுதலை செய்யப்பட்டபோதும் போராட்டக் குழுவினரின் கோரிக்கை நிறைவேறாததால் வெளியே வர மறுத்தார். பின்னர் இந்தியர்களுக்கு விதிக்கப்பட்ட தலைவரி நீக்கப்பட்ட பின்பே தம் விடுதலையை ஏற்று வெளியே வந்தார் வள்ளியம்மை. பதினாறு ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்த அவரை "பலன் ஏதும் கருதாமல் தென்னாப்பிரிக்காவில் தியாகம் செய்து வெற்றி கண்ட தில்லையாடி வள்ளியம்மை அவர்கள் தாம் எனக்கு முதன் முதலில் விடுதலை உணர்வை ஊட்டிய பெருமைக்குரியவர்" என காந்தி பாராட்டியுள்ளார்.






நினைவு மண்டபம்

தில்லையாடியில் உள்ள வள்ளியம்மை நினைவு மண்டபம்

தமிழ்நாடு அரசு தில்லையாடி வள்ளியம்மையின் ஈகத்தைப் போற்றும் வகையில் முந்தைய தஞ்சாவூர் மாவட்டத்தில் [மயிலாடுதுறை] அருகில் தில்லையாடியில் பிறந்தார்.மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் தில்லையாடியில் நினைவு மண்டபம் அமைத்துள்ளது.

காந்தி தில்லையாடிக்கு 01/05/1915 அன்று வருகை தந்து அமர்ந்த இடத்தில் இந்த நினைவுத் தூண் கட்டப்பட்டுள்ளது. அதன் எதிரில் 'தில்லையாடி வள்ளியம்மை நினைவுமண்டபம்' கட்டப்பட்டுள்ளது.

இங்கு தில்லையாடி வள்ளியம்மையின் சிலை ஒன்று முன்மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பொது நூலகத்துறை மூலம் ஒரு நூலகம் செயல்பட்டு வருகின்றது.

நூற்றாண்டு நினைவு

தரங்கம்பாடி மற்றும் தில்லையாடிக்குச் செல்வதற்காக காந்தி தம் மனைவி கஸ்தூரிபாயுடன் 1915 ஏப்ரல் 29ஆம் தேதி இரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ரயிலில் மயிலாடுதுறைக்கு வந்து, மறுநாள் அங்கிருந்து இரட்டைக் குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் தரங்கம்பாடி வந்தடைந்தார். தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை மைதானத்தில் அவருக்கு சத்தியாகிரகவாதிகளும் பொதுமக்களும் வரவேற்பு அளித்தனர். மே 1ஆம் தேதி தரங்கம்பாடியிலிருந்து தில்லையாடிக்கு சென்றார் காந்தி.

தில்லையாடி பகுதியை சேர்ந்த பலரும் தென்னாப்பிரிக்காவில் காந்தியுடன் அறப்போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். தில்லையாடியில் காந்தி அமர்ந்து பொதுமக்களிடம் பேசிய இடத்தில் நினைவுத் தூண் அமைக்கப்பட்டுள்ளது. காந்தி தில்லையாடிக்கு வந்ததன் நூற்றாண்டு நினைவு விழா தில்லையாடி தியாகி வள்ளியம்மை நினைவு மண்டபத்தில் 01/05/2015 அன்று நடைபெற்றது.

தில்லையாடியில் 'காந்தி நினைவுத் தூண்' அருகில் தற்போது அமைக்கப்பட்டுள்ள நூற்றாண்டு நினைவுக் கல்வெட்டு திருப்பனந்தாள் காசிமட இணை அதிபரால் திறந்துவைக்கப்பட்டது.

# இந்த Week End-ல் தாய் கிழவி உங்க வீட்டிற்கு வரா... நீங்க ரெடியா?



சிவகார்த்திகேயன் தயாரிப்பில் ராதிகா நடித்துள்ள படம் 'தாய் கிழவி'. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கியுள்ளார். நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்துள்ள இப்படத்தில் சிங்கம் புலி, அருள்தாஸ், பாலசரவணன், முனிஷ்காந்த், இளவரசு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

பவனுதாயி என்கிற பெயரில் தாய் கிழவியாக ஊரில் வலம் வருபவர் ராதிகா. அங்குள்ளவர்களுக்கு வட்டிக்கு விட்டு மிரட்டி வட்டி வசூலில் ஈடுபட்டு வருகிறார். ஒரு கட்டத்தில் கிழவி எப்போது இறக்கும் என ஊரே காத்திருக்கிறது. ராதிகாவிற்கு அருள்தாஸ், பால சரவணன், சிங்கம்புலி என 3 மகன்கள், ஒரு மகளும் இருக்கிறார்கள். ராதிகாவிற்கு திடீரென உடல்நலம் மோசமாகிறது. இன்னும் சில நாட்களில் ராதிகா இறந்து விடுவார் என்று ஊரே காத்திருக்கிறது. அப்போது, ராதிகா 160 சவரன் சேர்த்து வைத்துள்ளது மகன்களுக்கு தெரியவருகிறது. பாசத்தால் இல்லாவிட்டாலும், நகை சொத்துக்காகவாவது தாய் ராதிகாவை காப்பாற்ற வேண்டும் என மெனக்கிடுகிறார்கள்.






# தொழிலதிபர் திருமணத்தால் சினிமாவை விட்டு விலகவில்லை என திரிஷா அறிவிப்பு.

நடிகை திரிஷா திரைத்துறையை விட்டு விலகுவதாக வெளியான தகவலுக்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார். பணக்கார தொழிலதிபரை திருமணம் செய்து கொண்டதால் சினிமாவில் விட்டு விலகுவதாக வெளியான தகவலுக்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.

ஆதாரமற்ற செய்தி, வதந்திகளை நம்ப வேண்டாம் என்று ரசிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நடிகை திரிஷா வேண்டுகோள் விடுத்துள்ளார்.



விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் சூப்பர்ஹிட் சீரியல் சிறகடிக்க ஆசை. இந்த சீரியலில் மீனா என்கிற கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்கள் மனதில் இடம்பிடித்தவர் நடிகை கோமதி பிரியா. இவர் தமிழில் மட்டுமின்றி மலையாளம் மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளிலும் சீரியல்களில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ரசிகர்களின் மனதை கவர்ந்த நாயகியாக சின்னத்திரையில் வலம் வரும் நடிகை கோமதி பிரியா, இன்ஸ்டாகிராமில் அவ்வப்போது வெளியிடும் புகைப்படங்கள் உடனடியாக வைரலாகும். அந்த வகையில், தற்போது கலக்கலான போட்டோஷூட் நடத்தி அந்த புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளார்.

# 800 கோடி பான் வேர்ல்டு படம்

அல்லு அர்ஜுனின் 22ஆவது படம் பான் வேர்ல்டு படமாக உருவாக இருக்கிறது. இப்படம் சுமார் 800 கோடி ரூபாய்க்கு அதிகமான பட்ஜெட்டில் மிக பிரமாண்டமாக எடுக்கப்பட இருக்கிறது. இந்தப் படத்தில் கோலிவுட், பாலிவுட்டில் சூப்பர் டூப்பர் ஹிட் கொடுத்த அட்லீ இயக்குகிறார்.

அட்லீக்கு இது 6ஆவது படமாகும். சன் பிக்சர்ஸ் இப்படத்தை தயாரிக்கிறது.

இந்தப் படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார்.

ஹாலிவுட்டில் அவதார் திரைப்படத்தை போல் இந்த படத்திற்காக ஒரு உலகத்தை கிராபிக்ஸ் தொழிநுட்ப உதவியுடன் உருவாக்கி வருகின்றனர். அல்லு அர்ஜுன் இப்படத்தில் மூன்று கதாப்பாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், அல்லு அர்ஜுன் மற்றும் இயக்குநர் அட்லி இணைந்துள்ள படத்தின் அப்டேட் இன்று காலை 11 மணிக்கு வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது. இந்தப் படம் தமிழ் மற்றும் தெலுங்கு என இரு மொழிகளில் உருவாகி வருவதாக தெரிகிறது.



# 'மீசைய முறுக்கு 2' படத்தின் 'பப்பாளி பழமே' பாடல்

குஷ்பு சுந்தர் தயாரிப்பில், கடந்த 2017-ம் ஆண்டு ஹிப் ஹாப் ஆதி இயக்கி, நடித்திருந்த படம் 'மீசைய முறுக்கு'. இப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. தற்போது இப்படத்தின் இரண்டாவது பாகம் எடுக்கப்பட்டுள்ளது. முதல் பாகத்தைப் போலவே இதையும் ஹிப்ஹாப் தமிழா ஆதியே இயக்கி, இசையமைத்துள்ளார்.

இப்படத்தையும் குஷ்பு சுந்தரின் அவ்னி மூவிஸ் மற்றும் ஏ.சி. எஸ் அருண்குமாரின் பென்ஸ் மீடியா இணைந்து தயாரித்துள்ளன. இப்படத்தில் ஆதியுடன் இணைந்து பிரபல யூடியூபர் ஹர்ஷத் கான், சைத்ரா ஜே. ஆச்சார், கேத்திகா சர்மா, ரம்யா ரங்கநாதன், நாசர், கருணாஸ், ஷா ரா மற்றும் ஆடுகளம் நரேன் ஆகியோர் நடித்துள்ளனர்.

இளம் சென்சேஷனல் நடிகை கௌரி பிரியாவின் லேட்டஸ்ட் போட்டோஷூட்.. லவ்வர் திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் ஸ்ரீ கௌரி பிரியா. இதற்கு முன் தெலுங்கில் பல திரைப்படங்களில் நடித்திருக்கிறார்.

லவ்வர் திரைப்படத்தை தொடர்ந்து இவர் நடிப்பில் சமீபத்தில் வெளிவந்த படம்தான் ஹாப்பி ராஜ். இப்படத்திற்கு ஓரளவு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்த நிலையில், சென்சேஷனல் இளம் நடிகையாக வலம் வரும் கௌரி பிரியாவின் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன. வெள்ளை நிற சேலையில் எடுத்துக்கொண்ட போட்டோஷூட் புகைப்படங்களை கௌரி பிரியா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.



ஒலிம்பியா மூவிஸ் சார்பில் S அம்பேத்குமார் தயாரிப்பில், ஹேமநாதன் R இயக்கத்தில் R J விஜய், அஞ்சலி நாயர் நடிப்பில் இன்றைய நவீன கால "திருமண வாழ்வை" மையப்படுத்தி உருவாகியிருக்கும் திரைப்படம் "வைஃப்" (Wife). விரைவில் திரைக்குவரவுள்ள இப்படத்தின் முதல் சிங்கிள் பாடலான "நீ சாரல்" மெலடி பாடல் இன்று வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.இந்த இனிமையான பாடலை ஜென் மார்டின் இசையமைத்து, சுபலக்ஷினியுடன் இணைந்து பாடியுள்ளார். இயக்குநர் விஷ்ணு எடவன் இப்பாடலை எழுதியுள்ளார். மென்மையான இசையும், மனதை வருடும் வரிகளும் இணைந்து, "நீ சாரல்" பாடலை ஒரு அழகான காதல் மெலடியாக மாற்றியுள்ளது. வெளியான உடனே இந்தப் பாடல் இசை ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று சமூக வலைதளங்களில் டிரெண்டாகி வருகிறது. இன்றைய தலைமுறையில் திருமணத்திற்கு முன்பான காதலும், திருமணத்திற்குப் பின்பான காதலும் எப்படி இருக்கிறது என்பதையும், இன்றைய நவீன தம்பதிகளின் உறவுச்சிக்கலை மையப்படுத்தி அனைத்து தரப்பினரும் ரசிக்கும் வகையிலான ரொமான்ஸ் டிரமாவாக இப்படம் உருவாகியுள்ளது.இந்தப் படத்தில் R J விஜய், அஞ்சலி நாயர் நாயகன், நாயகியாக நடித்துள்ளனர். இவர்களுடன் மைத்திரேயன், ரெடின் கிங்ஸ்லி, அபிஷேக் ஜோசப், விஜய் பாபு, கல்யாணி நட்ராஜன், லல்லு, கதிர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். K.A. சக்திவேல் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்திற்கு தினேஷ் பொன்ராஜ் எடிட்டிங் செய்துள்ளார். சிவ சங்கர் கலை இயக்கம் மேற்கொள்ள, தினேஷ், அசார், ராதிகா ஆகியோர் நடன அமைப்பை செய்துள்ளனர். VFX பணிகளை ஹோகஸ் போகஸ் நிறுவனம் செய்துள்ளது.இப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் முடிந்த நிலையில் தற்போது இறுதிக்கட்ட பணிகள் பரபரப்பாக நடந்து வருகிறது. விரைவில் படத்தின் வெளியீட்டு தேதி அறிவிக்கப்படும்.

# வைஃப் திரைப்படத்தின் முதல் சிங்கிள் பாடல் வெளியீடு வைரலாகிறது.



# கர 2வது சிங்கிள் ரிலீஸ் அப்டேட்: இன்று வெளியாகும் புதிய பாடல் போஸ்டர்



நடிகர் தனுஷ் தற்போது, போர் தொழில் இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் நடித்து முடித்துள்ளார். இந்தப் படத்தில் நாயகியாக மமிதா பைஜுவும், முக்கிய கதாபாத்திரங்களில் நடிகர்கள் சுராஜ் வெஞ்சரமூடு, ஜெயராம் ஆகியோர் நடித்துள்ளனர். 'கர' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்க தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்தப் படம் வருகிற ஏப்ரல் மாத இறுதியில் வெளியிடப்பட இருக்கிறது. பட வெளியீட்டை ஒட்டி இந்தப் படத்தின் கதாபாத்திரங்களை அறிமுகப்படுத்தும் போஸ்டர்கள் கடந்த சில நாட்களாக அறிமுகம் செய்யப்பட்டன.

இதில், நடிகர் பிருத்வி பாண்டியராஜன் "முருகேசன்" என்ற கதாபாத்திரத்திலும், கே.எஸ். ரவிக்குமார் "கந்தசாமி" என்ற கதாபாத்திரத்திலும், ஸ்ரீஜா ரவி "தனம்" என்ற கதாபாத்திரத்திலும், மமிதா பைஜு "செல்லி" என்ற கதாபாத்திரத்திலும், கருணாஸ் "காசி மாயன்" என்ற கதாபாத்திரத்திலும், சுராஜ் வெஞ்சரமூடு "பரதன்" என்ற கதாபாத்திரத்திலும் நடிப்பதை படக்குழு உறுதிப்படுத்தி இருந்தது.

கர திரைப்படம் வருகிற ஏப்ரல் 30-ஆம் தேதி வெளியாக இருக்கிறது. இந்த நிலையில், கர திரைப்படத்தின் 2வது சிங்கிள் இன்று (ஏப்ரல் 8) வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இதுகுறித்த போஸ்டரும் வெளியிடப்பட்டுள்ளது.

அருள்தரும் தெய்வம்

விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை



• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு

CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


Sanjay
Cell: 90032 64920



Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424

WANTED
— MARKETING EXECUTIVES —
We are hiring **Marketing Executives** (Male/Female) for immediate openings.
**Full-Time / Part-Time**
**Salary: ₹30,000 - ₹50,000**
Open to all, including Retired / VRS candidates and Job Seekers.
**Location: All Over Tamil Nadu**



Contact: **7789941009**

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

WANTED
Site Supervisor required for construction work in Ambattur



Contact:
8428872887

keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com



ஸ்ரீவேணுகோபால் ஸ்டோர்ஸ்
சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!



RAVIKUMAR AND COMPANY



TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARING FROM Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை



பேப்பர்பாய் 8122664699

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.
**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.



www.enthunai.com 7871617005
support@enthunai.com 7789941009

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com




## நல்லது வளர்ந்தால்! அல்லவை மறையும்!

நன்மைகள் பெருகும் போது
தீமைகள் தானாகவே
விலகி விடும்!

ஒளியின் வருகையால் இருள்
மறைவதைப் போல நம்முள்
நேர்மறை எண்ணங்களை
வளர்த்துக்கொண்டால்
எதிர்மறையானது காணாமல்
போகும்!

நல்லது ஒன்றை நட்டு
வைத்தால் அல்லவைஅழியும்
வேரினிலே!

அன்பு வளரக் கோபம் சாகும்
பண்பு வளரப் பாவம் ஏகும்!

உள்ளம் திருந்தி உயர்வு
கண்டால் உண்மை
நிலைக்கும் உலகினிலே!

தூய எண்ணம்
துளிர் விடும் போது
தீய எண்ணம் திசை மாறும் !

நன்மை விதையை ஊன்றி
வைத்தால் புண்மை யாவும்
பொசுங்கிவிடும்!

நேர்மைப் பாதை நீளும் போது
நிழல்போல் வந்து வஞ்சம்
மாயும்!

உள்ளம் என்றும்
நந்தவனத்தில் நல்லது
பூத்தால் தீமை காய்ந்து
விடும்!

மலர்ந்த பூவின்
வாசத்தில்
மாசுயாவும் மறைந்து
விடும்!

நல்லது பெருகும்
உள்ளத்தில்
அல்லது தானாய்
அழிந்துவிடும்!
கல்வி வளர அறியாமை
கழியும் கருணை பெருக
வன்கொடுமை அழியும்!

நல்வழி ஒன்றை நாம் நாடிச்
சென்றால் புல்வழி யாவும்
புதைந்து ஒழியும்!

சிறு விளக்கு தோன்றினால்
செரிந்து நின்ற இருள் ஓடும்!

அறிவெனும் நதியோடினால்
அறியாமை மாகடல் வற்றும்!

நல்லது நெஞ்சில் கூடினால்
அல்லது தானாய் அற்றும்!

தூய நற்பயிரைத் துணிந்து
நட்டால் களைகள் அங்கே
சாய்ந்து விடும்!

நேயம் என்னும் மலர்கள்
பூத்தால் பகைமைச் சருகுகள்
காய்ந்து விடும்!

நல்வழியில் நடைபழகினால்
தீயவழி தடம் மாறும்!

உள்ளத்தில் அறம் நிறைந்தால்
கள்ளம் அங்கே நிலை
கொள்ளாது!

வெள்ளம் போல் அறிவு
பாய்ந்தால் பள்ளம் யாவும்
மிஞ்சாது!

கடலென நற்பண்பு பொங்கி
வரும் போது கானா நீரெனத்
தீமை மறையும்!



வல்லமை கொண்டு
அறத்தை வளர்த்தால்
அல்லவை யாவும்
அடியோடு தீரும்!

**பெ.திருமுகம்**
மணமேல்குடி

## சந்தேகம் !

கோவில் திருவிழாவில்....
'இரண்டு பவுன் தங்கச்
சங்கிலி கிடைக்கப்
பெற்றுள்ளது ...
உரிமையாளர்கள் ஆலய
அலுவலகத்தை தகுந்த
ஆதாரத்துடன் தொடர்பு
கொள்ளவும்... !"

இப்படி ஒரு அறிவிப்பு
ஒலிபெருக்கி மூலம்
வந்ததும்... பெண்கள்
மட்டுமல்ல ,ஆண்கள்
கூட தன் கழுத்தை ஒரு
நிமிடம் சந்தேகத்துடன்
வருடி பார்க்கத்தான்
செய்கிறார்கள்....

**எம்.பி.தினேஷ்.** கோவை

கண்களை உருட்டாமல்
காணும் தவளையின்
கருத்திலென்ன தோன்றுமோ

காளையின் கரத்தில்
சிக்குண்டு சிணுங்கும்
காரிகையின் காதலின்

ஆழம் அறிந்திடலோ
அளந்திடலோ அரிதினும்
அரிதென

அறிந்தவர் தெரிவாரிது
தெய்வீகத்திற்கும்
மேலென்றே

மேகங்களும் வியந்து
நமக்கெனவென்று நகர்ந்து
கலைந்ததும்

நிலவு தனக்குள் சிரித்து
மெல்லக் குளிர்ந்து வெட்கித்
தவித்ததும்

காரிருள் மெல்ல விலகி
நிலவின் குளிர் வீச்சில்
கவனிப்பதும்

கருத்தொருமித்த காதல்
பனிவிலகும் வரை
காத்திருந்து

பகலவன் வரவு கண்டு பிடி



தளர்ந்து
பிரியா விடை
பெறும்

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்



1.நீதிபதியின் கையால்
பேனா நிப்புக்கு கிடைத்தது
மரண தண்டணை.



2. தன்
தலையை
சீவிகொண்டு
மனிதர்களின்
அறிவை

கூர்மையாக்கியது பென்சில்.

**ஜயந்திசிவக்குமார்** திருச்சி

பேச்சுக்கள் இத்தனையையும்
தாங்கிக் கொள்கிறதுதான்
என் கைபேசி!

இருபுறமும் ஓடைகளோடிய
ஊரகச்சாலையில் எனது
பயணம்!

இடையிடை நீர் நிலைகளின்
ஆழ் பெருமூச்சு!

இடை நிற்றல் ஊர்களில்
நகரப் பேருந்து!

மன நெசவு கொண்ட
வேலைகளின் கரைவில்
நான்!

இயங்கு நேரம் மீறி என்னை
தத்துக் கொண்ட
அலுவலகம்!

எல்லை மீறா மக்கள்
சேவையின் இழைவில்
மனம்!

பணி முடிந்து கிளம்புகையில்
தாமதமும் உடன்
கைபிடித்து!

பனி போர்த்திய
காற்றலையில்
மிதந்துவந்த அவளின்



அடுத்த பேச்சு

செவி
சாய்க்கிறேன்
நான்!

**விமலன்.**

## இலக்கியம்

கடற்கரை மணலில்
காதலைக் குருடாக்கும்
ஐந்திணைக் காதல்...

நீங்கள் இருப்பதோ !
நெய்தல் நிலம்....

சிலப்பதிகாரத்தில் மாதவி
யாழினைத் தொலைத்த நிலம்

கணவனைப் பிரிந்த காதலர்
வாடும் கொடிய நிலம்...



அவர்கள்
விடுகின்றக்
கண்ணீர்த்
துளி உலர்ந்து
விடாமல்
இருக்க
கடலில்
கலக்கின்றனர்...


**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.

இட்டு நிரப்பிவிட
முடிவதில்லை
உன்னுடன் பேசாத
வருத்தத்தை.. என்ன என்று
அதட்டலாய்த்தான்



கேட்கிறாய்..
ஆனாலும்
குளிர்கிறது
நெஞ்சம்
குரல் கேட்ட
நிறைவில்.

**ரிஷபன்**



1. சில சமயங்களில் சில
நபர்களிடம் மௌனத்தை
கடைபிடிப்பது சிறந்தது
ஏனெனில் மௌனம்
எதையும் சாதிக்க வல்லது.

2. எதிரியிடம் பழகு ஆனால்
காரியவாதியிடம் பழகாதே

3. கூலி தொழிலாளியின்
மகனையும் நாற்காலியில்
அமர வைக்கும் வல்லமை
கல்விக்கு உண்டு

4. தற்புகழ்ச்சி என்பது
விற்பனையாக பொருளுக்கு
செய்யப்படும் விளம்பரம்

5. சட்டையின் முதல்
பட்டனை போடாதவனை
ஒழுங்கில்லாதவன்
என்று சொல்லும் சமூகம்
காலர் பட்டனையும் சேர்த்து
போட்டால் லூசு என்று
சொல்லும்

---------------------


1. ஓடியது போதும் என்று
ஓய்வெடுக்க எண்ணினேன்
ஓய்வெடுத்தது போதும்
ஓடுங்கள் என்றதுவாழ்க்கை

2. பெண்ணின் அன்பு போல்
சிறந்த மருந்தும் இல்லை
அவளின் நிராகரிப்பு போல்
சிறந்த தண்டனையும்
இல்லை

3. நேசிக்க யாருமே இல்லாத
போது தான் யோசிக்க
வைக்கிறது வாழ்க்கை

4. சோதனைகளை வெல்லத்
துணிந்தவன் தான்
சாதனைகளைஅள்ள
தெரிந்தவன்

5. அச்சம் இருக்கும் வரை
முன்னேற்றத்திற்கு
இடமில்லை
முயற்சி இருக்கும் வரை
பின்னடைவுக்கு இடமில்லை



தன்னம்பிக்கை
இருக்கும்
வரை
தோல்விக்கு
இடமில்லை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி





## மனிதகுணம்

அடித்தாலோ.. மிதித்தாலோ கொத்துவது பாம்பின் குணம்.!
அதன் வழியே போகவிட்டால் அதன் போக்கில் சென்றுவிடும்!

வேட்டையாடி கொல்லுவது புலியின் குணம்.. வெள்ளாந்தியாய்
அலைந்து மாமிசத்தை புசிக்காது மானின் குணம்!

பனிநீரை குடித்தப்படி பசும்புள்ளில் விளையாடி
பட்டுப்போல் குதித்தோடும் முயலின் குணம்!

ஆற்றினிலே குளத்தினிலே கால்வைத்தால்
வேட்டையாடும் முதலை குணம்.!

கூற்றுவனாய் காத்திருந்து குழிப்பறித்து
பாய்வதுவோ குள்ளநரி பிறவிக்குணம்!

ஓடுமீன் ஓட உருமீன் வருமளவும்
காத்திருந்து கொத்துவது கொக்கு குணம்!

உயர உயரப் பறந்தாலும் உச்சியிலே இருந்தபடி இரைகண்டால்
தவறாது தாக்குவது கழுகின் குணம்.!

ஊர்வன பறப்பன நகர்வன யாவினுக்கும்
வெவ்வேறு குணம் தந்தான் இறைவன்..

அனைத்தையும் ஒன்றிணைத்து.. அவன் ஒரு உருவம் தந்தான்..

நரியதன் சூழ்ச்சி.. தாவும் நாட்டியக் குரங்கின் அட்டகாசம்..
கரியதன் பிளறல்.. பதுங்கி இருந்து பாயும் புலியதன் பாய்ச்சல்
சோந்தியின் மாறும் தன்மை.. உருவமே மனிதனாக உலகிலே
இறைவன் படைத்தான்!

நன்மையும் அவனின் குணமாம்.. தீமையும் அவனின் குணமாம்..
உண்மையில் இறைவன் படைப்பில் அதிசயம் மனிதன்தானே.!

**வே.கல்யாண்குமார்.**

1. வலம்புரிச் சங்கின்/உள்ளிருந்து வருகிறது/கடலின் பாட்டு.

2. யாசகன் கனவிலும்/வராத வாசகம்/யாமிருக்க பயமேன்?

3. எட்டிப் பார்த்தேன்/தூக்கி விடச் சொன்னது/கிணற்றில் விழுந்த நிலா.

4. எச்சில்படுத்தப் பட்ட/ரூபாய் நோட்டுக்களை எண்ணிப்பார்க்கையில்/செத்துப்போனதுத் தீண்டாமை.

5. துக்க வீட்டிற்கு/சரியான வழியைக் காட்டியது/ஒலிபெருக்கியில் பாட்டு.

6. பருத்தி எடுப்பவளைப்/படுத்தி எடுத்தது/பட்டுச்சேலைக் கனவு.


7. நத்தையின் நீர்க்குடத்தை/நசுக்கி விட்டுப் போனது/தண்ணீர் லாரி.

8. மகாபாரதச் சொற்பொழிவு/எல்லோரும் வாய்பிளந்து கேட்டார்கள்/கண்ணனுக்கு மட்டும் அவல் கொடுத்தான் குசேலன்.

9. தட்டிக்கொண்டே செல்கிறது/நதி மூடியே கிடக்கின்றன/பாறையின் கதவுகள்.

10. உலை மூடியில்/தாளம் போடுகின்றன/நீராவியின் கைகள்.

இத்துளிப்பாக்கள் யான் இயற்றிவை எனும் உறுதிமொழி தரும் கவிஞர்:–
**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,** திருச்சிராப்பள்ளி



## காகிதத்தில் ஒரு வானவில்

உன்னைப் பற்றி எழுதுவதற்கு முன்னே வார்த்தைகள் என் முன்னே வந்து விடுகின்றன.
ஓரிரு வார்த்தைகளோடு முடித்து விடாதே எனக் கவிதைகள் என்னிடம் அடம் பிடித்துச் சண்டை இடுகின்றன.
எதுவும் தோன்றாத நிலையில் உன்னை நினைப்பேன்; பின் அந்தக் கவிதையை நிறுத்துவது கடினமாகப் போய்விடும்.
உன்னோடு பேசும் தருணங்களில், உனது புன்னகையைப் பற்றி நினைக்கும்போது, இனிமையான கூடல் காலங்கள் வார்த்தைகளால் வசப்பட்டு, வெட்கப்பட்டு என் வெள்ளைக் காகிதங்கள் வானவில்லின் நிறத்திற்குப் போகின்றன.
சிறு வார்த்தை மோதலில் விலகி நிற்கும் அந்த ஊடல் நாட்களை நினைக்கும்போது, வார்த்தைகள் கண்ணீரில் கரைந்து போய்விடும். என்ன எழுதுவது என்று தெரியாமல் பேனா மை கூட என் கூட சேர்ந்து அழுது தீர்க்கும்.
முடித்து விடலாம் என நினைக்கும்போதுதான் முட்டிக்கொண்டு வரும் சில அருமையான வரிகள். தொடரலாமா என நினைக்கும்போது, கருணையின்றி நீ தந்த காயங்கள் நினைவிற்கு வந்து வார்த்தையின் வழிப்போக்கை மாற்றிவிடும்.
ஊடலோ கூடலோ... உன்னோடு அது என்று நினைக்கையில்தான் மனதிற்குள் ஒரு நிம்மதி இருக்கிறது.
உடனே பேசினால் அது நான்... ஒரு வாரம் காலக்கெடு



கொடுத்துப் பேசினால் அதுவும் நான் தான்!


நான் மட்டுமே காதல் செய்வதும்
ஊடல் செய்வதும்
உன் பார்வையில் விளையாட்டு தானே..
வேடிக்கை பார் என் கண்மணி

**ஜனனி அந்தோணி ராஜ்.** திருச்சிராப்பள்ளி

# நூல் விமர்சனம்

**திறந்தே கிடக்கும் வீடு !**
**நூல் ஆசிரியர் கவிஞர் சி .பன்னீர் செல்வம் !**
**நூல் விமர்சனம் கவிஞர் இரா .இரவி !**



*மக்கள் கண்காணிப்பகம் ,6. வல்லபாய் சாலை ,சொக்கிகுளம் ,மதுரை 625002. விலை ரூபாய் 50.மின் அஞ்சல்info@pwtn.org தொலைபேசி 0452- 2539520.*

*நூல் ஆசிரியர் கவிஞர் சி .பன்னீர் செல்வம் அவர்கள் இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் உலக அளவில் நடத்திய கவிதைப் போட்டியில் வென்றவர் . முனைவர் இ .தேவசகாயம் அவர்களின் பதிப்புரை நன்று .*

*மனதில் பட்டதை கவிதையாக வடிக்கும் ஆற்றலும் ,துணிவும் பெற்றவர் .சமரசத்திற்கு இடமின்றி ரௌத்திரம் பழகி கவிதை வடிப்பவர் .உலகமயம் ,தாராளமயம் ,புதிய பொருளாதாரம் என்ற பெயரில் நாட்டை சீர்குலைத்து ,நதிகளை மாசு படுத்திய அவலத்தை பல்வேறு கவிதைகளில் சுட்டி உள்ளார் .*

**நதிகளைக் கழுவுதல் !**

*துர்நாற்றம் வீசும் கூவமா ! கூவத்துடன் போட்டி யிடும் வைகையா வணிகத்துக்குப் பலியான நொய்யலா கங்கை காவிரி யமுனையா மனிதக் கழிவுகள் சுமக்கும் பிற நதிகளா ? படைப்பாளிக்கு சமுகத்தின் மீது அக்கறை வேண்டும் என்பார் மாமனிதர் தி .க .சி . அவர்கள் .நூல் ஆசிரியர் கவிஞர் சி .பன்னீர் செல்வம்அவர்கள் சமுகத்தின் மீது அக்கறை உள்ளவர் .ஆனால் சில எழுத்து வியாபாரிகள் பச்சையும் கொச்சையும் எழுதி பணம் சேர்த்து வருகின்றனர் .அவர்களைச் சாடும் விதமாக உள்ள கவிதை நன்று .*

**விடுதலை !**

*விரசங்களையே விதம் விதமாக வாந்திஎடுத்துப் பணம் பண்ணும் காகித விபச்சாரம் இன்னும் கொடி கட்டித்தான் பறக்கிறது... நீதிமன்றங்களில் நீதி ஏழைகளுக்கு தாமதமாகவே கிடைக்கின்றது. தாமதமான நீதியும் அநீதிதான் .அதனை உணர்த்தும் கவிதை ஒன்று . அகலிகை - கண்ணகி -பாவ விமோசனம் ! காலம் காலமாக நீதி தேவதைகள் கண்களைக் கட்டியபடி நிற்கிறார்கள் ஒற்றை மார்பரிந்த கண்ணகி ஒற்றைக்கால் சிலம்புடன் சிலையாக !*

*பெற்றோர்களிடம் துணையிடம் பகிர்ந்து கொள்ள முடியாததையும் தோழமையிடம் நட்பிடம் பகிர்ந்து கொள்ள முடியும் .நட்பின் மேன்மை விளக்கும் கவிதை நன்று .*

**நல்ல நண்பன் !**

*நல்ல நண்பன் ஒவ்வொரு வரும் ஆயிரம் கரங்களுக்குச்சமம் வறுமைவளமை இன்பம் துன்பம் யாவினும் இளமை முதல் முதுமை முடிய அவர்களே வழிகாட்டி !*

*மனசாட்சி உள்ள மனிதா பிமானமுள்ள படைப்பாளிகள் யாவருமே ஈழத்தில் நடந்த தமிழ் இனப்படுகொலைகளைப் பற்றி எழுதாமல் இருக்க முடியாது .நூல் ஆசிரியர் கவிஞர் சி .பன்னீர் செல்வம் அவர்களும் ஈழக் கொடுமைகள் பற்றி எழுதி உள்ளார் பாருங்கள். ஒவ்வொரு கவிதையும் பெரிய கவிதைகள்தான் .நான் சுருக்கி முக்கிய வரிகள் மட்டும் எழுதி உள்ளேன் .*

**இன்றோ !**

*ஒரு குட்டித் தீவே வதை முகாமாகி ஓர் இனத்தையே நிர்முலமாக்க தனது போதி சத்துவத்தையே கழுவேற்றிக் கொண்டிருக்கிறது ! இட்லரையே சாப்பிட்டு ஏப்பம் விட்ட இந்நூற்றாண்டின் மாபெரும் கொலையாளி கொன்று குவிக்கத் தமிழன் தீர்ந்து போனதால் போர் முடிந்து விட்டதென அறிவிக்கின்றான் ! முட்டையில் மயிர் பிடுங்கிக் கொண்டிருக்கிறது சர்வதேசச் சமூகம் ! கோபம் தீங்கு என்பார்கள் .ஆனால் நூல் ஆசிரியர் கவிஞர் சி .பன்னீர் செல்வம் அவர்கள் நீதி வேண்டி நியாயம் வேண்டி கோபம் கொள்வது நியாயம் என்கிறார் .*

**சினம் கொளாமை !**

*கொலைகொள்ளை கற்பழிப்பும் சாதிமத இன ஒடுக்கல்களும் பசி வறுமைக் கண்ணீரும் பெருக்கெடுத்தோடும் பூமியில் சினம் கொளாமை பேரவலம் அன்றோ !*

*ஆற்றின் கரையோரம் நாகரிகம் தோன்றியது என்பார்கள் .ஆனால் இன்று நாகரிகத்தின் காரணமாக மூட நம்பிக்கை காரணமாக ஆறுகள் மாசாகி விட்டன .அந்த அவலம் சுட்டும் கவிதை .*

**பாழ் !**

*ஆறில்லா ஊர் பாழெனஎன்றோ சொன்னால் அவ்வை! ஆறிருந்தும் ஊர் பாழென இன்றைய இந்திய வாழ்வு கூறுகிறது ! வடபுலத்து நதிகளில் பிணங்களும் மனிதக் கழிவுகளும் மிதந்து செல்கையில் புனித நீராடுகிறார்கள்! தென்புலத்தின் நதிகளுக்கான யுத்தம் தொடர்கதையானது! பெரியாறும் காவிரியும் கனவு நதியாகிக் காத்திருக்கின்றன! மனித நேயத்தோடு கொடுமைகள் கண்டு கொதிக்கும் மனிதராக. மனசாட்சி உள்ள அற்புத மனிதராக உண்மையான நேர்மையான படைப்பாளியாக இருக்கும் நூல் ஆசிரியர் கவிஞர் சி .பன்னீர் செல்வம் அவர்களுக்கு பாராட்டுக்கள் .இந்த நூலை வெளியிட்ட மக்கள் கண்காணிப்பகத்திற்கும் பாராட்டுக்கள்.*






## நோயின்றி வாழவழித் தேடுவோம்.!

ஆரோக்யசாமிக்கு வயித்துவலி..
ஆனந்தராஜனுக்கு மண்டையிடி..
சுகந்தாவின் மேனிக்குச் சுகமில்லை.. சூரியாவின்
பார்வையிலேத் தெளிவுயில்லை.! இருதய நாதன் பெயர்..
இதயத்தில் ஓட்டை.. பலராமன் என்ற பெயர் மெலிந்த தேகம்..
கண்ணாயிரம் என்ற பெயர் ஒரு கண்ணே உண்டவர்க்கு. ஏன்
இந்த நிலை.. நோய் தந்த கொடை!

காசுக்கொடுத்து வாங்குகிறார் நோய்களை இன்று..!
கடைவீதியில் கிடைக்கிறது நோய்கள் இன்று..!
கொசுவளர்க்கும் தொழில்வளர்ச்சி சாக்கடைகள்..
குடிசைத் தொழில் ஆனதம்மா நோய் வளர்த்தல்.!

துரிதமாக போய்ச்சேர.. பாஸ்ட்டுப் புட்டு.. தூங்கும் நடு
இரவினிலே பிரேக்குப் பாஸ்ட்டு..! காலம்மாறி வேளைமாறித்
தின்னுப்புட்டு.. காலனுக்கு தன்னுயிரைக் கொடுத்துவிட்டார்.

பழையசாதம் நீராகாரம் களிஉருண்டை.. பாட்டி செய்த பலகாரம்
இட்டலிப் புட்டு.. தலைவாழை இலைஉணவு... சாம்பார் சாதம்..
சாப்பிட்ட காலமின்று மாறிப் போச்சு..!

பிரைடு ரைசு.. பிரட்டு டோஸ்ட்டு ஆப் ஆயில்..
பாவிமக வயித்துக்கு கோபி மஞ்சரி.. மைதாவில் செய்துதரும்
புரோட்டா கறி.. மனிதகுலத்தை எமலோகம் அனுப்பும் சதி..!

உணவுமுறை.. உண்ணும் நேரம், வாழும் சூழல்..
உடல் பயிற்சி நல்ல தண்ணீர் கிடைக்கா தேகம்..
கனவுகளில் காணுகின்ற சுகாதாரம்.. கண்டகண்ட
நோய்களுக்குக் காரணமாம்!



நோயிருந்து மக்களினைக் காக்க வேண்டும்..
நோயற்ற வாழ்வு நாம் வாழ வேண்டும்.. காயமே
இது மெய்யடா இதை உணர வேண்டும்..
நோயின்றி நூறாண்டு வாழ்வோம் வாரீர்.!

**வே.கல்யாண்குமார்**



வழியில் வந்து
வலி தர எண்ணாதே
இப்போதைக்கு
காதலில் விழுவதாக இல்லை!

கடந்து தானடி சென்றாய்
காதல் பட்டு போனது
எந்தன் மனசு!

கழுத்தில் சிலுவை
அணிந்தால் கிறிஸ்த்துவன்.
நெற்றியில் பட்டை இட்டால்
ஹிந்து. தலையில் குல்லா
அணிந்தால் இஸ்லாமியன்.
பிரபஞ்சமே கடவுள்
என்றால் பக்திமான்.
கடவுள் இருக்கிறார் என்று
சொன்னால் ஆத்திகன்
கடவுள்களே
இல்லையென்றால் நாத்திகன்.
இப்படி அடையாளங்களோடு
வாழும் உயிர்களே
எதனை இட்டுக் கொண்டால்,
அணிந்து கொண்டால்
நீங்கள் 'மனிதர்கள்' என்று
அழைக்கப்படுவீர்கள் .....?

சிலுவையில் அறைந்தாலும்
உயிர்த்தெழுவேன்
பழி,பாவங்களை
என் மீது சுமத்தினாலும்
கிருபையை மட்டுமே
தருவேன் ஜெபிக்கா
விட்டாலும் உங்களை
பேரன்போடு
காதலிக்கும்
இரட்சகன் நான்
என் இறப்பு கூட
உங்களுக்கு புனித
வெள்ளியாகட்டும்!
–இப்படிக்கு–
ஜீஸஸ் கிறிஸ்ட்

என் காதல் கதைக்கு
End Card போட
நான் உனக்கு
பரிசளித்ததையெல்லாம்
திரும்ப தருகிறாய்
எப்படி சொல்வேனடி?
முற்றுப் பெறாத என்
காதலுக்கு முடிவே கிடையாது
திரும்ப தருவதாக இருந்தால்
கடந்த கால
காதலை திரும்ப தா
உனக்கு கொடுத்த
முத்தங்களையெல்லாம்
மொத்தமாக தா
முடிவாக சொல்கிறேன்
கனவில் கூட
தள்ளி போகாத உன்னை
விட்டு போவேனா என்ன?

என்னை கை கழுவி போகும்
முன் உன் நினைவுகளையும்
முடிந்தால்
திரும்ப எடுத்துச் செல்!



தொலை தூர பேருந்தின்
பயணத்தின் போதும்
தொலையாமல்
கூடவே வருகிறது
உன் நினைவுகள்
ஒரு இளையராஜாவின்
இசையை போல!

**லி.நௌஷாத் கான்**



## கோடை விடுமுறை !

நெருங்கிவிட்டது கோடை
விடுமுறை... சொந்த
பந்தங்களின் படையெடுப்பால்
திக்கி முக்காடப்போகும்
உறவுகள்...


எரிபொருள் தட்டுப்பாடு...
விலைவாசி உயர்வு...
சுற்றுலா சென்றால் உணவு
தட்டுப்பாடு...
என்ற பிரச்சனைகள்...

உறவுகளுக்குள்
மனக்கசப்பை ஏற்படுத்தும்
காரண காரணிகளை
ஆராய்ந்து... நாம் ஒரு



அழையா
விருந்தாளியாக
உறவுகளுக்கு
சுமையை
ஏற்படுத்தாமல்
கோடை
விடுமுறையை
கழித்திடுவதே
சாலச்சிறந்தது !

**எம்.பி.தினேஷ்.** கோவை



நொடிப்பொழுதில் வரைந்து
விடுகிறது... மனம்..
உன்னை.. உன் சாயலில்
பெண்ணைக் கண்டதும்....

எதிர்ப்படும் முகங்கள்



யாவற்றிலும்...
நீயே
தெரிகிறாய்...
நினைவின்
அறைகளை நீ
மட்டும் நிரப்பிக்
கொண்டதால்....

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி




## கொடுப்பதிலிருந்து பெறுகிறோம்

ஆத்திரத்தை
தீர்த்துக்கொள்ள
சாஸ்திரம் பார்ப்பதில்லை
சன்மானம் கேட்பதில்லை,,,
வாழவரும் பெண்ணிடம்
மட்டும் குலம் கோத்திரம்
பார்க்கிறாய்
வருமானம் கேட்டு
வழக்குத்தொடுக்கிறாய்,,,

உழுதவன்
கணக்குப்பார்த்தால்
உலக்குக்கூட மிஞ்சாது
என்பார்கள்,,, பெண்ணவளும்
அப்படிதான்
கணக்குப்பார்த்தால்
பிரபஞ்சம்
பிறப்புரிமையற்றதாகிவிடும்,,,

திருமணம் அல்ஜிப்ரா
சூத்திரம்போல,,,,
சமன்சீர் செய்யாமல்
வாழ்க்கை எனும்
விடைக்கிடைக்காது
இதில் சீர் எதிர்பார்ப்பதால்



சீர்க்கெட்டுப்
போகிறது
சமுதாயம்,,,!
வாழ்க்கையை
கொடுப்பதி
லிருந்து
வாழ்வை
பெறுவோம்,,,

**நாகை ஆசைத்தம்பி**

## வெற்றி !

வெற்றி பெற வேண்டும் என்று வேண்டும் வெறி !
வெற்றி எளிதில் கிடைத்து விடாது என்பதை அறி !

வெற்றி எட்டும் கனி என்றே நீ நினைத்திடு !
வெற்றி எட்டாக்கனி என்று நீ நினைக்காதே !

விவேகமாகச் சிந்தித்து வேகமாகச் செயல்படு !
வேறு சிந்தனை விடுத்து ஒரே சிந்தனை செய்திடு !

தோல்வி நேருமோ ? பயத்தை விட்டுவிடு !
தோல்வியைத் துரத்துவேன் துணிவுடன் முடிவெடு !

பயிற்சி முயற்சி தளர்ச்சியின்றித் தொடர்ந்திடு !
அயற்சி இன்றி ஆர்வத்துடன் நடந்திடு !

என்றும் இஸ்டப்பட்டு செயலில் இறங்கு !
என்றும் கஷ்டப்பட்டு செயலில் இறங்காதே !

எனக்கு வரும் என்றே நீ நினைத்திடு !
எனக்கு வராது என்று நீ நினைக்காதே !

என்னால் முடியும் என்றே நீ நினைத்திடு !
என்னால் முடியாது என்று நீ நினைக்காதே !

முடியாது என்று எடிசன் நினைத்து இருந்தால் !
முற்றிலும் இருட்டாகவே இருந்திருக்கும் உலகம் !

முடியாது என்று காந்தியடிகள் நினைத்து இருந்தால் !
முழுசுதந்திரம் இன்றி அடிமையாகவே இருந்திருக்கும்!

முடியாது என்று பெரியார் நினைத்து இருந்தால் !
மூட நம்பிக்கையில் நாடு மூழ்கியே இருந்திருக்கும்!

முடியாது என்று ஆம்ஷ்டிராங் நினைத்து இருந்தால் !
முழு நிலவு மனிதன் கால் படாமலே இருந்திருக்கும்!

முடியும் என்று முயன்றதால்தான் எல்லோருக்கும்
முடிந்தது சாதனைகள் எளிதாக சாத்தியமானது !

முடியும் என்று நீயும் உடன் முயன்றால்தான் !
முடியும் உன்னால் உலகில் சாதிக்க முடியும் !



தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்து எறி !
தன்னிகரில்லாதவன் நீ என்பதை அறி!

தன்னம்பிக்கை மலையளவு இருக்கட்டும் !
நன் நம்பிக்கை கடலளவு இருக்கட்டும் !

இறுதி செய்யப்பட்ட வெற்றி உனக்கு உறுதி !
பரிதியாகப் பயணம் தொடரு சிகரம் உனது !

**கவிஞர் இரா .இரவி !**



## கனவு இல்லம் !

கிரஹப்பிரவேசம்
காணாமலே...
நிறுத்தப்பட்டு விடுகின்றன..
வங்கிக் கடனால்
பாதிக்கப்பட்ட பல கனவு
இல்லங்கள் !

## திருமணம் !

நிச்சயதார்த்தம் முடிவுற்ற
பிறகு... தினமும் இரவும்,
பகலுமாய் கைப்பேசியில்
பேசிக்கொள்ளும்
ஜோடிகள்... கருத்து
மோதல்களால் திருமணம்
காணாமலே உறவை
முறித்துக் கொள்வதும்
சகஜமே !

**எம்.பி.தினேஷ்**
கோவை



## வெயில்..... !

ஆதவனுக்கு என்ன கோபமோ
சுட்டெரிக்கிறது...
கோடை வெயில்....

விசிறி விற்பவரும். குச்சி ஐஸ்
விற்பவரும்... குளிர்பானங்கள்
விற்பவரும்...
சந்தோச முகங்களாய்...

குடிநீருக்காக காலி
குடங்களுடன் வரிசையாய்
காத்திருக்கும் மக்கள்..
கருகிப்போன பயிர்களை
கண்டு மனம் வெதும்பும்
விவசாயிகள்...
சுட்டெரிக்கும் கோடை
வெயிலில் வனத்தில்
நீரின்றி நகரத்தை
நோக்கி படையெடுக்கும்
வனவிலங்குகள்....

இவையெல்லாம் கோடை
காலத்தின் சாபங்கள்....

சாலையோரத்தில் மரங்கள்
ஆக்கிரமித்திருந்த காலம்
கோடையை குளிர்வித்த
காலம்...

இன்று கான்கிரீட்
கட்டிடங்களும்...
இரண்டடுக்கு மூன்றடுக்கு
மேம்பாலங்களும்... ஆறு
வழிச்சாலை எட்டு வழி சாலை
புறவழிச்சாலை
என மரங்களை
வேரறுக்கப்பட்டதன்
விளைவு...

இருக்கும் சிறு மரங்கள் கூட
இறந்து போன மரங்களுக்காக
மௌன அஞ்சலி செலுத்தும்



விதமாய் அசையாது
நின்கின்றன....

என் செய்யப்
போகிறதோ வருங்கால
சந்ததிகள்....

**எம்.பி.தினேஷ்**கோவை

## சுகாதாரம் காப்போம்!

அறுசீர் மண்டிலம்.

நலவாழ்வை நோக்கி
நகர்வோம் நாளும்தான்
சுத்தம் புரிவோம்!
இளம்பிள்ளை வாதம்
தடுப்போம் எதிர்கால இன்பம்
கொடுப்போம்!
ஒளிமயமாய்ச் சூழல்
அமைப்போம் ஒன்றுகூடி
வாழ்வைச்சமைப்போம்!
களிப்பான தூய்மை
கொள்வோம் காலமெலாம்
சுத்தம் வெல்வோம்!

அறிவியலில் துணையாய்
நிற்போம் அன்றாடம் எல்லாம்
கற்போம்! செறிவோடு ஞானம்
பெறுவோம் செழிப்போடு
வாழ்வை உறுவோம்!
நெறிமுறைகள் கண்டே
உயர்வோம் நெஞ்சார
ஒன்றாய் இணைவோம்!
அறிவுதனை விரிவு
செய்வோம் அகிலத்தில்
தூய்மை காப்போம்!

## ஈரமாயிரு!

அறுசீர் மண்டிலம்.

ஈரமான நெஞ்சு வேண்டும்
இனிமையான பேச்சு
வேண்டும்கூர்மையான
அறிவு வேண்டும்
கொஞ்சுதமிழ் எங்கும்
வேண்டும்! சீர்மையான
நன்மை வேண்டும்
செழிப்பான நாடு



வேண்டும் நேர்மையான
ஆட்சி
வேண்டும் நிம்மதியாய்
இல்லம் வேண்டும்!

மழலைகளில் ஈரம்
வேண்டும் மாதாவில் ஈரம்
வேண்டும் உழவரிலே ஈரம்
வேண்டும் உறவினிலே ஈரம்
வேண்டும்! தழைப்பான நட்பு
வேண்டும் தாங்குகின்ற சக்தி
வேண்டும் உழைப்பினிலே
ஈரம் வேண்டும்
உன்னதமாய் வாழ வேண்டும்!

## அச்சமின்றி வாழ்தல் அழகு!

அறுசீர் மண்டிலம்.

அச்சமின்றி வாழ்தல் நன்று
அஞ்சாமல் வாழ்தல் நன்று
இச்சையினை நீக்கல்
நன்று ஈகையினைக்
கொள்ளல் நன்று!
நச்சரிப்பு இன்றி வாழ்தல்
நாளும்தான் நன்று நன்று
உச்சத்தில் வாழ்ந்திட்டாலும்
உன்னதமாய் வாழ்தல் நன்று!

யாருக்கும் அஞ்ச வேண்டாம்
யாரிடமும் அச்சம் வேண்டாம்
சீருடன் வாழ்ந்திட்டாலே
செழிப்பன்றோ தானாய்
நிற்கும்! ஊருடன் ஒத்து
வாழ்ந்தால் ஒழுங்கான
வாழ்வே காணும்
பேருடனே புகழும் கிட்டும்
பீடில்லா அச்சம் நீக்கு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



உன்னிசையில் ஒலிக்கின்ற அதிர்வுகளாலே
என்னிதயம் துடிக்கின்றது அதனாலே
கண்ணிரண்டும் மயங்குகின்ற நினைவுகளாலே
என்னுயிரும் ஒடுங்குகின்றது அதனாலே

நினைவதனில் ஒடுகின்ற ஜீவன்களாலே
நிலைக்கும் உயிரும் ஒன்றுகின்றது அதனாலே
குழலில் இசையில் இசைக்கின்ற அழைப்புகளாலே
மனமும் மயங்கி சரிகின்றது அதனாலே

உடலுமுயிரும் காதலினால் இணைந்ததினாலே
உறவுமுறுதி நிலைக்கின்றது அதனாலே
கண்ணாநீயும் இதயத்திலே அமர்ந்ததனாலே
காதலிணைவில் மகிழ்கின்றது அதனாலே

இசைக்கும் ஒலியும் கிளர்கின்ற காமத்தினாலே
இசையும்வேண்டா தடுக்கின்றது அதனாலே
கண்ணும் மயங்கி மூடுகின்ற இன்பத்தினாலே
துடியிடையும் வளைகின்றது அதனாலே



உறவில்மயங்கி உணருகின்ற உயிர்துளியாலே
உயிரும் உருகி கனிகின்றது அதனாலே
கண்ணன்ராதை காணுகின்ற காட்சியினாலே
உலகமின்பம் நிறைகின்றது அதனாலே....

**Bhanumati Nachiyar**



## சிந்தாமல்....சிதறாமல்....


நீ எப்பொழுது
எந்த நேரத்தில்
என்னைக்காண வந்தாலும்
அது எனக்கு
இனிய உதயம் தான்!
சிந்தாமல்.... சிதறாமல்....
நீ வழங்கும் மு த் த ங் க ள்
ஒவ்வொன்றும் எனக்கு
நம் வேலூரி(ல்)ன் புகழ் பெற்ற
குலாப் ஜாமுன் தான்!
என்னதான் நீ
தணிக்கை
அதிகாரியாக
இருப்பினும்
முத்தங்களின்
எண்ணிக்கை(யை)
காண்பித்துக்
குறைப்பது
கா த லு க் கு மட்டுமல்ல
நம் மனதிற்கும் கூட அது
அழகல்ல! உன்
வருகையின் போதெல்லாம்
வந்தனம் சொல்லும்
கா த ல் நீ

விடை பெற்றுச் செல்லும்
போது மட்டும்
சர்க்கரைப் பிரச்சனைக்குப்
பாகற்காய்ச்சாறு குடித்தாற்
போலாகிறது!
உன் இனிய உதயத்திற்குப்



பின்(தான்) ஓடு
தளத்திலிருக்கும்
விமானமாகப் பறக்கத்
தொடங்குகிறது
எ ன் கா த ல் இ த ய ம்!

**முத்து ஆனந்த்** வேலூர்


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


Happy Birthday
G. Manjari
Wishing you a day filled with love and joy!


PLOT SALE
ORAGADAM 11L to 23L
TAMBARAM 51L to 69L
OMR 26L to 51L
ECR 52L to 75L
9626777627


முனீஸ்வரர் துணை
கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
20% OFF
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget ⇨ We Show Your Home
Call:7871617005


Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Happy 60 Birthday!
Wishing you the happiest and brightest day ever! May you have all the happiness your heart can hold
ஓ.கே.சிவா


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


•WANTED•
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
Salary: ₹10,000 - ₹15,000
Attractive Incentives
Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005



SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Package Rs. 4.8 LPA
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager - Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889


WANTED:
செக்யூரிட்டி
வேலைக்கு
ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview


உங்களின் ஒளிமயமான
எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்
கைரேகை ஜோதிடம்
முகக் குறிப்பு
கண் பார்வை கணிப்பு
வீடு மனை வாங்க விற்க அணுகவும்
Sale
நல்ல நேரங்கள் கணிப்பு
ராகு காலங்கள் பற்றிய தெளிவு
இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962
கவனத்தில் கொள்க:
• குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
• இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
• எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009

# பல்சுவை களஞ்சியம்






# என்னென்ன காய்கறி எப்படி பார்த்து வாங்க வேண்டும்?

1. வாழை தண்டு: மேல் பகுதி நார் அதிகம் இல்லாமலும் உள்ளிருக் கும் தண்டு பகுதி சிறுத்தும் இருப்பதாக பார்த்து வாங்க வேண்டும்.

2. வெள்ளை வெங்காயம்: நசுக்கினாலே சாறு வரும்படி இருக்க வேண்டும்

3. முருங்கைக்காய் : முருங்கைக் காயை கட்டை மற்றும் ஆட்காட்டி விரல்களை பயன்படுத்தி சிறிது முறுக்கினால், எளிதாக வளைந் தால் அது நல்ல முருங்கை காய்

4. சர்க்கரை வள்ளிகிழங்கு: உறுதியான கிழங்கு இனிக்கும், அடி பட்டு கருப்பாக இருந்தால் கசக்கும்

5. மக்கா சோளம்: இளசாகவும் இல்லாமல் ரொம்பவும் முற்றாமல் மணிகளை அழுத்தி பார்த்தால் உள்ளே இறங்காமல் இருந்தால் அதுநல்ல மக்காச்சோளம்.

6.தக்காளி: தக்காளி நல்ல சிவப்பில் தக்காளி இருந்தால் அதை வாங்கலாம் (குறிப்பு பெங்களூர் தக்காளி ஒரு வாரம் ஆனாலும் கெடாது இருக்கும்).

7. கோவைக்காய் : முழுக்க பச்சையாக வாங்க வேண்டும். சிவப்பு லேசாக இருந்தாலும் வாங்க வேண்டாம். பழுத்து ருசி இல்லாமல் இருக்கும்

8. சின்ன வெங்காயம்: பழைய வெங்காயம் வாங்குவதே நல்லது. இரண்டு பல் இருப்பதாக, முத்து முத்தாக தெளிவாக இருப்பதை வாங்கவும்

9. குடை மிளகாய் : தோல் சுருங்காமல் fresh ஆக இருப்பதை வாங் கவும். கரும்பச்சையில் வாங்கவேண்டாம். அடிபட்டிருக்கும். எல்லா நிற குடை மிளகாய்களும் ஒரே சுவையில் தான் இருக்கும்

10. காலிபிளவர்: பூக்களுக்கிடையே இடைவெளி இல்லாமல் அடர்த் தியாக காம்பு தடினமனாக இல்லாமல் வாங்கவும்

11. மாங்காய்- தேங்காயை காதருகே வைத்து




தட்டி பார்ப்பது போல மாங்காயும் தட்டி பார்க்கவும். சத்தம் வரும். அத்தகைய மாங்காயில் கொட்டை சிறிதாக இருக்கும்

12. பீர்க்கங்காய் ( நார்ச்சத்து உள்ள மிக நல்ல காய் இது ) : அடிப் பகுதி குண்டாக இல்லாமல் காய் முழுதும் ஒரே சைசில் இருக்கு மாறு பார்த்து வாங்குவது நல்லது

13. பரங்கிக்காய் கொட்டைகள் முற்றியதாக வாங்கவும்

14. புடலங்காய் : கெட்டியாக வாங்கவும். அப்போதுதான் விதைப்பகு தி குறைவாக, சதை பகுதி அதிகமாக இருக்கும்

15. உருளை கிழங்கு: முளை விடாமல் பச்சை நரம்பு ஓடாமல் கீறி னாலே தோல் உதிர்ந்து பெயர்ந்து வர வேண்டும்

16. கருணை கிழங்கு: முழுதாக வாங்கும் போது பெரியதாக பார்த்து வாங்குவது நல்லது. வெட்டிய கிழங்கை



விற்றால், உள் புறம் இளம் சிவப்பு நிறத்தில் இருக்குமாறு பார்த்து வாங்கவும்

17. சேப்பங்கிழங்கு : முளை விட்டது போல் ஒரு முனை நீண்டிருக் கும் கிழங்கு சமையலுக்கு சுவை சேர்க்காது. உருண்டையாக பார் த்து வாங்கவும்

18. பெரிய வெங்காயம் மேல் (குடுமி) பகுதியில் தண்டு பெரிதாக இல்லாமல் பார்த்து வாங்கவும்

19. இஞ்சி: லேசாக கீறி பார்க்கும் போது தோல் பெயர்ந்து வருவது நல்லது. நார் பகுதி குறைவாக இருக்கும்

20. கத்திரிக்காய்: தோல் softஆக இருப்பதுபோல் பார்த்து வாங்கவும்

21. சுரைக்காய் : நகத்தால் அழுத்தினால் நகம் உள்ளே இறங்க வேண்டும். அப்போது தான் இளசு என்று அர்த்தம்

22. பூண்டு: பல் பல்லாக வெளியே தெரிவது நல்லது. வாங்கலாம்

23. பீன்ஸ் பிரன்ச் பீன்ஸில் நார் அதிகம். புஷ் பீன்ஸில் நார் இருக் காது. தோல் soft- ஆக இருந்தால் சுவை அதிகமாய் இருக்கும்

24. அவரை: தொட்டு பார்த்து விதைகள் பெரிதாக இருக்கும் காய்கள் தவிர்ப்பது நல்லது. இளசாக வாங்கினால் நார் அதிகம் இருக்காது

25. பாகற்காய்: பெரிய பாகற்காயில் உருண்டையை விட, தட்டையா ன நீண்ட காய் நல்லது

26. வாழைப்பூ : மேல் இதழை விரித்து பூக்கள் கருப்பாகாமல் வெளி ர் நிறத்தில் இருக்கிறதா என பார்க்கவும். அப்படி இருந்தால் பிரெஷ் காய் என்று அர்த்தம்

27. மொச்சை :கொட்டை பெரிதாக தெரியும் காய் பார்த்து வாங்கவும்

28. சௌசௌ : வாய் போன்ற பகுதி விரிசல் பெரிதாக இல்லாத படி பார்த்து வாங்கவும். விரிசல் இருந்தால் முற்றிய காய்

29. முள்ளங்கி: லேசாக கீறினால் தோல் மென்மையாக இருந்தால் அது இளசு- நல்ல காய்

30. வெள்ளரி மேல் நகத்தால் குத்தி பார்த்தால் நகம் உள்ளே இறங்கி னால், நல்ல காய். விதைகள் குறைவாக இருக்கும்

31. பச்சை மிளகாய் : நீளமானது சற்று காரம் குறைவாக இருக்கும். சற்றே குண்டானது தான் காரம் தூக்கலாக வாசனையும் பிரமாதமாக இருக்கும். நல்லது மற்றும் நல்லது மட்டுமே

**கவிதா சரவணன்.**

# மீம்ஸ்







# விடுகதை



| | |
|---|---|
| இவனும் ஒரு பேப்பர் தான் ஆனால் மதிப்போடு இருப்பான் அவன் யார்? | பணம் |
| வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை அது என்ன? | செருப்பு |
| ஒற்றை கால் மனிதனுக்கு ஒன்பது கை அது என்ன? | மரம் |
| தாகம் தீர்க்கும் தண்ணீர் சொம்பு அந்தரத்தில் தொங்குது அது என்ன? | இளநீர் |
| சின்ன கதவுகள், லட்சம் முறை மூடி திறந்தாலும் ஓசை வராத கதவுகள் அது என்ன? | கண் இமைகள் |
| எண்ணெய் குடித்துவிட்டு ஏழு கடல் தாண்டுவான் அவன் யார்? | விமானம் |

# ஜோக்ஸ்



தொண்டர் 1: "தேர்தல்ல தோல்வி அடையாமல் இருக்க என்ன வழி?"

தொண்டர் 2: "போட்டி போடாமல் இருந்திடறதுதான் ஒரே வழி!"

==========================================

"சுவரில் எழுதாதே'ன்னு இருந்தது. நான் போயி..."

"என்ன செய்தே?"

" 'சரி எழுதலை'ன்னு எழுதிட்டு வந்திட்டேன்"

===============================================

ஆசிரியை : "ஒரு ரூபாய்க்கு ஒரு ஆப்பிள், அப்படின்னா பத்து ரூபாய்க்கு எத்தனை ஆப்பிள்?"

மாணவன்: "ஒரு ரூபாய்க்கு எந்த கடையில ஆப்பிள் விற்குதுன்னு சொல்லுங்க, நான் போய் வாங்கி வறேன்"

==========================================

"ஏனப்பா கால் கை நல்லாத்தானே இருக்கு, இப்படி உட்கார்ந்து பிச்சை எடுக்கலாமா?"

" 'உடம்பை ரொம்ப அலட்டக்கூடாது'னு டாக்டர் சொல்லிட்டார் சார்"

==========================================

"இந்த விவாக மேடையில் மணமக்களையே காணோமே?"

"இது விவாக மேடை இல்லை தலைவரே; 'விவாத மேடை' !

==========================================

****************

மிருகக் காட்சி சாலையில் புலி ஒன்று, பார்வையாளரில் ஒருவனைக் கொன்றுவிட்டது. அதைக் கண்டு பக்கத்து கூண்டில் இருந்த எலி கேட்டது. எதுக்கு அவனைக் கொன்னேனு...

புலி : அந்தப் பரதேசி நாய் மூணு மணி நேரமா என்னைப் பார்த்துச் சொல்றான் "எவ்ளோ பெரிய பூனை"ன்னு.

************

காதல் என்பது கரண்ட் போன நேரத்துல வர கொசு மாதிரி...

தூங்கவும் முடியாது...




தூரத்தவும் முடியாது....

************

அம்மா: என்னடா... இன்னிக்கு ஸ்கூல்ல இருந்து இவ்வளவு சீக்கிரமா வந்துட்டே?

பையன்: எங்க மிஸ் ஒரு கேள்வி கேட்டாங்க, நான் மட்டும் தான் பதில் சொன்னேன்.

அம்மா: (சந்தோசமாக) என்ன கேள்வி கேட்டாங்க?

பையன்: யார்ரா அது மிஸ் மேல சாக்பீஸ் அடிச்சதுன்னு கேட்டாங்க.

************

மனைவி : என்னங்க பாருங்க உங்க பையன் பாடப்புத்தகத்தை எப்படிக் குதறி வச்சிருக்கான்னு?

கணவன் : நான் தான் சொன்னேனே, அவன் படிப்புல புலின்னு.

************

கணவன்: எனக்கு கால் வந்த நான் வீட்ல இல்லன்னு சொல்லு! கொஞ்ச நேரம் கழித்து மொபைலில் கால் வருகிறது...

மனைவி: ஹலோ! என் கணவர் வீட்ல தான் இருக்கார்!

கணவன்: ஏண்டி அப்படி சொன்ன?

மனைவி: அது என்னோட லவர்!
கணவன்: ?!?.....






அம்மா வாத்து நீந்துது
ஆழமான குளத்திலே
அல்லித்தண்டு நடுவிலே
அம்மா வாத்து நீந்துது..

அம்மா பார்த்து நீச்சலை
அழகாய்க் கற்று நீந்துங்கள்
அப்பா வாத்து சொல்லவே
குஞ்சு வாத்துகள் நீந்துது..

கொஞ்சம் தடுமாறியும்
கொஞ்சம் மூழ்கித் திணறியும்
குட்டி உடம்பை நெளித்தே
குஞ்சுகள் நீந்திப் பார்க்குது..

நீச்சல் பழகிப் பிழைக்கணும்
நித்தமும் நீந்திப் பழகணும்...
அச்சமின்றி நீந்தணும்
அன்பாய்ப் பேசிக்
களிக்கணும்..
குளமே நமக்கு குருகுலம்
உளமே நமக்கு ஆசிரியர்
நீச்சல் தெரியா உலகத்திலே
நித்தம் வாழ்வது அச்சமே.
நீச்சல் நீச்சல் நீச்சல்
நீச்சல் நீச்சல் வாழ்கவே...

-ஹரணி
தஞ்சாவூர்



விளையாடு கண்ணே
விளையாடு
விளையாட்டில் கூட
வேண்டாம் பொய்யே...

பொய்யே என்றும் கேடு
தரும்..
மெய்யே நாளும் நன்மை
தரும்..

பொய்யைக் கற்றால்
விடமாகும்
பொய்யைப் பேசினால்
அழிவாகும்..
உண்மை என்பது உயர்வாகும்

பொய் என்பதோ
பூதமாகும்..

பொய்யே பேசும்
யாரிடமும்
விலகி நீயும்
ஓடிவிடு..

தொற்று நோயைப் போலத்
தொற்றி விடும்
துன்பம் அள்ளி நிறைய
போட்டு விடும்..

-ஹரணி
தஞ்சாவூர்

## விடியற்காலை!



விடியற் காலை எழுந்திரு
வினைகள் எல்லாம் முடித்திடு
படிப்பை முதலில் தொடங்கிடு
பண்பை அதிலே பதித்திடு!

ஒழுக்கம் தம்மில் உயர்ந்திடு
ஒற்றுமை தம்மில் நிலைத்திடு
பழக்க வழக்காம் காத்திடு
பாசந் தன்னில் சேர்ந்திடு!

பெற்றோர் தம்மை வணங்கிடு
பெருமை தம்மில் சிறந்திடு
கற்றோ ராக மாறிடு
கனிவாய் நீயும் வாழ்ந்திடு!

முனைவர்
இராம.வேதநாயகம்



# நல்ல யோசனை....



பிரபல நடிகர் தமிழ் வேந்தனின் ரசிகர் கள் அவரது பிறந்த நாளை ஆண்டுதோறும் தடபுடலாகக் கொண்டாடுவது வழக்கம். அதேபோல இந்த ஆண்டும் நடிகர் தமிழ்வேந்தனின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு பல வண்ணங்களில் ஆளுயர போஸ்டர்கள், அம்பதடி நீளத்துக்கு வண்ணப் பேனர்கள் மற்றும் ரசிகர் மன்றக் கொடியை ஊரெங்கும் ஏற்றி வைத்தல் என சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டும் சிறப்பாக க் கொண்டாடுவதற்கு ரசிகர்களிடமும் பொது மக்களிடமும் நிதி திரட்டி வைத்திருந்தனர்.

தங்களது பிரியமான நடிகரின் பிறந்த நாளுக்கு இன்னும் பத்து தினங்களே இருந்த நிலையில் சென்னையில், ஒரு அரசியல் கட்சியினர் வைத்திருந்த பெரிய பேனர் காற்றில் விழுந்து, அதில் இரண்டு பேர் எதிர்பாராத நிலையில் இறந்து போனதால், நடிகர் தமிழ் வேந்தன், தன்னுடைய பிறந்த நாளை பேனர் வைத்துக் கொண்டாடவேண்டாம் என்று தனது ரசிகர்களுக்கு பத்திரிகை வாயிலாக அறிக்கை கொடுத்திருந்ததைப் பார்த்து, ரசிகர் மன்ற நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்தனர். பொதுமக்களிடம் பிறந்த நாளைக்காக வசூல் செய்த பணத்தை என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் ரசிகர் மன்றத்தின் அவசரக்கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

பரபரப்பாக நடந்த கூட்டத்தில் ரசிகர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைத் தெரிவித்தனர். கடைசியாக செயலாளர் சந்திரமோகன் சொன்ன யோசனையை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

அதன்படி நகரிலுள்ள அரசுப் பள்ளியில் தமிழ் வேந்தன் ரசிகர் மன்றத்தினர், பழுதடைந்த நிலையிலிருந்த கழிவறையை சுத்தம் செய்து, புதிய வர்ணமடித்து புதியகதவுகள், புதிய வாளிகள் மற்றும் தரைத்தளத்தை புதுப்பித்துக் கொடுத்தனர். இந்த சிறப்பான சேவைக்கு பொதுமக்களும் ஆசிரியர் பெருமக்களும், மாணவர்களும் ரசிகர் மன்ற நிர்வாகிகளை நேரில் சந்தித்து பாராட்டி மகிழ்ந்தனர்.



தமிழ்ச் செம்மல்
-நன்னிலம் இளங்கோவன்.

## அன்போடு!





அன்போடு வாழ்வோம்
என்றும்
அன்போடு வாழ்வோம்!
பண்பிலே சூழ்வோம்
என்றும்
பண்பிலே சூழ்வோம்!
(அன்போடு)

அறத்தையே செய்வோம்
என்றும்
அறத்தையே செய்வோம்!
மறத்துடன் வாழ்வோம்
என்றும்
மறத்துடன் வாழ்வோம்!

(அன்போடு)

புகழுடன் வாழ்வோம்
தோன்றும்
புகழுடன் வாழ்வோம்!
பகையினைக் கொல்வோம்
என்றும்
பகையினைக் கொல்வோம்!
(அன்போடு)

முனைவர்
-இராம.வேதநாயகம்.

## உழவனே உலகம்.

உலக உயிர்கள் வாழ்ந்திடவே
உழைக்கும் உன்னதன் யாரு?
ஏரு தூக்கி நடைபோடும்
எங்கள் உழவன் அவன்பாரு!

வரப்பினைச் சீர் ஆக்கிடுவான்!
வயலில் விதையை
விதைத்திடுவான்!
களைகள் பறித்துச்
செடியைத்தான்
காத்து நமக்குத் தந்திடுவான்!

நன்செய் புன்செய் நிலமெங்கும்
நாற்றுகள் வாழச் செய்திடுவான்!
இயற்கை உரத்தைத் தூவித்தான்
இன்பம் நமக்குத் தந்திடுவான்!

அறுவடைக்கு ஆள் சேர்த்து
களத்தில் கொண்டு
நிறைத்திடுவான்!
தானியங்கள் வீடு சேர்ந்திட
நலத்தில் விருப்பம் காட்டிடுவான்!

உழவன் ஒருவன் இருப்பதாலே
உலகம் இன்றும் சுழல்கிறதாம்!
உழவர் வாழ்க்கை உயர்ந்திடவே
உற்ற துணையாய்
இருந்திடுவோம்!



மு.மகேந்திர பாபு,
தமிழாசிரியர்,
இளமனூர், மதுரை.

## வேப்பமரமும்... சிறுவனும்



வேப்பமரம் ஒன்றின் கீழே அமர்ந்து ராமன் அழுது கொண்டிருந்தான். அதைக் கண்ட மரம் தம்பி ஏன் அழறே என்றது. அதற்கு ராமன் எனக்கு யாரையுமே பிடிக்கவில்லை. காலையில் எழுந்ததுமே முதலில் பல் தேய்த்துவிட்டு வா என அம்மா அதட்டுகிறாள். பின் அப்பா காலை எழுந்ததும் படிப்பு. உன் பள்ளிப் பாடங்களைப் படி என்று கண்டிக்கிறார். பின் குளித்து முடித்து பசிக்கலை என்று சொன்னால் அம்மா திட்டி சாதம் சாப்பிடச் சொல்கிறாள். பள்ளிக்கு வந்தாலோ பாடம் படிக்கலைன்னும், பாடம் சொல்லிக் கொடுக்கும்போது வேடிக்கைப் பார்க்கக்கூடாது என்று டீச்சர் திட்டராங்க. எல்லாருமே என்னை நாள் முழுக்க திட்டிக்கிட்டேயிருக்காங்க. எனக்கு யாரையுமே பிடிக்கலை என்றான் அழுது கொண்டே. வேப்பமரம் என் இலைகளை நீ சாப்பிட்டு இருக்காயா? என்றது. ஓ... இலை மட்டுமா உன் இலை, குச்சி எல்லாமே ஒரே கசப்பு. சாப்பிட்டால் வாந்தி வந்துடும் என்றான் ராமன். ஆனால் பல வியாதிகளுக்கு நான் மருந்தாக இருக்கிறேன். நான் கசந்தாலும் பலர் வாழ்க்கையில் இனிமை உண்டாகக் காரணமாக இருந்திருக்கிறேன். அது போல் பெற்றோர், ஆசிரியர்கள் சொல்வது இப்போது உனக்கு கசப்பாக இருக்கிறது. ஆனால் அந்த கசப்பை ஏற்று அதன் படி நடந்தால் பின் உன்னோட வாழ்க்கை இனிமையாக அமையும் என்றது.

நாமும் நம்முடைய மூத்தவர்கள் சொல்லும் அறிவுரையை ஏற்று அதன்படி நடந்தால் அனைவராலும் விரும்பப்படுவது அல்லாது மிகவும் சிறந்தவராகவும் ஆவோம்.

# ஒற்றுமை.!!

ஒரு வயல் வரப்பில் மூன்று கொக்குகள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்தன. எங்கு சென்றாலும், ஒன்றாக சென்றன. இரை தேடச் சென்றாலும் கிடைத்த இரையை மூன்று கொக்குகளும் பகிர்ந்து உணவு உண்டு வாழ்ந்து வந்தன. இவர்கள் ஒற்றுமையுடன் இருப்பது மற்ற விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் பொறாமையாக இருந்தது.

அங்கிருந்த நரி ஒன்று, அந்த மூன்று கொக்குகளையும் பிரித்தே தீருவேன் என்று சபதமிட்டபடி களம் இறங்கி சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தது. ஒரு நாள் மூன்று கொக்குகளும் வயல் வரப்பில் இரை தேடிக்கொண்டிருந்தன. நரி தன் சூழ்ச்சியை பயன்படுத்த திட்டமிட்டது.

அதன்படி முதலில் மூன்று கொக்குகளிடமும் நட்பை ஏற்படுத்திக் கொண்டது. சிறிது நாட்களுக்கு பிறகு, தனிமையில் இருந்த ஒரு கொக்கிடம் சென்று, கொக்கு நண்பரே! இவ்வளவு அழகாக இருக்கும் நீங்கள், அவலட்சணத்தின் ஒட்டு மொத்த உருவமாக திகழும் உங்கள் நண்பர் கொக்குகளுடன் எப்படி நட்புடன் இருக்கிறீர்கள்! உங்கள் அழகுக்கும் அந்தஸ்துக்கும் அவர்கள் நட்பு சரியானதா? என்று கேட்டது.

இதனை கேட்ட கொக்குவிற்கு நரி சொன்னது உண்மையாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. என்ன செய்வது! எல்லாம் என் நேரம் என்றபடி புலம்பியது. வந்த காரியம் முடிந்த திருப்தியில் உடனே நரி அந்த இடத்தை விட்டு சென்றது. இப்போது நரி இரண்டாவது கொக்குவிடம் சென்றது. கொக்கு நண்பரே எப்படி உள்ளீர்கள் என்று நலம் விசாரித்தது.


நலம் நரி நண்பரே, என்று பதிலுக்கு இரண்டாவது கொக்கு கூறியது. இப்போது தன் சூழ்ச்சியை தொடங்கியது நரி. கொக்கு நண்பரே! நீர் எவ்வளவு அறிவு உடையவர். எந்த குளத்தில் எவ்வளவு மீன்கள் உள்ளது என்பதை உங்களுடைய அறிவால் கண்டுபிடித்து விடுவீர்கள். இவ்வளவு அறிவுடைய நீங்கள் ஒன்றும் தெரியாத உங்கள் நண்பர் கொக்குகளுடன் நட்பு கொள்வதா? என்று சூழ்ச்சியை கிளப்பிவிட்டது. நரி கூறிய வார்த்தைகளால், இரண்டாவது கொக்குவும் யோசனை செய்ய ஆரம்பித்தது. நரி தான் வந்த வேலை முடிந்த திருப்தியில் கிளம்பிப் போனது.

இப்போது மூன்றாவது கொக்குவிடம் நரி சென்றது. அந்த கொக்குவிடம், கொக்கு நண்பரே! நீங்கள் எவ்வளவு வீரம் படைத்தவர். இரை பிடிப்பதிலும்! பறப்பதிலும், எவ்வளவு வீரமானவர். இவ்வளவு வீரம் உடைய நீங்கள் ஒன்றுக்கும் உதவாத மற்ற இரண்டு நண்பர் கொக்குகளுடன் சுற்றித் திரிந்தால் உங்களின் வீரமே உமக்கு மறந்துவிடும்! என்று கொக்குவிடம் கூறியது.

நரியின் சூழ்ச்சியால் அந்த மூன்று கொக்குகளுக்குள் நாளடைவில் பகைமையும், யார் பெரியவன் என்ற சண்டையும் ஏற்பட்டது. ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக் கொண்டன. இதனால் ஒற்றுமையுடன் இருந்த மூன்று கொக்குகளும் தனித்தனியே பிரிந்தன.

இவற்றையெல்லாம், பார்த்துக் கொண்டிருந்த கிளி ஒன்று, மூன்று கொக்குகளையும் சந்தித்து நரியின் சதித் திட்டத்தை சொல்லி முடித்தது. இதனைக் கேட்ட மூன்று கொக்குகளும்! நரியின் சூழ்ச்சியை புரிந்து கொண்டன. நல்ல நட்பை இழந்தோமே! என்று வருந்தின. இதுபோல் இனிமேல் புகழ்ச்சிக்கு மயங்காதீர்கள்! என்று கிளி அறிவுரை கூறிய பின்பு மூன்று கொக்குகளும் மறுபடியும் நட்புடன் இருந்தன.

**தத்துவம் :**
முன்பின் தெரியாதவர்கள் தேவையில்லாமல் நம்மைப் புகழ்ந்தால் அதற்கு மயங்கி விடக்கூடாது. அப்படி மயங்கும் பலவீனம் ஒருவருக்குள் இருந்தால் அவரை மற்றவர்கள் விரைவில் தங்கள் வசப்படுத்திவிட முடியும்.





## கருப்பசாமி மாறுவேடத்தில் தத்ரூபமாக காட்சியளித்த மாணவர்கள் கிஷாந்த் மற்றும் ஷர்விந்த்



மணமேல்குடி ஒன்றியம் தண்டலை நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் கருப்பசாமி மாறுவேடத்தில் தத்ரூபமாக காட்சியளித்த மாணவர்கள் கிஷாந்த் மற்றும் ஷர்விந்த்

## ஆண்டுவிழா மற்றும் பரிசளிப்பு விழா




ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஒன்றியம் பனைக்குளம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ஆண்டுவிழா மற்றும் பரிசளிப்பு விழா நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது

## அஇஅதிமுக வேட்பாளர் S.ராமச்சந்திரன் வேட்புமனு தாக்கல் செய்தார்




திருவண்ணாமலை மாவட்டம் ஏப்ரல் 7 கீழ்பென்னாத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அஇஅதிமுக வேட்பாளர் S.ராமச்சந்திரன் அவர்கள் வேட்புமனு தாக்கல் செய்தார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வாடிப்பட்டியில் துணை ராணுவம் அணிவகுப்பு



**வாடிப்பட்டி, ஏப்.08:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் சட்டமன்றத் தேர்தல் நடப்பதை முன்னிட்டு துணை ராணுவம் அணிவகுப்பு சமயநல்லூர் போலீஸ் துணை சூப்பிரண்டு ஆனந்தராஜ் தலைமையில் போலீஸ் இன்ஸ் பெக்டர் கணேசன் முன்னிலையில் நடந்தது. இந்த அணி வகுப்பில் துணை இராணுவத்தைச் சேர்ந்த வீரர்கள் மற்றும் போலீசார் வாடிப்பட்டி காவல் நிலையம் தொடங்கி தாதம்பட்டி மந்தை பஸ் நிலையம் லாலா பஜார் போடிநாயக்கன்பட்டி பிரிவு சந்தை பாலம் பேரூராட்சி அலுவலகம் ராமநாயக்கன்பட்டி பிரிவு குலசேகரன்கோட்டை பிரிவு என மதுரை திண்டுக்கல் நகர்ப்புற சாலையில் ஆரோக்கிய அன்னை திருத்தலம் வரை சென்றனர்.

# வெண்ணந்தூர் ஒன்றியத்தில் தவெக வேட்பாளர் லோகேஷ் தமிழ்செல்வன் சூறாவளி பிரச்சாரம்

### வயதானவர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம்



**இராசிபுரம், ஏப். 08:** ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் தவெக வேட்பாளர் லோகேஷ் தமிழ்செல்வன் தீவிரமாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு, பொதுமக்களை நேரில் சந்தித்து ஆதரவு கோரி வருகிறார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் தவெக சார்பில் போட்டியிடும் லோகேஷ் தமிழ்செல்வன், தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் வெண்ணந்தூர் ஒன்றியம் நெ.3 குமாரபாளையம் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதிகளில் அவர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட் டார். அப்போது நெ.3 கொமரபாளையம் பகுதியில் உள்ள மாரியம்மன் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்களை சந்தித்த லோகேஷ் தமிழ்செல்வன், தவெகவின் தேர்தல் வாக்குறுதிகள் மற்றும் ராசிபுரம் தொகுதியில் வெற்றி பெற்றால் மேற்கொள்ள உள்ள பணிகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் தமிழக முதல்வராக வர வேண்டும் எனக் கூறிய அவர், வயதானவர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றார்.

நெ.3 கொமரபாளையம் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர்.

# குடியாத்தம் தொகுதி அதிமுக வேட்பாளர் பரிதா குடியாத்தம் நகரில் வாக்கு சேகரிப்பு!



**வேலூர், ஏப். 08:** குடியாத்தம் தனித் தொகுதி அதிமுக வேட்பாளர் ஜி.பரிதாபுருஷோத்தமன் செவ்வாய்கிழமை (07-04-2026) காலை 8.30 ஆரம்பித்து ஜெ.ஜெ.,நகர், எம்.ஜி.ஆர்.நகர், கலைஞர் நகர் , புதிய லைன், தரைக்காடு, சிவராஜ் நகர், அத்திப்பட்டி, டெலிபோன் ஆபீஸ் தெரு, பஜார் வீதி, சின்ன பஜார் வீதி, மாவு மிஷன் தெரு ஆகிய இடங்களில் தெருத் தெருவாக மக்களோடு மக்களாய் சென்று வாக்குகள் சேகரித்தார்.

பரிதா வாக்காளர்களிடம் பேசுகையில், இந்த குடியாத்தம் தொகுதிதான் எனக்கு கோயில். வாக்காளர்களாகிய நீங்கள்தான் எனக்கு தெய்வங்கள் என்று கூறி வாக்காளர்களின் மனங்களை தட்டி எழுப்பி அவர்களை கவர்ந்து தங்களது வாக்குகளை அதிமுக வேட்பாளரான எனக்கு இரட்டை இலை சின்னத்தில் பெருவாரியாக அளித்து என்னை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வீடுகள் தோறும் சென்று துண்டு பிரசுரங்களை வழங்கி அதிமுகவுக்கு வாக்களிக்குமாறு பரிதா கேட்டுக் கொண்டார். அவருடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் சென்றனர்.

# 100ம் ஆண்டு சித்திரை திருவிழா

**தஞ்சாவூர், ஏப்.08:** மகர்நோம்புச்சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் வருகிற (20.04.2026) திங்கட்கிழமை- கருடஸேவை புறப்பாடு, (22.04.2026) புதன்கிழமை - வெண்ணைத்தாழி புறப்பாடு, (24.04.2026) வெள்ளிக்கிழமை - திருக்கல்யாணம், இரவு புறப்பாடு, (26.04.2026) ஞாயிற்றுக்கிழமை - வஸந்த உற்சவம் இரவு புறப்பாடு, (28.04.2026) செவ்வாய்க்கிழமை- ஸ்ரீ ராஜகோபால சுவாமி இரவு புறப்பாடு, (01.05.2026) வெள்ளிக்கிழமை - அனுமந்த வாகனம் இரவு புறப்பாடு, (03.04.2026) ஞாயிற்றுக்கிழமை - குதிரை வாகனம் இரவு புறப்பாடு, (05.05.2026) செவ்வாய்க்கிழமை - விடையாற்றி விழா, (06.05.2026) புதன்கிழமை - நூற்றாண்டு பாராட்டு விழா ஆகிய திருவிழா சிறப்பாக நடைபெற உள்ளது.

அனைவரும் வருக! எம்பொருமான் அருள் பெறுக!! திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள், சபையோர்கள், உபயதாரர்கள் மற்றும் ஆலய ஊழியர்கள் செய்து வருகின்றனர்.

செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்



ஸ்ரீ:

ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத
ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள்
திருக்கோவில்
மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்.

100 - ஆம் ஆண்டு - 1435 ம் பசலி
சித்திரை சிறப்பு திருவிழா

| | |
|---|---|
| 20.04.2026 திங்கள் | - கருடஸேவை புறப்பாடு |
| 22.04.2026 புதன் | - வெண்ணைத்தாழி புறப்பாடு |
| 24.04.2026 வெள்ளி | - திருக்கல்யாணம், இரவு சுவாமி புறப்பாடு |
| 26.04.2026 ஞாயிறு | - வஸந்த உற்சவம் இரவு புறப்பாடு |
| 28.04.2026 செவ்வாய் | - ஸ்ரீ ராஜகோபால சுவாமி இரவு புறப்பாடு |
| 01.05.2026 வெள்ளி | - ஸ்ரீ அனுமந்த வாகனம் இரவு புறப்பாடு |
| 03.05.2026 ஞாயிறு | - குதிரை வாகனம் இரவு புறப்பாடு |
| 05.05.2026 செவ்வாய் | - விடையாற்றி விழா |
| 06.05.2026 புதன் | - நூற்றாண்டு - பாராட்டு விழா |

இங்ஙனம் B.S.சேஷாத்திரி, பரம்பரை நிர்வாக அறங்காவலர், தேவஸ்தான கமிட்டியார் மற்றும் விழா உபயதாரர்கள் - ஆலய ஊழியர்கள்

Cell : 94440 43262, 04362 275155 - www.pvpkovil.com

# கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் மூலவர் நம் வாசவி





**சென்னை ஏப்.08:** திருவள்ளூர் ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் மூலவர் நம் வாசவி அம்மன் முத்தங்கி அலங்காரத்தில், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, திருவள்ளூர் ஆர்ய வைஸ்ய மகளிர் குழுவினர் பக்தி பாடல்கள் பாடி, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகாதீபாராதனையும் நடைபெற்றது.

ஸ்ரீராமநவமியை முன்னிட்டு ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் ராமர் பட்டாபிஷேகத்தில் ஸ்ரீராமரை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

# 43-ஆம் நாள் மண்டல பூஜையில் 108 சங்கு பூஜை சிறப்பு வழிபாடு







தர்மபுரி மாவட்டம் ஏப்ரல் 7 பாலக்கோடு வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மண்டல பூஜை முன்னிட்டு 43 ஆம் நாள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, 108 சங்கு பூஜை, பிரம்மா அஷ்டோத்திரம், சிவன் அஷ்டோத்திரம், விஷ்ணு அஷ்டோத்திரம், லட்சுமி அஷ்டோத்திரம், விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணமும், மல்லிகை பூக்களால் அர்ச்சனைகள் செய்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. இவ் விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் பாலக்கோடு மகிளா சபா சார்பில் வெகு சிறப்பாக நடைபெற்றது. அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**




மதுரை ஸ்ரீகூடலழகர் திருக்கோயில் ஸ்ரீ வ்யூக சுந்தரராஜ பெருமாள் பங்குனி அனுஷம் நட்சத்திர புறப்பாடு திவ்ய சேவை.

# பணி நிறைவு பாராட்டுவிழா




தமிழ்நாடு தொடக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம் சார்பில் மேற்கு ஆரணி ஒன்றியத்தில் பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா தனியார் மண்டபத்தில் ஆரணியில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் டி ரமேஷ் தலைமை ஆசிரியர், நல்லாசிரியர் வ. சங்கர் தலைமையாசிரியர்,A.நஜீபுஸ்ஸமா H.M. சு.கீதா H.M,S.மீனாH.M,R.சகிலாH.M.R.பால்கனிH.M,கு.அனார்கலி உ.ஆசிரியர் ஆகியவர்களுக்கு பணி நிறைவு பாராட்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாநில மாவட்ட வட்டார நிர்வாகிகள் மற்றும் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள்.




## சூர்ய பிரப வாகனத்தில் திருவீதி புறப்பாடு.



சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீ ஆதி கேசவ பெருமாள் கோயில் ப்ராமோற்சாவம் நான்காம் திருநாள் காலை சூர்ய பிரப வாகனத்தில் திருவீதி புறப்பாடு.

## கூரம், ஸ்ரீகூரத்தாழ்வான் சேதிரி விழா



கூரம், ஸ்ரீகூரத்தாழ்வான் சேதிரி விழா

## ஸ்ரீபக்தவச்சல பெருமாள் சேஷ வாகனம்



திருநின்றவூர் ஸ்ரீபக்தவச்சல பெருமாள் சேஷ வாகனம் நான்காம் நாள் காலை

## மயிலை ஆதிகேசவர் சந்திரப்ரபா



மயிலை ஆதிகேசவர் சந்திரப்ரபா

# சுற்றுலா: கொடைக்கானலில் சிறப்பு மிக்க 10 இடங்கள்



### 1. கொடைக்கானல் ஏரி

கொடைக்கானல் ஏரி, 1863-ம் ஆண்டு ஆங்கிலேயர்களால், உருவாக்கப்பட்டது. நட்சத்திரவடிவில் இந்த ஏரியை ஆங்கிலேயர்கள் அமைத்ததால், இதற்கு நட்சத்திர ஏரி என்ற பெயரும் உண்டு.

### 2. பசுமை பள்ளத்தாக்கு

ஆங்கிலேயர்கள் கிரீன் வேலி வியூ பாயிண்ட் என பெயர் இட்டுள்ளனர். தற்கொலை முனை அதாவது சூயிசைட் பாயிண்ட் என இன்னொரு பெயரும் உண்டு. பலரும் அவ்வாறே அழைத்து வருகின்றனர்.

### 3. வெள்ளி நீர் வீழ்ச்சி

18 -அடி உயரமான பாறையில் இருந்து நீர்வீழ்ச்சி விழுவதால் நீர் உண்மையில் வெள்ளி நிறத்தில் தெரிகிறது. இதனால் சில்வர் கேஸ்கேட் என்று பெயர் பெற்றது.

### 4. கோக்கர்ஸ் வாக்

1872-ஆம் ஆண்டு இந்த இடத்தை கண்டுப்பிடித்த லெப்டினென்டு கோக்கரின் பெயராலேயே இவ்விடம் அழைக்கப்படுகிறது. கொடைக்கானல் ஏரியிலிருந்து சுமார் 1 கி.மீ. தூரம் தொலைவில் அமைந்துள்ளது. மேகங்களின் மீது நடப்பது போன்ற உணர்வை பெறுவீர்கள்.

### 5. குறிஞ்சி ஆண்டவர் கோயில்

கொடைக்கானல் பேருந்து நிலையத்திலிருந்து 4 கி.மீ தொலைவில் உள்ளது. 12 ஆண்டிற்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி பூக்கள் இந்த இடத்தில் பூத்துக் குலுங்குகின்றன. இக்கோயில் ஸ்ரீ குறிஞ்சிஈஸ்வரன் என்றழைக்கப்படும் முருக கடவுளுக்காக அமைக்கப்பட்ட கோயில். 1936-ஆம் வருடம் கட்டப்பட்டது.



### 6. தூண் பாறை

கொடைக்கானலில் முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்று தூண் பாறை. தூண் பாறைகள் இடையினில் தவிழ்ந்து செல்லும் மேகக்கூட்டங்களை ஆர்வத்துடன் கண்டு ரசிப்பதுடன் செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து மகிழ்வார்கள்.

### 7. டால்பின் நோஸ்

மிக உயரமான பாறை பகுதி இது. இயற்கையின் அழகை இங்கு அருமையாக ரசிக்கலாம். பெரியபாறை ஒன்று டால்பின் மீனின் மூக்கு போன்று தெரியும். இந்த பாறையின் கீழே 6600 அடி ஆழமுடைய பள்ளம் இருக்கிறது.

### 8. பேரிஜம் ஏரி

இந்த அழகான ஏரி பாதுகாக்கப்பட்ட பகுதியில், ஆழமான காடுகளுக்கு பின்னால் மறைந்துள்ளது. சில சமயங்களில் வனவிலங்குகளை கூட பார்த்து ரசிக்கலாம்.

### 9. பிரையண்ட் பூங்கா

இந்த தாவரவியல் பூங்கா நூற்றுக்கணக்கான அழகான தாவரங்கள் மற்றும் மலர்களைக் கொண்டுள்ளது. இந்த பூங்காவை பார்வையிட சிறந்த நேரம் கோடைக்காலம், மே மாதத்தில், மிகப் பெரிய தோட்டக்கலை கண்காட்சி இடம்பெறும். என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 10. பைன் காடு

சுமார் 60 முதல் 80 அடி வரை வளரக்கூடிய இந்த மரங்கள் சூரிய ஒளி புக முடியாத அளவுக்கு அடர்த்தியாக இருக்கிறது. தமிழ் சினிமாவில் ஏராளமான பாடல் காட்சிகளிலும், சண்டைக் காட்சிகளும் இப்பகுதியில் படமாக்கப்பட்டுள்ளன.

## வேலைவாய்ப்பு கார்னர்

### புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் காலிப் பணியிடங்கள்

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நிரப்பப்பட உள்ள ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியும் விருப்பமும் உள்ள இளங்கலை, முதுகலை பட்டதாரிகளிடம் இருந்து வரும் 20 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வேலைவாய்ப்பு விளம்பர அறிவிப்பு எண். PU/RC/NT/2026/51

இதர விவரங்கள் கீழ்கண்டவாறு:

பணி: Deputy Registrar காலியிடங்கள்: 3

தகுதி: 55 சதவீத மதிப்பெண்களுடன் ஏதாவதொரு துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருப்பதுடன் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். வயதுவரம்பு: 50-க்குள் இருக்க வேண்டும்.

தகுதி: 55 சதவீத மதிப்பெண்களுடன் ஏதாவதொரு துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். வயதுவரம்பு: 40-க்குள் இருக்க வேண்டும்.

பணி: Public Relation Officer தகுதி: 55 சதவீத மதிப்பெண்களுடன் ஏதாவதொரு துறையில் முதுகலைப் பட்டம் பெற்றிருப்பதுடன் 5 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். வயதுவரம்பு: 40-க்குள் இருக்க வேண்டும். எழுத்துத் தேர்வு, திறன் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தேர்வு தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர். எஸ்சி, எஸ்டி, மாற்றுத்திறனாளி, முன்னாள் ராணுவத்தினருக்கு ரூ.1,000. இதர அனைத்து பிரிவினர் ரூ.2,000. பெண்களுக்கு கட்டணம் செலுத்துவதில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை https://pondiunint.samarth.edu.in/index.php/site/login என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பித்தவுடன் அதனை பிரிண்ட் அவுட் எடுத்து அதனுடன் தேவையான சான்றிதழ்களின் நகல்களையும் இணைத்து கீழ்வரும் அஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்

The Assistant Registrar, Recruitment Cell, Pondicherry University, Dr.B.R.Ambedkar Administrative Building, R.Venkataraman Nagar, Kalapet, Puducherry. PIN:605 014

மேலும் விண்ணப்பிப்போரின் கூடுதல் விவரங்களுக்கு recruitment@pondiuni.ac.in தெரிந்துகொள்ளவும்.

## நெல்லையில் பறக்கும் படை சோதனைகள் தீவிரம்: தேர்தல் பார்வையாளர்கள் நேரில் ஆய்வு

**சென்னை, ஏப்.8:**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் தேர்தல் முன்னேற்பாடுகள் மற்றும் கண்காணிப்புப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட பொதுப் பார்வையாளர் அனுபா ஸ்ரீவஸ்தவா மற்றும் செலவினப் பார்வையாளர் நரேந்திர ஏசரி ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர்.

நேற்று முன்தினம் பொதுப் பார்வையாளர் அனுபா ஸ்ரீவஸ்தவா, அம்பாசமுத்திரம் மற்றும் நாங்குநேரி ஆகிய தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்களுக்குச் சென்றார். அம்பாசமுத்திரத்தில் வேட்புமனு தாக்கல் நடைமுறைகள் மற்றும் வேட்பாளர்கள் குறித்த விவரங்கள் அடங்கிய நோட்டீஸ் பலகையைப் பார்வையிட்டார்.

நாங்குநேரியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) வைக்கப்பட்டுள்ள பலத்த பாதுகாப்பு அறை (Strong Room), கட்டுப்பாட்டு அறை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். தேர்தல் நடத்தை விதிகள் முறையாக பின்பற்றப்படுவதை உறுதி செய்ய, பல்வேறு பகுதிகளில் சோதனை பணிகளை பார்வையாளர் ஆய்வு செய்தார். பாளையங்கோட்டை தொகுதிக்குட்பட்ட மேலப்பாளையம் பகுதியில் நிலையான கண்காணிப்பு குழுவினரின் (SST) செயல்பாடுகளை ஆய்வு செய்தார். ராதாபுரம் தொகுதியில் பறக்கும் படை குழுவினர் (FST) வாகன சோதனையில் ஈடுபட்டு வருவதை நேரில் பார்வையிட்டார். அதேபோல், தேர்தல் செலவினப் பார்வையாளர் நரேந்திர ஏசரி, அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட சேரன்மகாதேவி சங்கன்திரடு பகுதியில் நிலையான கண்காணிப்பு குழுவினர் மேற்கொண்டு வரும் சோதனைகளை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ஆயுஸ் குப்தா, அம்பாசமுத்திரம் தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

## சாத்தான்குளம் கொலை வழக்கில் குற்றவாளிகளான 9 போலீஸாருக்கும் தூக்கு தண்டனை: நீதிமன்றம் தீர்ப்பு



**மதுரை, ஏப்.8:**

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தைச் சேர்ந்தவர் ஜெயராஜ். இவரது மகன் பென்னிக்ஸ். இவர்கள் சாத்தான்குளத்தில் செல்போன் கடை நடத்தி வந்தனர். கடந்த 2020 ஜூன் 19-ம் தேதி கரோனா ஊரடங்கு கட்டுப்பாட்டு நேரம் தாண்டி கடையைத் திறந்து வைத்திருந்ததாக கூறி ஜெயராஜை விசாரணைக்காக போலீஸார் அழைத்துச் சென்றனர். அவரை அழைத்து வருவதாகக் கூறி மகன் பென்னிக்ஸ் பின்னர் காவல் நிலையம் சென்றார்.

தந்தை, மகன் இருவரையும் போலீஸார் நிர்வாணப்படுத்தி கடுமையாக தாக்கினர். இதில் பலத்த காயமடைந்த இருவரும் உயிரிழந்தனர். உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவின் பேரில், சிபிசிஐடியிடம் இருந்து இந்த வழக்கு சிபிஐக்கு மாற்றப்பட்டது. சிபிஐ கொலை வழக்கு பதிவு செய்து, சாத்தான்குளம் காவல் நிலைய ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ், காவலர்கள் முருகன், சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கை மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்ற நீதிபதி முத்துக்குமரன் விசாரித்து 9 பேரும் குற்றவாளிகள் என மார்ச் 23-ம் தேதி அறிவித்தார். அவர்களுக்கான தண்டனை விவரங்களை நீதிபதி நேற்று அறிவித்தார். இதற்காக 9 குற்றவாளிகளும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

நீதிபதி அளித்த தீர்ப்பு விவரம்: இந்த வழக்கில் தமிழக அரசு தாக்கல் செய்த மனுவில், 'காவல் மரணச் சம்பவங்கள் சகிக்க முடியாத குற்றம்' என்று கூறப்பட்டுள்ளது. மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பதில் மனுவில், 'காவல் மரணம் கொடூரமானது. குற்றவாளிகளுக்கு உச்சபட்ச தண்டனை வழங்க வேண்டும். கருணை காட்டக் கூடாது' எனக் கூறப்பட்டுள்ளது.

காவல் மரணங்களைத் தடுக்கவும், கைதிகளை எப்படி நடத்த வேண்டும் என்பதற்காகவும் உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் பல்வேறு வழிமுறைகளை வழங்கியுள்ளன. அவற்றை காற்றில் பறக்கவிட்டு தங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது என்றும், தங்களைப் பார்த்து மக்கள் அச்சப்பட வேண்டும் என்ற நோக்கிலும் கொடூரமான சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர். சட்டத்தைக் காக்க வேண்டியவர்களால் குற்றம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இதுபோன்ற வழக்குகளில் ஆயுள் தண்டனை வழங்கினால், இதுபோல செயல்படும் காவல் துறையினருக்கு அச்சத்தை ஏற்படுத்தாது. எதிர்காலத்தில் இது போல குற்றம் நிகழாமல் இருக்கவேண்டும் என நீதிமன்றம் கருதுகிறது. இதுபோன்ற காவல் மரணங்களில் ஈடுபடும் காவலர்களுக்கு தூக்கு தண்டனைதான் பரிசாக கிடைக்கும் என நினைக்கும் வகையிலும் தீர்ப்பு இருக்க வேண்டும்.

அந்த வகையில், காவல் ஆய்வாளர் ஸ்ரீதர் உட்பட 9 பேருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. ஸ்ரீதருக்கு ரூ.15 லட்சம் அபராதம் உட்பட 9 பேருக்கும் மொத்தமாக ரூ.1 கோடி 40 ஆயிரம் அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த தொகையை பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடாக வழங்க வேண்டும். இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. தீர்ப்பை வாசித்து முடித்ததும் தீர்ப்பு எழுதிய பேனாவை நீதிபதி உடைத்தார். இந்த கொலை வழக்கு விசாரணை 5 ஆண்டுகள் 9 மாதங்கள் நடந்துள்ளது.

## ஆந்திராவின் தலைநகராக அமராவதிக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து - சந்திரபாபு நாயுடு பெருமிதம்

**அமராவதி, ஏப். 8:**

தெலுங்கு தேசம் கட்சியின் தேசியத்தலைவர் மற்றும் ஆந்திர மாநிலத்தின் முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு தனது எக்ஸ் தள பக்கத்தில் ஆந்திர தலைநகர் அமராவதி என்று அதிகாரப்பூர்வமாக அரசிதழ் வெளியிட்டு அதற்காக பிரதமர் மற்றும் குடியரசுத்தலைவக்கு நன்றி தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

அதில் தெரிவித்திருப்பாதாவது:-

ஆந்திரப்பிரதேச மறுசீரமைப்பு திருத்த சட்டம் 2026-க்கு ஒப்புதல் அளித்து நமது தலைநகரின் நீண்ட நாள் கனவை நனவாக்கிய மாண்புமிகு குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்கு எனது ஆந்திரப்பிரதேச மக்கள் சார்பாக எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது மாநிலத்தின் மீது காட்டிய அர்ப்பணிப்பு மற்றும் வழிகாட்டுதலுக்காக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசுக்கும் இந்த மசோதாவை ஆதரித்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நமது மாநிலத் தலைவர்களுக்கும் எங்களுடன் துணை நின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது எனது ஆந்திரப்பிரதேச மக்களுக்கும் குறிப்பாக எனது விவசாயிகளுக்கும் கிடைத்த வெற்றியாகும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்ப் புத்தாண்டு, விஷு: சிறப்பு ரயில்கள் இயக்கம்! முன்பதிவு எப்போது?

**சென்னை, ஏப்.8:**

தமிழ்ப் புத்தாண்டு, விஷு திருநாளையொட்டி சிறப்பு ரயில்களை இயக்கவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சென்னை எழும்பூரில் இருந்து திருநெல்வேலிக்கு ஏப். 9 ஆம் தேதியும் திருநெல்வேலியில் இருந்து சென்னை எழும்பூருக்கு ஏப். 10 ஆம் தேதியும் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

சென்னை சென்ட்ரலில் இருந்து கொல்லத்துக்கு ஏப். 15 ஆம் தேதியும் கொல்லத்திலிருந்து சென்னை சென்ட்ரலுக்கு ஏப். 16 ஆம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

சென்னை எழும்பூரில் இருந்து திருவனந்தரபுரம் வடக்கிற்கு ஏப். 10 ஆம் தேதியும் திருவனந்தரபுரம் வடக்கில் இருந்து சென்னை எழும்பூருக்கு ஏப். 15 ஆம் தேதியும் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

சென்னை சென்ட்ரலில் இருந்து தூத்துக்குடிக்கு ஏப். 13 ஆம் தேதியும் தூத்துக்குடியில் இருந்து சென்னை எழும்பூருக்கு ஏப். 14 ஆம் தேதியும் சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு நாளை(ஏப். 8) காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

சென்னை எழும்பூரில் இருந்து திருநெல்வேலி செல்லும் ரயிலுக்கான (எண் 06070 ) முன்பதிவு மட்டும் (ஏப். 7) பிற்பகல் 2.15 மணிக்கு தொடங்குகிறது.

## மிட்டாய், பிஸ்கெட் வாங்கி கொடுத்து சிறுவர்கள் மூலம் பிரசாரம்: தவெக வேட்பாளர் மீது வழக்கு

**சென்னை, ஏப்.8:**

தமிழக சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகிற 23-ந் தேதி நடைபெறுகிறது. இந்த தேர்தல் களத்தில் தமிழக வெற்றிக் கழகம் தனித்து போட்டியிடுகிறது. தேர்தல் போட்டி களத்தில் குதித்துள்ள வேட்பாளர்கள் வீதிவீதியாக சென்று சூறாவளி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள சாத்திப்பட்டு பகுதியில் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் மணிகண்டன் சிறுவர்களுக்கு மிட்டாய் மற்றும் பிஸ்கெட் வாங்கி கொடுத்து விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கவும், துண்டு பிரசுரங்கள் வழங்கவும், கொடி, தோரணங்கள் கட்டவும் பயன்படுத்தியதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து அதே பகுதியை சேர்ந்த அருண்குமார் மனைவி தென்றல் (32) என்பவர், தனது மகன் மற்றும் அதே பகுதியை சேர்ந்த சிறுவர்களை தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் மணிகண்டன், கிராம நிர்வாக அலுவலர் அரவிந்தன் உதவியுடன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தி வருவதாகவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் காடாம்புலியூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் மணிகண்டன், அரவிந்தன் ஆகியோர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

# 10-ம் தேதி முதல் டோல்கேட்களில் ரொக்கம் பெறப்படாது.. பாஸ்டேக், யு.பி.ஐ.யில் மட்டுமே இனி கட்டணம்

**புதுடெல்லி, ஏப்.8:**

வரும் 10ம் தேதி முதல், சுங்கச்சாவடிகளில் பணப் பரிவர்த்தனைகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) நீக்க உள்ளதால், இந்தியா முழுவதும் நெடுஞ்சாலைப் பயணம் முழுமையாக டிஜிட்டல் மயமாக உள்ளது. இந்தப் புதிய விதிமுறையுடன், தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சுங்கக் கட்டண விலக்குகளையும் கடுமையாக்கி, பாஸ்டேக் ஆண்டுப் பயண அட்டையை (FASTAG ANNUAL PASS) பரவலாகப் பயன்படுத்த ஊக்குவிக்கிறது. இதன் மூலம், அடிக்கடி பயணம் செய்பவர்களுக்கு டிஜிட்டல் நெடுஞ்சாலைப் பயணம் வேகமாகவும், தடையின்றியும் அமையும் என்று கூறப்படுகிறது.



நாடு முழுதும் கிட்டத்தட்ட 1,200 சுங்கசாவடிகள் உள்ளன. தினசரி பாஸ்டேக் பரிவர்த்தனைகள் மூலம் 1.16 கோடி கிடைக்கிறது. 2025-26ல் இவற்றின் சுங்க வசூல் 82,900 கோடி ரூபாய் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் நெடுஞ்சாலை சுங்க சாவடிகளில் ரொக்கம் செலுத்தும் முறை ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்திருந்தது. இது ஏப்ரல் 10ம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

இதுதொடர்பாக மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

சுங்க சாவடிகளில் ரொக்கமாக கட்டணம் செலுத்தும் நடைமுறை ரத்து செய்யப்படுகிறது. இதற்காக விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 10ம் தேதி முதல் சுங்க சாவடி பரிவர்த்தனைகள் அனைத்தும் பாஸ்டேக், மின்னணு முறைகளில் மட்டுமே நடைபெறும். சுங்க சாவடியை கடக்கும் வாகனங்களில் பாஸ்டேக் வசதி இல்லை என்றால், யு.பி.ஐ., பயன்படுத்தி சுங்க கட்டணம் செலுத்தலாம். ஆனால், வழக்கமான கட்டணத்தைவிட 1.25 மடங்கு கூடுதலாக பணம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட வாகனம், டிஜிட்டல் வடிவிலும் கட்டணம் செலுத்தாவிட்டால் சுங்கச்சாவடிக்குள் வருவதையோ, வெளியே செல்வதையோ அதிகாரிகள் அனுமதிக்க மறுக்கலாம். அப்போது மின்னணு முறையில் அறிவிப்பு ஒன்று வாகன உரிமையாளருக்கு அனுப்பப்படும். மூன்று நாட்களுக்குள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை செலுத்திவிட வேண்டும். இல்லாவிட்டால், சுங்க கட்டணத்தை போல இரு மடங்கு தொகையை செலுத்த வேண்டியிருக்கும். அரசு அலுவலக நிமித்தமான பயணம் மேற்கொள்ளும் வாகனங்களுக்கு, சுங்க கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

இந்த கட்டண விலக்கு பெற முறைப்படி விண்ணப்பிக்க வேண்டும் அல்லது ஆண்டுக்கான பாஸ் பெற்று கொள்ளலாம். அரசு வாகனங்களுக்கு மட்டுமே கட்டண விலக்கு பொருந்தும். தனிப்பட்ட முறையில் அரசு அதிகாரிகள் மேற்கொள்ளும் தனிப்பட்ட பயணங்களுக்கு கட்டண விலக்கு கிடையாது. அடையாள அட்டையை பரிசோதித்து அனுமதிக்கும் நடைமுறை இனி கிடையாது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### "கடந்த சீசன் ஏமாற்றமும், வலியும் தந்தது" - ஐபிஎல் விலகல் குறித்து அஸ்வின் பகிர்வு

**சென்னை, ஏப்.8:**

39 வயதான அஸ்வின், கடந்த 2024-ல் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். அதன் பின்னர் கடந்த ஐபிஎல் சீசனில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக 9 ஆட்டங்களில் மட்டுமே விளையாடி இருந்தார். கடந்த சீசனில் 31 ஓவர்கள் வீசி 7 விக்கெட்டுகள் கைப்பற்றி இருந்தார். அவரது பவுலிங் எகானமி 9.13 என இருந்தது. ஒட்டுமொத்தமாக 221 ஐபிஎல் ஆட்டங்களில் 187 விக்கெட்டுகளை அஸ்வின் கைப்பற்றி உள்ளார்.

இந்தச் சூழலில் நடப்பு ஐபிஎல் சீசனுக்கு முன்னதாக மினி ஏலம் நடைபெற்றது. அதற்கு முன்னதாகவே ஐபிஎல் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அஸ்வின் அறிவித்தார். அவரது ஐபிஎல் கிரிக்கெட் பயணம் சிஎஸ்கே அணியில் தொடங்கி, அங்கேயே முடிவடைந்தது. இந்நிலையில், ஐபிஎல் கிரிக்கெட்டில் இருந்து விலகியதற்கான காரணத்தை தனது யூடியூப் சேனலில் அவர் பகிர்ந்துள்ளார்.

"சிஎஸ்கே உடனான கடந்த சீசன் எனக்கு மிகுந்த ஏமாற்றம் தந்தது. உண்மையை சொல்லவேண்டுமென்றால் என்னால் இன்னும் சில காலம் ஐபிஎல் கிரிக்கெட்டில் விளையாடி இருக்க முடியும். ஆனால், தனிப்பட்ட முறையில் எனக்கு கடந்த வலி கொடுத்தது. அதனால் ஓய்வை அறிவித்து விட்டேன்" என்று அஸ்வின் அதில் கூறியுள்ளார். கடந்த சீசனில் சிஎஸ்கே 10-ம் இடத்தில் தொடரை நிறைவு செய்தது. இந்த சீசனிலும் முதல் மூன்று இடங்களில் தோல்வியுடன் புள்ளிப்பட்டியலில் அதே இடத்தில் நீடிக்கிறது.

### "ஐசிசி தொடர்களில் அடுத்தடுத்து இரண்டு தோல்வி வேதனை அளிக்கிறது" - ரச்சின் ரவீந்திரா வருத்தம்

**கொல்கத்தா, ஏப்.8:**

நடப்பு ஐபிஎல் சீசனில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக ரச்சின் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அவருக்கு அணியின் ஆடும் லெவனில் இன்னும் வாய்ப்பு கிடைக்கவில்லை. மூன்று விதமான பார்மெட்டிலும் விளையாடி வரும் அவர் கூறியதாவது: "அடுத்தடுத்து இரண்டு ஐசிசி தொடரின் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்தது மிகவும் வேதனை அளிக்கிறது. அதிலும் சாம்பியன்ஸ் டிராபி தொடரின் இறுதி ஆட்டத்தில் நாங்கள் வெற்றியை நெருங்கி வந்தோம். அது எப்போதும் வேதனை தரும் என நினைக்கிறேன்.

அந்த இரண்டு ஆட்டமும் ஏமாற்றம் தந்தது. இருப்பினும் இது கிரிக்கெட் விளையாட்டு. இதில் வெற்றியாளர் ஒருவர்தான். இந்தியா மிகச்சிறந்த மற்றும் தரமான வீரர்கள் நிறைந்த அணி. துபாய் மற்றும் இந்தியாவில் அதிகம் விளையாடிய அணி என்பதை நாம் கவனிக்க வேண்டும். கிரிக்கெட்டில் பேட்டிங் மற்றும் பவுலிங் சார்ந்து தொடர்ந்து கற்பதும், அழுத்தம் மிகுந்த தருணத்தில் தெளிவும், முடிவு எடுப்பதும்தான் முக்கியம். நியூஸிலாந்து அணியில் கேன் வில்லியம்சன், சான்ட்னர் ஆகியோரிடமிருந்து அதை நான் கற்றுக் கொண்டேன். நடந்து முடிந்த டி20 உலகக் கோப்பை தொடரில் நான் சிலவற்றை கற்றுக் கொண்டேன். அதோடுதான் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இணைத்துள்ளேன்" என்றார்.

# 60 ஆயிரம் டன் எல்.பி.ஜி. வாயுவுடன் 2 கப்பல்கள் இந்தியாவுக்கு வருகை: மத்திய அரசு

**புதுடெல்லி, ஏப்.8:**

மேற்காசிய போரால் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, எரிபொருள் தட்டுப்பாடு பல நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. எனினும், நட்பு அடிப்படையில் இந்திய கப்பல்களின் பயணத்திற்கு ஈரான் அனுமதி அளித்து வருகிறது. இந்த நிலையில், மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் முகேஷ் மங்கள் இன்று பேசும்போது, கிரீன் சாத்வி மற்றும் கிரீன் ஆஷா ஆகிய இரண்டு கப்பல்கள் முறையே நாளை மற்றும் 9-ந்தேதி இந்தியாவுக்கு வருகின்றன.



எனினும், இந்த வருகைக்கான காலநேரத்தில் மாற்றம் இருக்கலாம்.

இதன்படி, 60 ஆயிரம் டன் எல்.பி.ஜி. வாயுவுடன் 2 கப்பல்கள் இந்தியாவுக்கு வரவுள்ளன.

அவை ஹார்மூஸ் ஜலசந்தியை கடந்து வந்து கொண்டிருக்கின்றன என அவர் கூறினார்.

இதில், கிரீன் சாங்வி கப்பல் 46 ஆயிரம் டன் எல்.பி.ஜி. வாயுவுடனும், 25 இந்திய பணியாளர்களுடனும் வந்து கொண்டிருக்கிறது.

கிரீன் ஆஷா கப்பல் 15 ஆயிரம் டன் எல்.பி.ஜி. வாயுவுடனும், 26 இந்திய பணியாளர்களுடனும் வந்து கொண்டிருக்கிறது என அவர் கூறியுள்ளார்.

# சாத்தான்குளம் வழக்கு... மனசாட்சி இல்லாமல் பேசியவர்களுக்கும் தண்டனை வேண்டும்- கமல்ஹாசன்

**சென்னை, ஏப்.8:**

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கில் கைதான 9 போலீசாருக்கும் மரண தண்டனை விதித்து மதுரை கோர்ட் பரபரப்பு தீர்ப்பு அளித்தது. இந்த வழக்கில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர், சப்-இன்ஸ்பெக்டர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமைக் காவலர் முருகன், காவலர்கள் சாமதுரை, முத்துராஜ், செல்லதுரை, தாமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து ஆகிய 9 பேருக்கும் இரட்டை மரண தண்டனை விதிக்கப்படுகிறது. போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்த ஸ்ரீதருக்கு மரண தண்டனையுடன் ₹84 லட்சம் அபராதமும் விதிக்கப்படுகிறது. மற்ற போலீசாருக்கு விதிக்கப்பட்ட அபராத தொகையுடன் சேர்த்து மொத்தம் ₹1.40 கோடியை இழப்பீடு தொகையாக பென்னிக்சின் தாயார் செல்வராணிக்கு வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் தனது தீர்ப்பை அளித்துள்ளது. நாட்டையே உலுக்கிய இந்த போலீஸ் கஸ்டடி மரன வழக்கில் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை அளிக்கப்பட்ட்டு இருப்பதை பலரும் வரவேற்றுள்ளனர்.




இந்தநிலையில், நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருமான கமல்ஹாசன் இது தொடர்பான பதிவு ஒன்றை தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது, "சாத்தான்குளத்தில் போலீஸாரால் அடித்துக் கொல்லப்பட்ட ஜெயராஜ், பென்னிக்ஸ் வழக்கில் தீர்ப்பு வெளியாகியுள்ளது. சட்டத்தை அறிந்தவர்கள், பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புக் கொண்டவர்கள் சிறிதளவும் ஈவிரக்கமின்றிச் செய்த கொடுமைகளை அறிகையில் நெஞ்சம் பதைக்கிறது. நாட்டையே அதிரச் செய்த இந்த அநீதிக்கு எதிராக, விடாமல் போராடிய ஜெயராஜ் பென்னிக்ஸ் குடும்பத்தார், சாத்தான்குளம் ஊர்ப் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், ஆதாரங்களுடன் குற்றத்தை நிரூபித்த சிபிஐ விசாரணை அதிகாரிகள் பாராட்டப்பட வேண்டியவர்கள். தனிப்பட்ட முறையில் நான் மரண தண்டனைக்கு எதிரானவன். கொடுங்குற்றம் இழைத்தவர்கள் எவ்வித சலுகையுமின்றி ஆயுட்காலம் உள்ளவரை கடும் உழைப்புடன் சிறை வைக்கப்பட வேண்டுமென்பதே என் நிலைப்பாடு. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 9 பேரின் குடும்பங்களை எண்ணிப்பார்க்கிறேன். மனிதத்தன்மையற்ற காரியத்தில் ஈடுபட்டு, ஒரு பாவமும் அறியாத தங்களது குடும்பத்தாருக்கு எவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுத்திருக்கிறார்கள்? போலீஸாரின் கொலைவெறித் தாக்குதலுக்கு ஆளாகி படுகாயமடைந்தவர்களைப் பார்க்காமலே சான்றிதழ் அளித்த மருத்துவர், ரிமாண்ட் செய்ய உத்தரவிட்டவர், உண்மைகளை மறைக்க முயன்ற அதிகாரிகள், இருவரும் மூச்சுத் திணறலால் இறந்தார்களென மனசாட்சி இல்லாமல் பேசிய ஆட்சியாளர்கள் ஆகியோருக்கும் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று என் மனம் ஏங்குகிறது. அதிகார மமதையில் அப்பாவி மக்களுக்கு எதிராக நிகழும் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க்ரைம் கார்னர்

### சின்னத் திரை துணை நடிகை சுபாஷினி தற்கொலை

**சென்னை, ஏப்.8:**

போரூர் அருகே அய்யப்பன்தாங்கலில் சின்னத் திரை துணை நடிகை சுபாஷினி, கணவருடன் வீடியோ காலில் பேசியபடியே தூக்கிட்டு தற்கொலை செய்துக் கொண்ட சம்பவம், பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையைச் சேர்ந்தவர் சுபாஷினி என்ற சாஸ்விபாலா (36). இவர் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பாகி வரும் தொடரில் துணை நடிகையாக நடித்து வந்தார். இவர், கர்நாடகா மாநிலம் பெங்களூருவைச் சேர்ந்த பிபின் சந்திரன் (38) என்பவரை கடந்த 2024 ஏப்ரலில் திருமணம் செய்து பெங்களூருவில் வசித்து வந்தார்.

இவர் சின்னத் திரை தொடர்களில் நடிப்பதற்காக சென்னை வரும்போது தங்குவதற்காக, சென்னை, போரூர் அருகே அய்யப்பன்தாங்கலில் உள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து வைத்துள்ளார். சின்னத் திரை தொடரில் நடிப்பதற்காக சென்னை வரும்போது இந்த வீட்டில் சுபாஷினி தங்குவது வழக்கம்.

அந்த வகையில், சின்னத் திரை தொடரில் நடிப்பதற்காக கடந்த 3-ம் தேதி பெங்களூருவில் இருந்து அய்யப்பன்தாங்கல் வீட்டுக்கு வந்த சுபாஷினி, நேற்று நள்ளிரவில் கணவருடன் வீடியோ காலில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது குடும்ப பிரச்சினை காரணமாக இருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதனால், ஆத்திரமடைந்த சுபாஷினி தனது கணவர் பிபின் சந்திரனுடன் வீடியோ காலில் பேசியபடியே வீட்டில் இருந்த மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். அதிர்ச்சியடைந்த பிபின் சந்திரன், அடுக்குமாடி குடியிருப்பின் காவலாளிக்கு தகவல் அளித்தார். இதையடுத்து, காவலாளி, சுபாஷினி தற்கொலை குறித்து எஸ்ஆர்எம்சி (போரூர்) போலீஸாருக்கு தகவல் அளித்தார்.

இதைத் தொடர்ந்து, சம்பவ இடம் விரைந்த எஸ்ஆர்எம்சி போலீஸார், வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் இருந்த சுபாஷினியின் உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

### எக்ஸ்பிரஸ் ரெயில் முன் பாய்ந்து இளம்பெண் தற்கொலை: காப்பாற்ற முயன்றவரும் உயிரிழந்த பரிதாபம்

**சென்னை, ஏப்.8:**

செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் ரெயில் நிலையம் வழியாக நேற்று காலை சுமார் 10.20 மணியளவில், எக்ஸ்பிரஸ் ரெயில் ஒன்று அதிவேகமாக வந்து கொண்டிருந்தது. அப்போது, ரெயில் நிலையத்தின் அருகே நின்று கொண்டிருந்த 30 வயது மதிக்கத்தக்க இளம்பெண் ஒருவர் திடீரென எக்ஸ்பிரஸ் ரெயில் முன் பாய்ந்தார்.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அங்கிருந்த ஆண் பயணி ஒருவர், அந்த பெண்ணை காப்பாற்ற முயன்றார். துரதிர்ஷ்டவசமாக, தற்கொலைக்கு முயன்ற பெண், காப்பாற்ற முயன்றவர் என இருவர் மீதும் ரெயில் மோதியது. இதில் இருவரும் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தாம்பரம் ரெயில்வே போலீசார், இருவரது உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தாம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். முதற்கட்ட விசாரணையில், பெண்ணைக் காப்பாற்ற முயன்று உயிரிழந்தவர் மறைமலைநகர் அருகே உள்ள தாலிமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த இளங்கோவன் (53 வயது) என்பது தெரிய வந்துள்ளது.

தற்கொலை செய்துகொண்ட பெண் யார்? அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர்? தற்கொலைக்கான காரணம் என்ன? என்பது குறித்து இதுவரை தெரியவில்லை. இது தொடர்பாக தாம்பரம் ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மறைமலைநகர் ரெயில் நிலையம் அருகே பரபரப்பான காலை நேரத்தில் நடந்த இந்த சம்பவம் பயணிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

## வணிகச் செய்திகள்

### இந்திய சந்தையில் ஸ்மார்ட்போன்கள் விலை உயர்வு: காரணம் என்ன?

இன்றைய டிஜிட்டல் உலக வாழ் மக்களுக்கு ஸ்மார்ட்போன் அவசியமான தொரு தொழில்நுட்ப கருவியாக உள்ளது. தொலைத்தொடர்பு சாதனம் என்ற எல்லையை கடந்து பல்வேறு தேவைகளுக்கு ஸ்மார்ட்போன் பயன்படுகிறது. சர்வதேச ஸ்மார்ட்போன் நிறுவனங்களுக்கு உலக அளவில் பார்த்தால் இந்திய சந்தை மிக முக்கியமானது. அதனால் தான் ஆப்பிள் உள்ளிட்ட நிறுவனங்கள் இந்தியாவில் நேரடியாக கடையைவிரித்துள்ளன. இந்தச் சூழலில் ஸ்மார்ட்போன்களின் விலை உயர்ந்துள்ளது.

காரணம் என்ன? - போன்களின் ரேம் மற்றும் ஸ்டோரேஜை அதனுள் இருக்கும் மெமரி சிப்தான் உறுதி செய்யும். இப்போது இந்த சிபி தயாரிப்பு நிறுவனங்கள் ஏஐ தரவு மையங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்ற காரணத்தால் சிப் தேவையுள்ள மற்ற தொழில்துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் ஸ்மார்ட்போன், கணினி தயாரிப்பும் அடங்கியுள்ளதாக தகவல். சிப்களுக்கான தேவை அதிகரித்துள்ள காரணத்தால் அதன் விலை கடந்த ஆண்டின் பிற்பாதியில் உயர தொடங்கியது. பொதுவாக ஸ்மார்ட்போன்களின் விலை அதன் ரேம் மற்றும் ஸ்டோரேஜை பொறுத்துதான் நிர்ணயிக்கப்படுகிறது. சராசரியாக 8ஜிபி ரேம் கொண்ட போன்களின் விலை சுமார் ரூ.10,000 என இருக்கும். அதுவே 12ஜிபி ரேம் கொண்ட போன்கள் என்றால் அதன் விலை சுமார் ரூ.15,000 என இருக்கும். இப்போது சிப் தட்டுப்பாட்டால் இந்த விலை உயர்ந்துள்ளது.

# எக்ஸ்பிரஸ் ரெயிலில் கர்ப்பிணிக்கு குழந்தை பிறக்க உதவிய ஊழியர்

**ஆலப்புழா, ஏப்.8:**

கேரளாவின் ஆலப்புழா-தன்பாத் எக்ஸ்பிரஸ் ரெயில், அன்னாவரம் ரெயில் நிலையத்தில் இருந்து சென்ற சிறிது நேரத்தில், பி1 பெட்டியில் கர்ப்பிணி பெண் ஒருவர் குடும்பத்துடன் நேற்று பயணம் செய்தபோது, அவருக்கு திடீரென பிரசவ வலி ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, குடும்பத்தினர் உடனடியாக டிக்கெட் பரிசோதகரான பெண் அதிகாரி ஜோதியை அணுகினர்.



விஜயவாடா பிரிவுக்கான டிக்கெட் பரிசோதகரான ஜோதி, உடனடியாக, தொடர்புடைய அதிகாரியிடம் விவரம் தெரிவித்து, மருத்துவ உதவிக்கான வசதிகளை செய்துள்ளார்.

ரெயிலிலேயே அந்த பெண்ணுக்கு பிரசவம் நடந்தது. இதில், அந்த பெண்ணுக்கு பெண் குழந்தை பிறந்தது.

அவசர சூழலை கவனத்தில் கொண்டு இலமஞ்சிலி ரெயில் நிலையத்தில், ரெயில் சிறிது நேரம் நிறுத்தப்பட்டது. ரெயில்வே ஊழியர்களின் ஒருங்கிணைந்த முயற்சியால், கர்ப்பிணியின் தாயார் மற்றும் புதிதாக பிறந்த குழந்தை இருவரும் ஆம்புலன்ஸ் உதவியுடன் இலமஞ்சிலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்கள் இருவரும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளனர் என தகவல் தெரிவிக்கின்றது.

# “நாட்டை வழிநடத்த தன்னைத் தவிர வேறு யாருமில்லை என மோடி நினைக்கிறார்” - ராகுல் விமர்சனம்

**பாலக்காடு, ஏப்.8:**

“இந்தியாவை வழிநடத்த தன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று பிரதமர் மோடி நினைக்கிறார். அதேபோல், கேரளாவை வழிநடத்த தன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று பினராயி விஜயன் நினைக்கிறார்” என்று ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.



கேரள சட்டப்பேரவைத் தேர்தலைமுன்னிட்டுபாலக்காட்டில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய காங்கிரஸ் மூத்த தலைவரும்மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, “இந்தியாவை வழிநடத்த தன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று நினைக்கும் ஒரு நபர் டெல்லியில் இருக்கிறார். அதேபோல், கேரளாவை வழிநடத்த தன்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று நினைக்கும் ஒரு நபர் இங்கே இருக்கிறார். இவர்களின் ஆணவத்தைப் பாருங்கள். இவர்கள் இருவரும் ஒரே கூட்டணியில் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருக்கிறார்கள்.

இடதுஜனநாயகமுன்னணியின் பிரச்சார விளம்பரம் ஒன்றை நீங்கள் கவனித்தீர்களா? அதில் கேரள முதல்வரின் படத்தின் கீழே வேறு யார் என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. அவரைத் தவிர வேறு யாராலும் கேரளத்தை நிர்வகிக்க முடியாது என்பது போன்ற ஒரு தோற்றத்தை அந்த விளம்பரம் உருவாக்குகிறது.

பிரதமர் மோடி பேசும்போதெல்லாம் கடவுள் குறித்தும் இந்து மதம் குறித்தும் பேசுகிறார். ஆனால், கேரளாவின் சபரிமலை குறித்தோ அல்லது சபரிமலையில் திருடப்பட்ட தங்கம் குறித்தோ அவர் பேசுவதில்லை.

நான் பாஜகவை எதிர்த்துப் போராடுகிறேன். அமலாக்கத் துறையினரால் 55 மணி நேரம் விசாரிக்கப்பட்டேன். தற்போதும் கூட நான் பிணையில்தான் வெளியே உள்ளேன். எனது மக்களவை உறுப்பினர் பதவி ரத்து செய்யப்பட்டது. அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, பாஜகவின் ஊடகப் பிரிவு ஆகியவற்றின் முக்கிய இலக்காக நான் இருக்கிறேன் என்றார்.

# உயிரோடு இருக்கும்போதே இறுதிச் சடங்கு விருந்துக்கு அழைப்பு விடுத்த முதியவர்

**லக்னோ, ஏப்.8:**

உத்தர பிரதேச மாநிலம் ஆரையா பகுதியைச் சேர்ந்த முதியவர் ராகேஷ் யாதவ் (65). சொந்த நிலம் இல்லாத காரணத்தால் இவருக்கு திருமணம் ஆகவில்லை.

இவரது இரு சகோதரர்களும் இறந்து விட்டனர். இவருக்கு திருமணம் ஆகாத ஒரு சகோதரி மட்டும் உள்ளார். இவரது முன்னோர்கள் வசித்த வீட்டையும், உறவினர் ஒருவருக்கு வழங்கிவிட்டு, கூடாரத்தில் ராகேஷ்யாதவ் வசித்து வருகிறார்.

சொந்தம், பந்தம் இல்லாமல் சோகத்துடன் வாழ்ந்து வந்த ராகேஷ் யாதவுக்கு, தான் இறந்துவிட்டால், தனக்கு ஈமச் சடங்கு நிகழ்ச்சிகள் எல்லாம் நடத்துவதற்கு ஒருவரும் இல்லையே என்ற ஏக்கம் ஏற்பட்டது. அதனால் தான் உயிரோடு இருக்கும் போதே, இறப்புக்கு பின் அளிக்கப்படும் விருந்து நிகழ்ச்சியை (பந்தாரா) நடத்த விரும்பினார். இதற்காக அழைப்பிதழ் அச்சிட்டு 1,900 பேருக்கு அழைப்பு விடுத்தார். இதில் பலர் கலந்து கொண்டனர். ஈமக்கிரியை பூஜைக்குப் பின் அனைவருக்கும் விருந்து பரிமாறப்பட்டது.

இது குறித்து ராகேஷ் கூறுகையில், “எனக்கு உறவினர் யாரும் இல்லை. அதனால் நான் உயிரோடு இருக்கும்போதே பந்தாரா நடத்த விரும்பினேன்“ என்றார்.

# மகளின் விவாகரத்தை இனிப்புடன் கொண்டாடிய ஓய்வு பெற்ற நீதிபதி

**மீரட், ஏப்.8:**

இந்தியக் குடும்பங்களில் விவா கரத்து என்பது இன்றும் ஒரு சமூகக் களங்கமாகவே பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர், தனது மகளின் விவாகரத்தை மேளதாளங்கள் முழங்க இனிப்பு வழங்கி கொண்டாடி உள்ளார்.

உத்தர பிரதேச மாநிலம் மீரட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற நீதிபதியான ஞானேந்திர சர்மாவின் ஒரே மகள் பிரணிதா. இவருக்கும் இந்திய ராணுவத்தில் மேஜராகப் பணியாற்றும் கவுரவ் அக்னிஹோத்ரி என்பவருக்கும் கடந்த 2018ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு ஒரு மகன் உள்ள நிலையில், புகுந்த வீட்டில் பிரணிதா தொடர்ந்து கொடுமைப்படுத்தப்பட்டு வந்துள்ளார்.

இதனால், பிரணிதா விவாகரத்து கோரி குடும்ப நல நீதிமன்றத்தை அணுகினார். நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, நீதிமன்றம் அவருக்கு விவாகரத்து வழங்கி உத்தரவிட்டது. தீர்ப்பு வெளியான உடனே, நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே காத்திருந்த தந்தை ஞானேந்திர சர்மா மற்றும் உறவினர்கள், மேளதாளங்கள் முழங்க உற்சாகமாகக் கொண்டாடினர். அங்கிருந்தவர்களுக்கு லட்டுகள் வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்தக் கொண்டாட்டத்தின் போது பிரணிதாவின் குடும்பத்தினர் கருப்பு நிற டி-சர்ட் அணிந்திருந்தனர்.

அதில் பிரணிதாவின் புகைப்படத்துடன், “எனது மகளை நேசிக்கிறேன்; அவளே எனது இதயம், எனது ஆன்மா” என்ற வாசகங்கள் இடம்பெற்றிருந்தன. பிரணிதா அணிந்திருந்த உடையில் “எனது குடும்பம் எனது உயிர்” என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. இதுகுறித்து பிரணிதா கூறுகையில், “இதுபோன்ற கடினமான காலங்களில் தோள் கொடுக்கும் எனக்கு கிடைத்த போன்ற குடும்பம் போன்று அனைவருக்கும் கிடைக்க வேண்டுகிறேன்” என்றார்.

# இந்தியாவுக்கு முதலிடம் என்பதே எங்களது தாரக மந்திரம்: பாஜக 47-வது நிறுவன தினத்தில் பிரதமர் மோடி பெருமிதம்

**புதுடெல்லி, ஏப்.8:**

பாஜகவின் 47-வது நிறுவன நாளை முன்னிட்டு, நாடு முழுவதும் உள்ள கட்சித் தொண்டர்களுக்குப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று வாழ்த்துகளைத் தெரிவித்தார். மேலும், எதிலும் இந்தியாவுக்கே முதலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் பாஜக தொடர்ந்து இயங்கி வருவதாக அவர் பெருமிதத்துடன் கூறினார்.



இது தொடர்பாக ‘எக்ஸ்’ வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: பாஜக எப்போதும் தேச நலனுக்கே முன்னுரிமை அளித்து வருகிறது. சமூக சேவை செய்வதிலும், நாட்டை முன்னேற்றுவதிலும் எமது கட்சி முன்னணியில் நிற்கிறது. அடிமட்ட அளவில் தன்னலமற்ற சேவையைத் தொடர்ந்து வழங்கி வரும் லட்சக் கணக்கான தொண்டர்களின் உழைப்பால் கட்சியின் சித்தாந்தம் கடைக்கோடி மக்களையும் சென்றடைந்துள்ளது.

கடந்த பல தசாப்தங்களாகக் கட்சியின் வளர்ச்சிக்காகத் தியாகம் செய்த எண்ணற்ற தொண்டர்களின் தியாகத்தை இந்த நாளில் நினைவுகூர்கிறோம். மக்களின் நலனை மையமாகக் கொண்டே மத்திய அரசும், பாஜக ஆளும் மாநில அரசுகளும் செயல்படுகின்றன.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிய எங்களது பயணம் தொய்வில்லாமல் தொடரும். நமது கூட்டு உறுதிப்பாடு இந்தியாவை முன்னேற்றத்தின் புதிய உச்சத்துக்கு அழைத்துச் செல்லும். இவ்வாறு பிரதமர் பதிவிட்டுள்ளார்.

# ஹைதராபாத்தில் நக்சலைட் கமாண்டர் சரண்: ஆயுதங்களுடன் மேலும் 40 பேர் சரணடைந்தனர்

**ஹைதராபாத், ஏப்.8:**

தெலங்கானாவில் நக்சலைட் கமாண்டர் மல்லா தனது சகாக்கள் 40 பேருடன் ஹைதராபாத் போலீஸார் முன்னிலையில் நேற்று சரண் அடைந்தார்.



நக்சலைட்கள் இல்லா நாடாக இந்தியாவை உருவாக்க மத்திய அரசு கடந்த சில ஆண்டுகளாக தீவிர நடவடிக்கை மேற்கொண்டது. இதில் ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா, சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் நக்சலைட்கள் பலர் என்கவுன்ட்டர் செய்யப்பட்டனர். மேலும் அரசின் பொதுமன்னிப்பு மற்றும் மறுவாழ்வு கொள்கை காரணமாக நக்சலைட்கள் பலர் தாமாக முன்வந்து சரண் அடைந்தனர்.

தெலங்கானாவில் கடந்த ஜனவரி 2-ம் தேதி, கொரில்லா பிரிவின் கமாண்டர் பர்ஸா தேவா என்கிற தேவண்ணா சரண் அடைந்தார். பிறகு கடந்த பிப்ரவரி 22ம் தேதி மத்திய நக்சலைட் இயக்க உறுப்பினர் திப்பிரி திருப்பதி என்கிற தேஜி (62), சீனியர் நக்சலைட் மல்லா ராஜி ரெட்டி உட்பட 20 பேர் சரண் அடைந்தனர். மேலும் 120 நக்சலைட்கள், தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி முன்னிலையில் கடந்த மார்ச் 7-ம் தேதி ஆயுதங்களுடன் சரண் அடைந்தனர்.

இந்நிலையில் நக்சலைட் கொரில்லா பிரிவின் முக்கிய நபராக செயல்பட்டு வந்த சோதி கேஷாலு என்கிற மல்லா நேற்று தனது சகாக்கள் 40 பேருடன் ஹைதராபாத்தில் போலீஸ் அதிகாரிகள் முன்னிலையில் சரண் அடைந்தனர். அப்போது ஏகே 47 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை இவர்கள் ஒப்படைத்தனர்.

# மாம்பழம் சின்னத்தை முடக்க கோரி மேல்முறையீடு செய்யலாம்: ராமதாஸுக்கு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தல்

**புதுடெல்லி, ஏப்.8:**

மாம்பழம் சின்னத்தை முடக்ககோரும் பாமக நிறுவனர் ராமதாஸின் மனுவை மூன்று நாள்களுக்குள் விசாரித்து தீர்ப்பு அளிக்க சிவில் நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதை தொடர்ந்து, பாமக நிறுவனரின் மனுவை விசாரித்த சென்னை பெருநகர சிவில் நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்து, தேர்தல் ஆணையத்தை நாட கடந்த 27-ம் தேதி அறிவுறுத்தியது.




இந்த உத்தரவை எதிர்த்த பாமக நிறுவனர் ராமதாஸின் சார்பில் தாக்கல் செய்த மேல்முறையீடு மனுவை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த், ஜோய்மால்யா, பக்சி அடங்கிய அமர்வு விசாரித்தது. பாமக நிறுவனர் ராமதாஸ் தரப்பில் மூத்த வழக்கறிஞர் விகாஸ் சிங் ஆஜராகி, சிவில் நீதி மன்றம் மாம்பழம் சின்னத்தை முடக்க மறுத்துவிட்டது, தேர்தல் ஆணையத்தை நாட அறிவுறுத்தியுள்ளது. தேர்தல் ஆணையம் ராமதாஸையோ, அன்புமணியையோ பாமகவின் தலைவராக அங்கீகரிக்கவில்லை என்பதை டெல்லி உயர் நீதிமன்ற தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்குவதற்கு முன் தீர்வு காண வேண்டும். தேர்தல் ஆணையம் நாளையே முடிவு எடுக்க வேண்டும் என்று வாதிட்டார்.

அன்புமணி தரப்பில் மூத்த வழக்கறிஞர்கள் முகுல் ரோஹ்தகி, மீனாட்சி அரோரா ஆகியோர் ஆஜராகி, மாம்பழம் சின்னத்தை முடக்கி பாமகவை அழிக்க முற்படுகிறார். மாம்பழம் சின்னம் பொதுசின்னம் இல்லை என்று சிவில் நீதிமன்றம் தெரிவித்துள்ளது என்று வாதிட்டனர். முன்னதாக தலைமை நீதிபதி,

எதிர்மனுதாரரான மகன் எப்படி வெற்றி பெறக்கூடாது என்று தந்தை நினைத்தால் அதை வாக்காளர்களிடம் சென்று தெரிவிக்க வேண்டும் என்றார். நீதிபதி ஜோய் மால்யா பக்சி, மனுதாரின் வாதம் அரசியல்ரீதியான அழிவை உருவாக்கும். வெற்றி பெற்றால் மாம்பழம் சின்னம் கிடைக்காமல் போகும் என்று தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களுக்கு பிறகு, சென்னை சிவில் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிய மனுவை மனுதாரர் தாக்கல் செய்ய வேண்டும். தேர்தல் அவசரத்தை கருத்தில் கொண்டு தாக்கல் செய்யப்படும் மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் விரைந்து விசாரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு மேல்முறையீட்டு மனுவை முடித்து வைத்தனர்.

# தேர்தலுக்கு முன் மீண்டும் ஒரு பஹல்காம் தாக்குதலா? - மம்தா பானர்ஜி சர்ச்சை பேச்சு



**புதுடெல்லி, ஏப்.8:**

மேற்கு வங்கத்தில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், “தேர்தலுக்கு முன்னதாக மீண்டும் ஒரு பஹல்காம் தாக்குதலை நடத்த பாஜக திட்டமிட்டுள்ளதா?” என முதல்வர் மம்தா பானர்ஜி கேள்வி எழுப்பியுள்ளது அரசியல் வட்டாரத்தில் பெரும் புயலை கிளப்பியுள்ளது. மம்தாவின் இந்த சர்ச்சைப் பேச்சுக்கு பாஜக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், நாடியா மாவட்டத்தில் உள்ள பெதுவாடஹரி பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் திரிணமூல் காங்கிரஸ் தலைவரும், மாநில முதல்வருமான மம்தா பானர்ஜி பேசியதாவது: பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் காஜா ஆசிப், கொல்கத்தாவைத் தாக்குவோம் என மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்த சூழ்நிலையில், கூச் பெஹார் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை தேர்தல் பிரச்சாரம் செய்த பிரதமர் நரேந்திர மோடி, ஏன் இந்த மிரட்டலுக்கு பதிலடி கொடுக்கவில்லை? இதன் பின்னணி என்ன? தேர்தலுக்கு முன்பாக மீண்டும் ஒரு பஹல்காம் தாக்குதலை நடத்த ஏதேனும் திட்டம் தீட்டப்பட்டுள்ளதா? மத்திய அரசு மேற்கு வங்க மக்களைக் குறிவைத்தால், அதனை நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம். இந்தியக் குடிமக்களாகிய நாங்கள் இதுபோன்ற மிரட்டல்களைச் சகிக்க மாட்டோம். நீங்கள் (பிரதமர்) ஏன் அமைதியாக இருக்கிறீர்கள்? உங்களுக்கு வெட்கமாக இல்லையா? நீங்கள் பதவி விலக வேண்டும்.

இவ்வாறு மம்தா பேசினார்.

# “கேரளாவில் எல்டிஎஃப், பாஜக இடையே ரகசிய ஒப்பந்தம்” - பிரியங்கா காந்தி குற்றச்சாட்டு

**கண்ணூர், ஏப்.8:**

கேரளாவில் எல்டிஎஃப் - பாரதிய ஜனதா கட்சி இடையே ஒருரகசிய ஒப்பந்தம் உள்ளதாக காங்கிரஸ் எம்.பி பிரியங்கா காந்தி குற்றம் சாட்டினார்.

கேரளாவின் பேராவூரில் நடந்த பிரச்சாரத்தில் உரையாற்றிய பிரியங்கா காந்தி, “கேரள சட்டப்பேரவை தேர்தலில் எல்டிஎஃப், பாஜக இடையே ஒரு ரகசிய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சபரிமலையில் மிகப் பெரிய அளவிலான தங்கம் திருட்டு நடந்திருப்பதை நாம் பார்த்தோம். ஆனால், அது குறித்துப் பிரதமரிடமிருந்து ஒரு வார்த்தைகூட வரவில்லை. கடந்த ஓராண்டுக்கும் மேலாக நான் வயநாடு தொகுதியின் மக்களவை உறுப்பினராக இருந்து வருகிறேன். எனவே, நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் நான் மிக நெருக்கமாகக் காண்கிறேன். உங்கள் பிள்ளைகளுக்குக் கல்வியை அளிப்பதற்காக நீங்கள் அனைவரும் எவ்வளவு கடுமையாகப் போராடி உழைக்கிறீர்கள் என்பதை என்னால் உணர முடிகிறது. ஆனால், கேரளத்தில் நல்ல கல்வி கற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இருப்பதில்லை. அப்படியே வேலை கிடைத்தாலும், அந்த வேலைகள் மாநிலத்துக்கு வெளியில்தான் அமைகின்றன” என்று குறிப்பிட்டார். இந்தக் கூட்டத்தில், இந்திரா காந்தி போல ஆடையணிந்து, கையில் ரோஜாவுடன் இருந்த சிறுமியை பிரியங்கா காந்தி மேடைக்கு அழைத்து, அவரின் செய்கையை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். இது அந்தப் பிரச்சார நிகழ்வில் ஒரு நெகிழ்ச்சியான தருணத்தை உருவாக்கியது.

2026 கேரள சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு ஏப்ரல் 9-ஆம் தேதியும், வாக்கு எண்ணிக்கை மே 4-ஆம் தேதியும் நடைபெறுகிறது.

# “கேரள முதல்வரின் சொந்த மாவட்டத்தில் கூட வளர்ச்சி இல்லை” - டி.கே.சிவகுமார் விமர்சனம்

**திருவனந்தபுரம், ஏப்.8:**

“கேரள முதல்வர் பினராயி விஜயனின் சொந்த மாவட்டத்தில் கூட எவ்வித முன்னேற்றமும் இல்லை” என்று கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவரும், கர்நாடக துணை முதல்வருமான டி.கே.சிவகுமார் விமர்சித்தார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய டி.கே. சிவகுமார், “எல்டிஎஃப் அரசு கேரளாவுக்கு என்னதான் வளர்ச்சித் திட்டங்களை செய்துள்ளது? கண்ணூர் என்பது முதல்வரின் சொந்த மாவட்டம். அங்குள்ள பல கட்சித் தொண்டர்களிடம் நான் பேசினேன். இந்த மாவட்டத்துக்கு ஏதேனும் சுற்றுலா மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் வந்துள்ளனவா என்று நான் அவர்களிடம் கேட்டேன். இந்த மாவட்டத்துக்காக எதுவும் செய்யப்படவில்லை என்று அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

முதல்வரின் சொந்த மாவட்டமே வளர்ச்சியடையாத நிலையில், ஒட்டுமொத்த மாநிலத்தின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை நான் உணர்ந்துகொண்டேன்” என்று கூறினார். இதற்கிடையில், கேரளாவின் பேராவூரில் பேசிய காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி, “நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் நான் மிக நெருக்கமாகக் காண்கிறேன். நான் சந்திக்கும் மக்கள் அனைவரும் நல்ல கல்வித் தகுதி பெற்றவர்கள்.

கேரளாவில் நன்கு படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் இருப்பதில்லை; அப்படியே வேலை கிடைத்தாலும், அந்த வேலைகள் மாநிலத்துக்கு வெளியேதான் உள்ளன. கேரளாவுக்குள் வேலை வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், மக்கள் இடம்பெயர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது” என்று கூறினார்.

# “தேசத்தை காக்க 1.4 கோடி ஈரானியர்கள் உயிர் தியாகம் செய்யத் தயார்” - ஈரான் அதிபர்

**தெஹ்ரான், ஏப்.8:**

தேசத்தைப் பாதுகாக்க ஒரு கோடியே 40 லட்சத்துக்கும் மேற்பட்ட ஈரானியர்களும் உயிர்த் தியாகம் செய்யவும் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளனர் என்று அந்நாட்டின் அதிபர் மசூத் பெசஷ்கியான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “ஈரானைப் பாதுகாக்க தங்கள் உயிரையும் தியாகம் செய்ய தயாராக இருப்பதாக இந்த கணம் வரை 1.4 கோடிக்கும் அதிகமான பெருமைமிக்க ஈரானியர்கள் பதிவு செய்துள்ளனர். நானும் ஈரானுக்காக உயிர்த் தியாகம் செய்ய எந்தக் காலத்திலும் தயாராக இருக்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, போரை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கில் ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பது உட்பட 15 அம்ச திட்டங்களை கடந்த மார்ச் 26-ம் தேதி ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் முன்வைத்தார். இந்த 15 அம்ச திட்டங்களை ஏற்று ஒப்பந்தம் மேற்கொள்ள ஈரானுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை ஈரான் நிராகரித்த நிலையில், நேற்று வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய டொனால்டு ட்ரம்ப், “ஈரானுக்கான காலக்கெடு அமெரிக்க நேரப்படி இன்று (செவ்வாய்க்கிழமை) இரவு 8:00 மணிக்குள் முடிவடைகிறது. என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.

அதற்குப் பிறகு, அவர்களுக்குப் பாலங்கள் ஏதும் இருக்காது. மின் நிலையங்கள் ஏதும் இருக்காது. கற்காலம் போன்ற நிலைதான் இருக்கும். முழு நாடும் ஒரு இரவில் அழிக்கப்படக்கூடும். அந்த இரவு நாளைய இரவாகவும் இருக்கக்கூடும்” என்று எச்சரித்திருந்தார்.

ட்ரம்ப்பின் இந்த அறிவிப்பை அடுத்து, அமெரிக்காவின் தாக்குதல் முயற்சிகளை தடுக்கும் ஒரு குறியீட்டு நிகழ்வாக மின் நிலையங்களைச் சுற்றி மனித சங்கிலி அமைக்குமாறு அந்நாட்டின் விளையாட்டு வீரர்கள் மற்றும் கலைஞர்களுக்கு ஈரானின் துணை விளையாட்டுத் துறை அமைச்சர் அலிரேசா ரஹிமி கோரிக்கை விடுத்திருந்தார்.

“ஈரான் நேரப்படி இன்று பிற்பகல் 2 மணிக்கு அனைத்து இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் மின் நிலையங்களுக்கு அருகில் கூடுமாறு கோருகிறேன். அவை நமது செல்வங்கள்; நமது உடைமைகள்” என அலிரேசா ரஹிமி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப் படை மற்றும் ஈரான் ராணுவத்துக்கு இடையே கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் போர் நடைபெற்று வருகிறது. இதில் ஈரானில் இதுவரை 2,100-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்க ராணுவ தரப்பில் 13 வீரர்கள் உயிரிழந்து உள்ளனர். சுமார் 700 அமெரிக்க வீரர்கள் காயமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரேலில் 24 பேர் உயிரிழந்துள்ளனர். 7,000-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மேற்கு ஆசியாவில் நீடிக்கும் போரால் உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், எரிவாயுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று ஒட்டுமொத்த உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## நாசாவின் ‘ஆர்டெமிஸ் 2’ புதிய மைல்கல்! 42 நிமிஷங்கள் தொடர்பை இழந்ததால் பரபரப்பு!



**வாஷிங்டன், ஏப்.8:**

சுமார் 50 ஆண்டுகளுக்கு பிறகு, நாசாவின் ஆர்டெமிஸ் 2 திட்டத்தின் மூலம் நிலவுக்கு அனுப்பப்பட்ட விண்வெளி வீரர்கள், பூமியிலிருந்து அதிக தொலைவு சென்று சாதனை படைத்துள்ளனர்.

நாசாவின் கட்டுப்பாட்டு மையத்துடனான ஓரியன் விண்கலத்தின் தொடர்பு இந்திய நேரப்படி இன்று அதிகாலை சுமார் 42 நிமிஷங்கள் துண்டிக்கப்பட்டதால் அனைவரும் பதற்றமடைந்தனர். அதிகாலை 4.13 மணியளவில் நிலவுக்கு மிக நெருக்கமாக அதன் பின்புறத்தில் விண்கலம் பயணித்த போது, நாசாவுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. நாசா விஞ்ஞானிகள் அனைவரும் பதற்றமடைந்த நிலையில், விண்வெளி வீரர்களுடனான தொடர்பை மீண்டும் ஏற்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டனர். இந்த நிலையில், மீண்டும் விண்கலத்துடனான தொடர்பு அதிகாலை 4.55 மணியளவில் கிடைத்துள்ளது. இடைப்பட்ட நேரமான அதிகாலை 4.35 மணியளவில்தான் இதுவரை இல்லாத மிக அதிக தொலைவான 4,06,771 கி.மீ. பதிவாகியுள்ளது.

இதனிடையே, நிலவுக்கு மிக அருகில் பறந்து கொண்டிருக்கும் விண்வெளி வீரர்களுடன் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கலந்துரையாடி, அவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

ஓரியன் விண்கலம் மீண்டும் நிலவின் ஈர்ப்பு விசையால் பூமியை நோக்கித் தள்ளப்பட்டு, ஏப்ரல் 11 ஆம் தேதி பசிபிக் கடலை வந்துசேரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## ஜெர்மனியில் ராணுவத்தைப் பலப்படுத்த இளைஞர்களுக்குப் புதிய கட்டுப்பாடு!



ஜெர்மனியில் ராணுவச் சேவையில் ஆள்பலத்தை அதிகரிப்பதற்கான புதிய சட்டத் திருத்தத்தால், அந்நாட்டின் 17 முதல் 45 வயதுக்குள்பட்ட ஆண்கள் 3 மாதங்களுக்கும் மேல் வெளிநாடுகளில் தங்குவதற்கு முன் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான ஜெர்மனியில், கோடிக்கணக்கான ஆண்களைப் பாதிக்கும் இந்த விதிமுறை அண்மையில் உள்ளூர் நாளிதழ் வெளியிட்ட செய்தி வாயிலாக வெளிச்சத்துக்கு வந்து, பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போது ஜெர்மனியில் ராணுவச் சேவை என்பது தன்னார்வ அடிப்படையிலேயே உள்ளது. இருப்பினும், ரஷியாவுடனான அதிகரித்து வரும் போர்பதற்றம் மற்றும் ‘நேட்டோ’ அமைப்பின் இலக்குகளை எட்டும் நோக்கில், தனது பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கையை 2035-க்குள் 2.6 லட்சமாக உயர்த்த அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. இந்நிலையில், இப்புதிய சட்டத்தால் தேவையற்ற நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படுவதாக எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ள. அவசரக் காலங்களில் வெளிநாடுகளில் தங்கியிருப்பவர்கள் குறித்த துல்லியமான தகவல்களைத் தெரிந்திருக்கவே இந்தத் தரவுப் பதிவு முறை அவசியம் என்று ஜெர்மனி பாதுகாப்பு அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து மேலும் பேசிய பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர், ‘தேவையற்ற நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்க்கவும், விலக்கு அளிக்கப்பட வேண்டிய பிரிவினருக்கு உரிய விதிமுறைகளை வகுக்கவும் அமைச்சகம் தற்போது தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது’ எனத் தெரிவித்துள்ளார்.

‘பாதுகாப்புக்காக அமெரிக்காவை மட்டும் சார்ந்து இருக்காமல், சுயபலத்தை விரைவாகப் பெருக்கிக் கொள்ள வேண்டும்’ என ஜெர்மனி பிரதமர் ஃப்ரைட்ரிச் மெர்ஸ் ஏற்கெனவே ராணுவத் தளபதிகளிடம் வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தீவிர சிகிச்சையில் ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி?



**லண்டன், ஏப்.8:**

ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி, ஈரானின் கோம் நகரில் சுயநினைவற்ற நிலையில் மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார் என ஒரு உளவுத்துறை தகவலை மேற்கோள் காட்டி டைம்ஸ் யுகே செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது.

டைம்ஸ் யுகேவின் செய்தியின்படி, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல், வளைகுடா நட்பு நாடுகளுடன் பகிர்ந்து கொண்ட உளவுத்துறை தகவல்களின் அடிப்படையில், மொஜ்தபா காமேனி சுயநினைவற்ற நிலையில் இருப்பதாகவும், அவருக்கு கோம் நகரில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உச்ச தலைவர் மொஜ்தபா காமேனியின் இருப்பிடத்தை முதன்முறையாக வெளிப்படுத்தும் அந்த உளவுக் குறிப்பை தாங்கள் அறிந்ததாகவும் டைம்ஸ் யுகே குறிப்பிட்டுள்ளது. மேலும், “ஈரான் ஆட்சியின் எந்தவொரு முடிவெடுக்கும் செயலிலும் அவரால் பங்கேற்க இயலாது” என டைம்ஸ் யுகே செய்தி வெளியிட்டது.

மேற்கு ஆசியாவில் மோதல் வெடித்ததிலிருந்து, மொஜ்தபா காமேனி எந்தவொரு பொதுவெளியிலும் தோன்றவில்லை. அவர் கூறியதாகக் கூறப்படும் செய்திகளை மட்டுமே ஈரான் அரசு ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. இதற்கிடையில், அயத்துல்லா காமேனியின் உடல் கோமில் அடக்கம் செய்யத் தயாராகி வருவதாக ‘தி டைம்ஸ்’ பத்திரிகையின் செய்தி குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை இரவு 8:00 மணிக்குள் ஒப்பந்தத்தை எட்டுமாறு ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளார். வெள்ளை மாளிகையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், “அவர்களுக்கு நாளை வரை அவகாசம் உள்ளது. இப்போது என்ன நடக்கிறது என்று பார்ப்போம். அதற்குப் பிறகு, அவர்களுக்குப் பாலங்கள் ஏதும் இருக்காது. மின் நிலையங்கள் ஏதும் இருக்காது. கற்காலம் போன்ற நிலைதான் இருக்கும்,” என்று எச்சரித்தார்.

# வளைகுடா நாடுகளுக்கு கதிரியக்க பாதிப்பு ஏற்படும்: சர்வதேச அணுசக்தி முகமை நிபுணர்கள் கவலை

**தெஹ்ரான், ஏப்.8:**

ஈரான் அணு மின் நிலையம் தகர்க்கப்பட்டால், வளைகுடா நாடுகளில் கதிரியக்க பாதிப்பு ஏற்படும் என சர்வதேச அணுசக்தி முகமை நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஈரான் மீது அமெரிக்க மற்றும் இஸ்ரேல் கூட்டுப்படை தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானின் புஷர் அணுமின் நிலையம் அருகே கடந்த சனிக்கிழமை குண்டு வீசப்பட்டது. இது அணு மின் நிலையத்திலிருந்து 350 மீட்டர் தொலைவில் விழுந்து வெடித்தது. இங்கு நடத்தப்படும் தொடர் தாக்குதலால், ஈரான் தலைநகர் டெஹ்ரான் கதிரியக்க பாதிப்புக்கு ஆளாவதைவிட வளைகுடா நாடுகள்தான் அதிக பாதிப்புக்கு ஆளாகும் என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து சர்வதேச அணுசக்தி முகமை (ஐஏஇஏ) நிபுணர்கள் மேலும் கூறியதாவது: புஷர் அணு மின் நிலையம் ஈரானின் தென் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு 1,000 மெகா வாட் திறனுள்ள அணு உலை உள்ளது. தற்போது செயல்பாட்டில் உள்ள அணு உலையில், ரஷ்யாவிடம் இருந்து வாங்கப்படும் 4.5% செறிவூட்டப்பட்ட யுரேனியம் பயன்படுத்தப்படுகிறது. புஷர் அணு மின் நிலையத்தில் 282 டன்கள் கதிரியக்க பொருட்கள் உள்ளன.

இவற்றில் 72 டன்கள் அணு உலையில் எரிபொருளாக பயன்படுத்தப்படும் யுரேனியம். ஏற்கெனவே எரியூட்டப்பட்ட யுரேனியம் கழிவுகள் 210 டன் அளவுக்கு சேமிப்பு கிடங்கில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள ஆபத்தான சீசியம்-137 ஐசோடோப், செர்னோபில் அணு உலை விபத்தில் வெளிப்படுத்தியதைவிட 10 மடங்குக்கு மேல் கதிரியக்க பாதிப்பை ஏற்படுத்தும்.

புஷர் அணு மின் நிலையம் தாக்கப்பட்டு கதிர்வீச்சு பாதிப்பு ஏற்பட்டால், வளைகுடா நாடுகளின் மண் மற்றும் கடல்நீர் கதிரியக்க பாதிப்புக்கு உட்படும். இது பல ஆண்டுகள் நீடிக்கும். ஏராளமான மக்கள் உயிரிழப்பர். புற்றுநோய் பாதிப்பு அதிகரிக்கும்.

இதுதவிர ஈரானில் நடான்ஸ் மற்றும் பர்தோ என்ற 2 யுரேனியம் செறிவூட்டல் மையம் உள்ளது. இஸ்பஹான் பகுதியிலும் யுரேனியம் மையம் உள்ளது. அராக் பகுதியில் அணுசக்தி மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் 40 மெகாவாட் கடின நீர் உலை உள்ளது. இங்கு கதிர்வீச்சு பாதிப்பு ஏற்பட்டாலும் பெரும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

## மேற்கு ஆசியப் போர் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களுக்கு உணவு

**துபாய், ஏப்.8:**

மருந்து கிடைப்பதில் சிக்கல் மேற்கு ஆசியப் போர் காரணமாக ஹோர்முஸ் நீரிணை போன்ற முக்கிய கடல் வழிப்பாதை கள் மூடப்பட்டுள்ளதாலும், துபாய், தோஹா மற்றும் அபுதாபி போன்ற முக்கிய மையங்களில் இருந்து சரக்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டிருப்ப தாலும் உலகளாவிய நெருக்கடி தீவிர மடைந்து வருகிறது. எரிபொருள் மற்றும் காப்பீட்டு கட்டணங்கள் அதிகரித்துள்ளதால், போக்குவரத்துச் செலவுகள் உயர்ந்துள்ளன. மனிதாபிமான உதவி அமைப்புகளின் விநியோகச் சங்கிலியையும் சீர்குலைந் துள்ளது. இதனால் உதவி அமைப்புகள் அதிக செலவு பிடிக்கும் மற்றும் அதிக நேரம் எடுக்கும் மாற்று வழிகளைப் பயன் படுத்த வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளன. உலக உணவுத் திட்டப் (WFP) பிரிவு ஆயிரக்கணக்கான மெட்ரிக் டன் உணவுப் பொருட்கள் வழியிலேயே தேங்கிக் கிடப்பதாகத் தெரிவித்துள்ளது. அதே போல சர்வதேச மீட்புக் குழு (IRC), போரி னால் பாதிக்கப்பட்ட சூடானுக்கு அனுப்ப வேண்டிய 1,30,000 அமெரிக்க டாலர் மதிப்பிலான மருந்துகள் துபாயிலும், சோமாலியா குழந்தைகளின் ஊட்டச் சத்து உணவுகள் இந்தியாவிலும் முடங்கிக் கிடப்பதாகக் கூறியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் கருத்துப் படி, கொரோனா பெருந்தொற்றுக்கு பிறகு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய விநியோகச் சங்கிலி சீர்குலைவு இதுவாகும். இத னால் கப்பல் போக்குவரத்து செலவுகள் 20% வரை அதிகரித்துள்ளன என செய்தி கள் வெளியாகியுள்ளன.

## வங்கதேசத்தில் தீவிர தட்டம்மை பாதிப்பு: 10 லட்சம் குழந்தைகளுக்கு தடுப்பூசி முகாம்

அண்டை நாடான வங்கதேசத்தில் தட்டம்மை நோய் பாதிப்பு அதிவேகமாகப் பரவி வரும் நிலையில், சுமார் 10 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகளுக்குத் தடுப்பூசி செலுத்தும் அவசரக் கால திட்டத்தை அந்நாட்டு அரசு தொடங்கியுள்ளது.

நாடு முழுவதும் 7,500-க்கும் மேற்பட்டோர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 17 உயிரிழப்புகள் அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், சந்தேகத்துக்குரிய வகையில் மேலும் 113 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

உலக சுகாதார அமைப்பு, யுனிசெஃப் ஆகிய அமைப்புகளுடன் சேர்ந்து, அதிக பாதிப்புள்ள 18 மாவட்டங்களில் முதல்கட்டமாக இத்தடுப்பூசி முகாம் தொடங்கப்பட்டுள்ளது. இதில் வழக்கமான நோய்த் தடுப்பு முறைகளைத் தவறிய 6 மாதங்கள் முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## எரிபொருள் நெருக்கடி! பாகிஸ்தானில் இரவு நேரப் பொதுமுடக்கம் அமல்!



எரிபொருள் நெருக்கடியை சமாளிக்கும் வகையில் பாகிஸ்தானில் இன்று முதல் இரவு நேரப் பொதுமுடக்கம் அமல்படுத்தப்படும் என்று அந்நாட்டு பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

”பெட்ரோலியப் பொருட்கள், எரிசக்தி பொருள்களை சேமிக்கும் வகையில், பஞ்சாப், கைஃபர் பக்துன்க்வா, பலுசிஸ்தான், இஸ்லாமாபாத், கில்கித்-பால்டிஸ்தான் மற்றும் ஆசாத் ஜம்மு காஷ்மீர் ஆகிய பகுதிகளில் உள்ள சந்தைகள், கடைவீதிகள் மற்றும் வணிக வளாகங்களை இரவு 8 மணிக்கு மூடப்படும்.

கைபர் பக்துன்க்வா மாகாணத்தின் கோட்டத் தலைமையிடங்களில் அமைந்துள்ள சந்தைகள், கடைவீதிகள் மற்றும் வணிக வளாகங்கள் மட்டும் இரவு 9 மணி வரை திறந்திருக்க அனுமதிக்கப்படும். அன்றாடப் பயன்பாட்டுப் பொருள்களை விற்கும் கடைகள், பல்பொருள் அங்காடிகள் மற்றும் அனைத்து வகையான வணிக வளாகங்களும் இரவு 8 மணிக்கே மூடப்படும்.

டீக்கடைகள், உணவகங்கள், திருமண மண்டபங்கள் போன்றவை இரவு 10 மணிக்கு மூடப்பட வேண்டும். மருந்துக் கடைகளுக்கு எவ்வித கட்டுப்பாடும் இல்லை.

இந்த கட்டுப்பாடு (ஏப்ரல் 7) இரவு முதல் மறுஅறிவிப்பு வரும்வரை அமலில் இருக்கும்.” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானியர்கள் அடுத்த 12 மணி நேரத்துக்கு ரயில்களை பயன்படுத்த வேண்டாம்: இஸ்ரேல் எச்சரிக்கை

**டெல் அவிவ், ஏப்.8:**



“ஈரான் மக்கள் ரயில்களையும், ரயில் பாதைகளையும் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும்” என்று இஸ்ரேல் ராணுவம் எச்சரித்துள்ளது.

இஸ்ரேல் ராணுவம் இன்று தனது எக்ஸ் தளத்தில் பாரசீக மொழியில் வெளியிட்ட அறிவிப்பில், “உங்கள் பாதுகாப்பிற்காக, இப்போதிலிருந்து ஈரான் நேரப்படி இரவு 9 மணி (இந்திய நேரப்படி இரவு 11 மணி) வரை, ஈரான் முழுவதும் ரயில்களைப் பயன்படுத்துவதையும் பயணம் செய்வதையும் தவிர்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். ரயில்களிலும், ரயில் பாதைகளுக்கு அருகிலும் நீங்கள் இருப்பது உங்கள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பில் குறிப்பிட்ட பிராந்தியங்களோ அல்லது ரயில் பாதைகளோ குறிப்பிடப்படவில்லை. எனவே, ஈரான் முழுவதும் மக்களிடம் அச்சம் எழுந்துள்ளது. இருப்பினும், இந்த எச்சரிக்கை குறித்து ஈரான் அதிகாரிகளிடமிருந்து உடனடியாக எந்த பதிலும் வரவில்லை.

பிப்ரவரி 28 அன்று முதல் இஸ்ரேல் அமெரிக்காவுடன் இணைந்து ஈரானை தாக்கி போரில் ஈடுபட்டு வருகிறது. ஈரானும் பதிலுக்கு, இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும், உலகின் கச்சா எண்ணெய் போக்குவரத்தில் முக்கிய இடம் வகிக்கும் ஹார்முஸ் ஜலசந்தியையும் ஈரான் மூடியுள்ளதால், நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருகிறது.

முன்னதாக, செவ்வாய்க்கிழமை இரவு 8:00 மணிக்குள் தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தத்தை எட்டுமாறு ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளார். வெள்ளை மாளிகையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், “அவர்களுக்கு நாளை வரை அவகாசம் உள்ளது. இப்போது என்ன நடக்கிறது என்று பார்ப்போம். அதற்குப் பிறகு, அவர்களுக்குப் பாலங்கள் ஏதும் இருக்காது. மின் நிலையங்கள் ஏதும் இருக்காது. கற்காலம் போன்ற நிலைதான் இருக்கும்,” என்று எச்சரித்தார். இந்தச் சூழலில், இஸ்ரேல் இதுபோன்ற எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது பதற்றத்தை அதிகமாக்கியுள்ளது.

# ஸ்டாலின், இபிஎஸ், சீமான், விஜய் மனுக்கள் ஏற்பு






# ஏர் இந்தியா டிக்கெட் விலை ரூ.25 ஆயிரம் வரை உயரும் வாய்ப்பு!

## தமிழக தேர்தலை நடத்த ரூ.1,302 கோடி ஒதுக்கீடு: அர்ச்சனா பட்நாயக் தகவல்



## கல்பாக்கம் அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு

## தமிழ்ப் புத்தாண்டு, விஷு: சிறப்பு ரயில்கள் இயக்கம்!

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 08.04.2026 புதன்கிழமை இலவச இ-பேப்பர்